# தீபம்

www.deepam.lk

வார இதழ் • தீபம் 7 • 06.09.2015

விலை 20 ரூபா


# சர்வதேச விசாரணை சாத்தியமா?

பாராளுமன்ற தேர்தலின் பின்னர் சத்தமில்லாமல் கொழும்பிற்கு வந்த அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால் குண்டொன்றை வெடிக்க வைத்துவிட்டு சென்றிருக்கிறார். கடந்த மூன்று வருடமாக ஜெனீவாவில் மகிந்தவிற்கு சுருக்கு கயிறு வீசிக்கொண்டிருந்த அமெரிக்கா, இம்முறை இலங்கைக்கு சாதகமான பிரேரணையொன்றை கொண்டு வரப்போவதாக அறிவித்துள்ளது.

யுத்தத்தின் இறுதிநாட்களில் தமிழ்மக்களின் மீது இழைக்கப்பட்டவை சாதாரண குற்றங்களல்ல. மனிதகுலம் நடுங்கிப் போகும்விதமானவை அவை. உலகம் இதனை சாதாரணமாக எடுத்துக் கொண்டுவிட்டதா என்ற கொதிப்பு பரவலாக எழுந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இம்முறை வெளியாகும் ஐ.நா விசாரணையறிக்கையை தொடர்ந்து, இலங்கைக்கு ஏதாவது நெருக்கடி வருமென பார்த்திருந்தவர்கள் எல்லோரும் சோர்வாக உட்கார்ந்து விட்டனர்.

தமிழ்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகள் மூன்றும் இணைந்து, சர்வதேச விசாரணை தேவையென மனிதஉரிமைகள் ஆணையாளர் ஹுசைனிற்கு கடிதம் எழுதியுள்ளனர். மறுபக்கம் தமிழ்தேசிய மக்கள் முன்னணி ஆர்ப்பாட்டங்களை பரவலாக நடத்த திட்டமிடுகிறது. ஏற்கனவே யாழில் கையெழுத்துப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. வவுனியாவில் தமிழ்தேசிய கூட்டமைப்பு ஏற்கனவே ஆரம்பித்து விட்டது.

சர்வதேச விசாரணையை வலியுறுத்துபவர்களின் பிரதான வாதம், நண்டிற்கு நரி நீதி சொல்வதா என்பதுதான். நியாயமாக பார்த்தால் அதில் உண்மையுள்ளதுதான். 1956ம் ஆண்டு கலவரத்தில் தொடங்கி, வன்னி இறுதி யுத்தம் வரையான காலத்தில் அரச, இராணுவ பாதிப்பிற்குள்ளான எத்தனை பேர் நீதி பெற்றிருக்கிறார்கள் என்றால், யாரிடமும் பதிலிருக்காது. செம்மணி மாதிரி ஓரிரண்டு விதிவிலக்குகளை வைத்து எதையும் எடைபோட முடியாது. வெளிப்படையாக சொன்னால், இந்த நீதியமைப்பில் தமிழர்கள் கூறும் குற்றங்கள் தொடர்பில் விசாரிக்க முடியுமென்று நம்ப இடமில்லை.

இப்படியான நிலையித்தான் சர்வதேச விசாரணை விவகாரம் வந்தது. மகிந்தவை வீட்டிற்கனுப்ப அமெரிக்கா எடுத்த அஸ்திரத்தின் அலுவல் முடிந்து விட்டது. 'ரெண்டுபேரும் அடிபிடிப்படாமல் இருங்கப்பா' என அமெரிக்கா சொல்லிவிட்டு போகப் போகிறது.


இதுதான் பல தரப்பையும் கொதிப்படைய வைத்திருக்கிறது. காணாமல் போனவர்களின் உறவினர்கள், பல்கலைகழக சமூகம் போன்றவர்கள் விரைவில் இதற்கெதிராக போராட்டங்கள் நடத்துவார்கள் என எதிர்பார்க்கலாம்.

ஆனால் இதில் உள்ள முக்கியமான விடயமே, சர்வதேச விசாரணை சாத்தியமா, அதனால் மட்டுமே தமிழர்கள் தீர்வை பெற முடியுமா என்பதே.

நமது ஊர்களில் உள்ள குற்றம்செய்தவர்களை பொலிசார் பிடித்துக் கொண்டு போய் நீதிமன்றத்தில் நிறுத்தும் காரியமல்ல சர்வதேச விசாரணையென்பது. இது எல்லோருக்கும் தெரிந்ததுதான். அப்படி பார்த்தால் எத்தனையோ தலைவர்கள் சர்வதேச விசாரணையை சந்தித்திருக்க வேண்டும். ஆனால் வல்லரசுகளின் நிகழ்ச்சிநிரலுக்குள் அவர்களும் இணைந்திருந்ததால் தப்பித்து கொண்டார்கள். இப்படியான சர்வதேச விசாரணையை நம்பி, அல்லது அதில் மட்டும் அதிக நம்பிக்கை வைத்துக் கொண்டு தமிழர்கள் அரசியல் செய்வதைப் போன்ற தோற்றம்தான் அண்மையில் அதிகமாக தென்படுகிறது. நோக்கங்களினடைப்படையிலான இப்படியான சர்வதேச பொறிமுறைகளில் தமிழர்கள் அதிக நம்பிக்கை வைப்பதே ஆபத்தானதுதான்.

இதை சொல்வது, யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களின் வலிகளை உதாசீனம் செய்வதல்ல. யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் நீதி பெற வேண்டுமென்பதில் இரண்டாவது

தொடர்ச்சி 7-ம் பக்கம்





உள்ளே...



சீசன் போராளிகள் 3


என்று முடியுமிந்த அகதியின் வாழ்வு? 4


நல்லூர் ஸ்பெஷல் 5


கழிவுகளால் ஒளிரும் வீடு 11

# நல்லிணக்க செயற்பாடுகள்

பெரும் சர்ச்சையின் பின்னர் எதிர்க்கட்சி தலைவர் விவகாரம் முடிவிற்கு வந்துள்ளது. தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இலங்கையின் 8வது பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவராகியுள்ளார். இது இலகுவில் கிடைத்த விடயமல்ல. பேரினவாத குரல்களையும், மனங்களையும் அதிகாரத்தின் மூலம் பணியவைத்து பெற்றுக் கொண்ட ஒன்று.

தேர்தல்களில் வெற்றிபெறும் கட்சி அரசமைப்பதும், அதற்கடுத்த ஆசனங்களை கொண்ட கட்சி எதிர்க்கட்சியாவதும்தான் வழக்கமான ஜனநாயக நடைமுறை. இதில் மண்டையை குழப்பிக் கொள்ள எந்த கம்பசூத்திரமுமில்லை. நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான கூட்டணி வெற்றிபெற்றது. பொதுஜன ஐக்கிய முன்னணி தோல்வி கண்டது.

தேர்தலின் பின்னர் தேசிய அரசு அமையுமென நல்லாட்சி கூட்டணி ஏற்கனவெ அறிவித்திருந்ததைபோல, மைத்திரி தலைமையிலான சுதந்திரக்கட்சியுடன் அமைச்சுப் பொறுப்பை ஐக்கிய தேசியக்கட்சி பகிர்ந்து கொண்டுள்ளது. இரண்டாவது பெரிய கட்சியான சுதந்திரக்கட்சி ஆட்சியில் பங்காளியாகிவிட்டது. எனவே, மூன்றாவது ஆசனப் பெரும்பான்மையை கொண்ட தமிழரசுக்கட்சிக்கே எதிர்க்கட்சி தலைவர் பதவி சென்று சேர வேண்டும். பெரும் இழுபறியின் பின்னர் இந்த பதவி இப்பொழுது சம்பந்தனிடம் சென்று சேர்ந்துள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் உள்ள மகிந்த ஆதரவு அணியில் 50 உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கடிதத்தை சமர்ப்பித்து, குமார வெல்கமவிற்கு எதிர்க்கட்சி தலைவர் பதவியை கோரினார்கள். எனினும், அவர்களின் கூட்டணி தேர்தலில் பதிவு செய்யப்பட்டு களமிறங்கிய கூட்டணியல்லவென்பதால் அப்படி கோருவதற்கு எந்த முகாந்தரமுமில்லை. அதனை அவர்களும் தெரிந்து கொண்டிருப்பார்கள். இருந்தாலும், இறுதிவரை எதிர்க்கட்சி தலைவர் பதவியை கோரினார்கள்.

அதனை அடைவதற்கு இறுதி அஸ்திரமாக இனவாதத்தையும் கையிலெடுத்திருந்தார்கள். இலங்கைக்குள் தனியாக இராச்சியமொன்றை ஸ்தாபிக்க முனைவர்களிற்கு கொடுக்கப்பட்ட அங்கீகாரம், இலங்கை தொடர்பில் சர்வதேசத்தில் பிழையான அபிப்பிராயங்களை ஏற்படுத்துவார்கள் போன்ற பல்வேறு கதைகளை அவிழ்த்து விட்டார்கள். கடந்த தேர்தலில் இனவாதத்தை பிடித்துக் கொண்டு கரைசேர எத்தனித்து, இன்று அரசியலில் திக்குத்தெரியாமல் தவிக்கும் அணிக்கு இனவாதம் இம்முறையும் கைகொடுக்கவில்லை.

அந்த அணி நேற்றுவரை இதற்கான முயற்சியை கைவிடவில்லை. இனியும் கைவிடும் என தோன்றவில்லை.

ஜனநாயக நெறிமுறைகளினடிப்படையில் சம்பந்தன் பெற்றிருக்க வேண்டிய இந்த எதிர்க்கட்சி தலைவர் பதவியை கடந்த 1ம் திகதியே பெற்றிருக்க வேண்டும். எனினும், இரண்டுநாள் கழித்துதான் அது நிகழ்ந்திருக்கிறது.

இந்த இழுபறி ஏன் நிகழ்ந்தது? தமிழர் என்ற காரணம் இதில் செலுத்திய செல்வாக்கை விட வேறு காரணங்கள் இருந்திருக்குமா? அப்படி நம்பத் தோன்றவில்லை.

எனினும், இந்த சவாலை ஜனாதிபதி வெற்றிகமாக கடந்துள்ளார். எதிர்க்கட்சி தலைவர் பதவியை கோரிய பொதுஜன ஐக்கிய முன்னணி அணியை மௌனமாக்குவதில் ஜனாதிபதியின் அதிகாரமும் குறிப்பிடத்தக்களவில் சொல்வாக்கு செலுத்திருக்கலாம். அதாவது தமிழரொருவரிற்கு ஜனநாயக முறைப்படி கிடைத்த பதவியை பெற்றுக்கொள்வற்கும் இப்படி இழுபறிப்பட வேண்டியுள்ளது. இந்த சமயத்தில் ஜனாதிபதியாக மைத்திரிபால தவிர்ந்த ஒருவர் இருந்திருந்தால் இன்னும் அதிக சிக்கல்களை சந்திக்க வேண்டியிருந்திருக்கலாம். தமிழர்கள் ஆட்சியாளர்களுடன் இன்னும் அதிக கசப்பை கொள்ளும் சந்தர்ப்பங்களும் நிகழ்ந்திருக்கலாம்.

எனினும், இனப்பிரச்சனை தீர்வில் முன்னோக்கிய அடிகளை வைத்துக் கொண்டிருப்பதாக நம்பப்படும் இலங்கைச்சூழலில், தமிழ்தேசிய கூட்டமைப்பிற்கு எதிர்க்கட்சி தலைவர் பதவியை வழங்கியதன் மூலம் இலங்கை தொடர்ச்சியாக ஜனநாயக அடிப்படையிலேயே செயற்படும் என்று மைத்திரி கூற எத்தனித்துள்ளார்.

தமிழர்களின் அரசியல்சூழலில் எதிர்க்கட்சி தலைவர் பதவியை பெற்றதால் எதையும் சாதித்து விட முடியும் என்பதில்லை. என்றாலும், இனநல்லிணக்க முயற்சிகள், நல்லெண்ணம் போன்றவை சிங்களதரப்பிலிருந்தும் வெளிப்படுகிறதா என்பதை பரீட்சித்து பார்க்க வாய்ப்பான களமாக இது அமைந்திருந்தது.

அலுவலகம்
தீபம்
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி
யாழ்ப்பாணம்: 0212216633 ஐக்கிய ராச்சியம் 00442034687086
மின்னஞ்சல்: info@deepamtv.tv

# சொன்னார்கள்



**ரணில் விக்கிரமசிங்க – பிரதமர்**

பாராளுமன்றத்தில் யாரும் குரங்குகள் போல செயற்பட முடியாது. முன்னைய பாராளுமன்றத்தை கொண்டு சென்றதைப் போல, இந்த பாராளுமன்றத்தையும் கொண்டு செல்ல அனுமதிக்க முடியாது.



**பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா – ஜனநாயக கட்சி**

முன்னாள் பாதுகாப்பு செயலர் கே.பியை கொஞ்சினார். ஏனென்றால் கே.பியிடமிருந்த கப்பல்கள், பணத்தின் மீது அவரிற்கிருந்த ஆசையே காரணம். இந்த அவசியத்திற்கமையவே சட்டமா அதிபரும் அவரை பாதுகாக்கிறார். கே.பி நாட்டிற்கு ஆபத்தான் காரியங்களை செய்யவில்லையென சொன்னால், சட்டமா அதிபரும் துரோகியாகவே கருதப்படுவார்.



**ஹாபிஸ் நசீர் அஹமட் – கிழக்கு மாகாண முதல்வர்**

இரா.சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவராக தேர்வு செய்யப்பட்டது இலங்கை அரசியலில் புதியதொரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. சம்பந்தனிற்கு கிடைத்த பதவியை முஸ்லீம் சமூகம் முழு மனதுடன் வரவேற்கிறது.



**இரா.சம்பந்தன் – எதிர்க்கட்சி தலைவர்**

திறமையான பல உறுப்பினர்கள் இந்த பாராளுமன்றத்தில் உள்ளனர். மத்தியில் அதிக அதிகாரங்கள், அமைச்சர்களை கொண்டிருப்பதை விட, நாட்டை நான்கு, ஐந்து பிராந்தியங்களாக பிரித்து, திறமையானவர்களை முதலமைச்சர்களாகவும், அமைச்சர்களாகவும் ஆக்கி, அவர்களிற்கு உச்ச அதிகாரங்கள் வழங்கி, மக்கள் சேவை செய்ய அனுமதியுங்கள்.



**சிவசக்தி ஆனந்தன் – தமிழ்தேசிய கூட்டமைப்பு**

சர்வதேச விசாரணை கோரியே தமிழ் மக்கள் வாக்களித்தனர். ஆனால் இன்று சிலர் சர்வதேச விசாரணை முடிந்து விட்டதாக கூறி மக்களை குழப்புகின்றனர். இது மனவேதனையை தருகிறது.



**சுரேஷ் பிரேமச்சந்திரன் – தமிழ்தேசிய கூட்டமைப்பு**

மனிதஉரிமைகள் ஆணையத்தின் தீர்மானத்திற்கமைவான அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. அறிக்கை வெளிவந்ததும், அதிலுள்ள விடயங்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாகவோ, சர்வதேச தீர்ப்பாயம் என்ற பொறிமுறையின் ஊடாகவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.




**டக்ளஸ் தேவானந்தா – ஈழமக்கள் ஜனநாயக கட்சி**

நாம் அரசுடன் இருந்தகாலத்தில் எம்மை தமிழ்தேசிய கூட்டமைப்பினர் தூற்றினார்கள். அவர்கள் இப்பொழுது எமது வழிமுறையை பின்பற்றி அரசுடன் இணைந்திருப்பதில் எமக்கு மகிழ்ச்சி. இதன்மூலம் வரலாறு எங்களை விடுதலை செய்திருக்கிறது.

# க்ளிக் பக்கம்

யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறியுள்ள முஸ்லீம் மக்களின் நிலைமையை எடுத்துக்காட்டுகிறது இந்தப்புகைப்படம். சோனகத்தெரு, பொம்மைவெளி பகுதிகளில் குடியேறியுள்ள மக்களின் அவலத்திற்கு ஒரு உதாரணம் இது. மீள்குடியேறியவர்களின் அடிப்படை வசதிகளே செய்து கொடுக்கப்படவில்லை. தற்போதைய கொடும் வெயிலென்றாலும், அடைமழையென்றாலும் இந்த ஏழை மூதாட்டிக்கு இந்த தகர கொட்டகைதான் தஞ்சம்.

**என்னைப் பற்றி:** நான் பாறுக் ஷிகான். அம்பாறை நற்பிட்டிமுனையை பிறப்பிடமாக கொண்டவன். யாழ் பல்கலைகழகத்திலும், ஊடகவளங்கள் பயிற்சிமையத்திலும் கற்கை நெறியை பூர்த்தி செய்த பின்னர், தற்போது யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளனாக கடமையாற்றுகிறேன். புகைப்படத்துறையின் தீவிர ஆர்வம் உள்ளது.



படப்பிடிப்பாளர்:
பாறுக் ஷிகான்
இடம்: பொம்மைவெளி





# சீசன் போராளிகள்

ஹிருத்திக் போஸ் நிஹாலே

கடந்த சில தினங்களாக சமூக வலைத்தளங்களிற்குள் நுழைவதற்கே அச்சமாக இருந்தது. இரவு பகலாக விழித்து சமூகவலைத் தளங்களில் போராடிக் கொண்டிருக்கும் இணையப்போராளிகள் தமது அறக்கத்திகளை 360 பாகைகளிலும் சுழற்றிக் கொண்டிருந்தார்கள். எக்குத்தப்பாக இதற்குள் நுழைந்தால் நிச்சயம் வெட்டு வாங்கத்தான் வேண்டுமென்பதால் திரும்பி வந்துவிட்டேன்.

நமது இணையப் போராளிகளை கொதிப்படைய வைத்து, அறக்கத்திகளை தூக்க காரணமாக அமைந்தது, அடுத்த ஜெனீவா அமர்வில் அமெரிக்கா இலங்கை சார்பான பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதென்ற அறிவித்தல் வெளியிட்டதே. இலங்கைக்கு விஜயம் செய்த தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களிற்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் நிஷா பிஷ்வால் கொழும்பில் வைத்து இந்த அறிவித்தலை வெளியிட்டார். அரசு, தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்த பின்னர், செய்தியாளர்களிடம் பேசும்போது இதனை அறிவித்திருந்தார்.

அந்த அறிவித்தல் வெளியான அடுத்தசிலநிமிடங்களில்இணையப் போராளிகள் போரில் குதித்து விட்டனர். அவரவர் வல்லமைக்கேற்ற விதத்தில் செயற்பட்டார்கள். இணையப்போராளிகளின் கத்தி வீச்சில் சிக்கியது பெருமளவில் தமிழ்தேசிய கூட்டமைப்பே. தமிழ்தேசிய கூட்டமைப்பு துரோகம் இழைத்து விட்டதென்பதே அவர்களின் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பாக இருந்தது.

ஜெனீவா அமர்வுகளில்இலங்கை தொடர்பாக கொண்டு வரப்பட்ட பிரேரணைகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆளுமை செலுத்தியிருந்ததா, தற்போது பிரேரணையில் ஏற்படும் வடிவமாற்றத்தில் செல்வாக்கு செலுத்தும் வல்லமையை கொண்டுள்ளதா என்ற விடயங்களிற்குள் நான் செல்லவில்லை. இந்த சூழ்நிலைகளின் அடிப்படைகள் சிலவற்றின் மீதே சில கேள்விகள் உள்ளன.

இணையப்போராளிகள் என நான் குறிப்பிட்டது, நமது சமூகத்தில் உள்ள கருத்துச் சொல்பவர்களையே. அதாவது பேஸ்புக், ருவிற்றர், வலைத்தளங்களில் கருத்துக்களையும், கட்டுரைகளையும் எழுதிக் கொண்டிருப்பவர்களை. தமிழ் சமூகத்தில் இணையப்பரம்பல் குறிப்பிடத்தக்களவில் உள்ளது. இணையப்பாவனை உள்ள பெரும்பாலானவர்கள் தமது அரசியல் கருத்தை எழுதுகிறார்கள். எழுதாமல் உள்ள எஞ்சியவர்கள் ஒத்தகருத்துக்களை பகிர்கிறார்கள். இது எதிலும் பட்டுக்கொள்ளாத மிகச்சிலர்தான் ஏதாவது சுவாமிப் படத்தை 100 பேரிடம் பகிர்ந்தால் நினைத்தகாரியம் நடக்குமென நம்பி, பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழில் இயங்கும் இணையப் போராளிகள் எல்லோரும் ‘அரபு வசந்தம்’ போல ‘தமிழ் வசந்தம்’ ஒன்றை தம்மால் ஏற்படுத்த முடியுமென தீவிரமாக நம்புகிறார்கள் என்றுதான் நினைக்கிறேன். ஆனால் யதார்த்தம் என்னவோ இதற்கு நேர்மாறாகவே உள்ளது. தமிழ்ச் சூழலில்இணையமும்,நிஜமும்வெவ்வேறானவையென்பதே யதார்த்தம்.

கடந்த அறுபது வருடங்களாக தமிழர்கள் போராடுகிறார்கள் என சொல்லப்படுவதை ஒரு பேச்சிற்கு உண்மையென வைத்துக் கொள்வோம். அந்த சமயங்களில் நாம் ஒவ்வொருவரும் என்ன செய்தோம் என்பதை நமக்குள் ஒருமுறை கேட்டுப்பார்த்தால், அறுபது வருடகதையின் அபத்தம் புரியும்.

காலிமுகத்திடலில் நடந்த சத்தியாக்கிரகத்தில் ஆகட்டும், நமது மாவட்டங்களில் நடந்த அரச அலுவலகங்களை முடக்கும் போராட்டங்களிளாகட்டும் நம்மில், நமது மூத்தலைமுறையில் எத்தனை பேர் கலந்து கொண்டனர்?. இது யாரையும் சங்கடப்படுத்தும் நோக்கத்துடனான கேள்வியல்ல. யதார்த்தத்தை புரிய வைப்பதற்காக கேட்கப்பட்டது. உண்மையான அர்த்தத்தில் சொன்னால், நமக்காக போராடுவதற்கு பிரதிநிதிகளைத்தானே தேர்வு செய்தோம்.

பழைய பாராளுமன்ற பிரதிநிதிகள் கொழும்பிலிருந்து ஊருக்கு வரும் சமயங்களில் மேளதாளங்களுடன் வரவேற்பதும், வாதாடி பெற்றுத்தருவார்கள் என சட்டவாளர்களை பிரதிநிதிகளாக்கியதும் இந்த மனநிலையின் வெளிப்பாடுகள்தான்.

இயக்கங்களின் காலங்களிலும் இதுதான் நடந்தது. இருந்த இயக்கங்களில் அதிக புனிதமுடையதென நம்பிய புலிகளை பிரதிநிதிகளாக்கியது தமிழ் சமூகம். களத்தில் மரணித்தபடி சிறு தொகுதியினர் போராடிக் கொண்டிருந்தனர். பெருந்தொகுதி நல்லூரில் திருவிழா கொண்டாடி, திருமணம் செய்து, பிள்ளைகுட்டி பெற்று, வெளிநாடுகளிற்கு சென்று கொண்டிருந்தது. சோற்றுபாசர்சல் கொடுத்தது தான் அவர்களின் அதிகபட்ச பங்களிப்பாக இருந்தது. இப்படி சொல்வது பலருக்கு உவப்பில்லாமல் இருக்கலாம். நமது அரசியல்வாதிகள் சொல்வதைப் போல ஒட்டுமொத்த தமிழினமும் போராடுகிறது, அதன் ஓரங்கமாக நாமும் உள்ளோம் என ஒவ்வொருவருமே நம்பிக் கொண்டிருக்கும் போது, இப்படி சொல்வது பலருக்கு நம்பச் சிரமமாகத்தான் இருக்கும்.

> **தமிழர்கள் ஒரு சக்தியாக மாறாதவரை, பிராந்திய விவகாரங்களில் தீர்மானிக்கும் மையசக்தியாக உருமாறாதவரை தமிழர்கள் தொடர்ந்தும் கையாளப்படும் தரப்பாகவே இருப்பார்கள். அதுதான் தற்பொழுது நடக்கிறது.**

இதற்காக மீண்டும் நல்லூரரை வைத்தே ஒரு உதாரணம் சொல்லலாம். 2009 மே மாதத்தில் வன்னியில் பெரும் பிரளயம் முடிந்தது. அது உலகமே வெட்கித்தலைகுனியும் மாபெரும் இனஅழிப்பு என்றுதான் நம்மவர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாபெரும் துயரம் நிகழ்ந்த ஒன்றரை மாதத்தில் நிகழ்ந்த நல்லூர் திருவிழாவில் எத்தனை இலட்சம் பேர் கூடினார்கள்? அந்த துயரத்தில் வாழ்வை இழந்தவர்கள் இன்றும் நடுத்தெருவில் நிற்க, அந்த வருட திருவிழாவில் மட்டும் கேளிக்கைகளிற் எத்தனை இலட்சம் ரூபாவை செலவிட்டோம்?



இதனால்த்தான் தமிழர்கள் போராடவில்லை. சிறு பகுதியினர் போராடுகிறார்கள். பெரும் பகுதியானவர்கள் அவர்களை பிரதிநிதியாக்கிவிட்டு வாழ்கிறார்கள் என்கிறேன்.

மாபெரும் போராட்டங்களை நிகழ்த்திய சமூகங்களில் தமிழ்ச் சமூகம்தான் இப்படியான அகப்போதாமைகளுடன் இருக்கும் என நினைக்கிறேன்.

நமது வாழ்வியல் யதார்த்தத்திற்கும் இணைய உலகிற்குமிடையில் உயிர்ப்புமிக்க தொடர்பில்லை. எப்பொழுதும் பார்வையாளராகவே இருக்க விரும்புவர்களிற்கு இணைய உலகம் களம் அமைத்து கொடுத்துள்ளது அவ்வளவே. இதனால் இணையகருத்துக்கள் செயல் வடிவம் பெறுவதில்லை.

மேலே சொன்ன அமெரிக்கா பிரேரணை தமிழர்களுடன் பேசி உருவாக்கப்பட்டதல்ல. அது வடிவமாற்றம் பெற்றபோதும் தமிழர்களுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை. தமிழர்கள் என நான் குறிப்பிட்டது, நமது அரசியல் பிரதிநிதிகளையல்ல. நம் ஒவ்வொருவரையுமே இதற்கெதிராக கருத்து சொல்லும் ஒவ்வொருவரையும் சேர்த்தே.

நாம் அனைவருமே அனைத்து விடயங்களிலும் பார்வையாளர்களாவே இருக்கிறோம். பெரும் தொகை பார்வையாளர்களிற்காக சிறுதொகையானவர்கள் போராட முடியாதென்பதே கடந்த கால நமது வரலாறு சொல்வது. தமிழர்கள் ஒரு சக்தியாக மாறாதவரை, பிராந்திய விவகாரங்களில் தீர்மானிக்கும் மையசக்தியாக உருமாறாதவரை தமிழர்கள் தொடர்ந்தும் கையாளப்படும் தரப்பாகவே இருப்பார்கள். அதுதான் தற்பொழுது நடக்கிறது. ஒரு பலவீனமான தரப்பாக தமிழர்கள் உள்ளவரை,இப்படியான விவகாரங்களில் யாரையும் குற்றம் சாட்ட முடியாதென்பதே யதார்த்தம்.

ஒவ்வொருவமே தமிழ் அரசியலில் பங்கற்பாளராக மாறும் வரை அல்லது தமிழர்களின் அரசியல் இலட்சியம் வெகுஜன மயப்படும் வரை எல்லா தரப்பினாலும் கையாளப்படும்தரப்பாகவேஇருந்து கொள்வோம். மாறாக தமிழர்கள் அரசியல் மயப்பட்ட சமூகமாக இருந்திருந்தால், வெகுஜன எழுச்சிகளின் மூலம் தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்துபவர்களாக இருப்பார்கள். அப்படியான சமயங்களில் யாராலும் கையாள முடியாத தரப்பாக இருப்பார்கள்.

இன்றைய திகதியில் விஜயகாந்த் படத்தில் வரும் சண்டைக் காட்சிகளை நம்பினாலும், இப்படி நடக்குமென நம்ப முடியாது. ஆகக்குறைந்தது தமிழ்தரப்புக்கள் அனைத்தும் இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் பொதுவான வேலைத்திட்டமொன்றில் ஒன்றிணைவதாவது உடனடித்தேவையாக உள்ளது. இல்லாவிட்டால், முள்ளிவாய்க்கால் நினைவு நாள், மாவீரர் நாள், ஐ.நா பிரேரணை போன்ற சமயங்களில் மட்டும் பேஸ்புக்கில் புரபைல் மாற்றி திருப்திப்படும் பரம்பரையொன்றையே உருவாக்கி விட்டு சொல்வோம்.





பி.சியா
siyapj27@gmail.com



பிப்பிளி முகாம்

# என்று முடியுமிந்த அகதியின் வாழ்வு?

யுத்தம் முடிந்து விட்டது, இனங்களிற்கிடையில் நல்லிணக்க முயற்சிகள் நடக்கிறது என கவர்ச்சிகரமான வார்த்தைகளை அரசியல்வாதிகள் பேசுகிறார்கள். வடக்கிற்கு வரும் எல்லா அரசியல்வாதிகளும் 'உங்களின் துயரங்களை அறிவோம்' என இதயத்தில் கைவைத்து சொல்கிறார்கள். அதனை விதவிதமான கோணங்களில் ஊடகங்கள் படம்பிடித்து காட்டிக் கொண்டிருக்கின்றன.

இனநல்லிணக்கம், இனப்பிரச்சனை தீர்வு, சமஷ்டி, பிரிக்கப்படாத இலங்கை போன்ற சுலோகங்கள் அரசியலரங்கில் தீவிரம் பெற்றுள்ள நிலையிலும், அகதிகள் என்ற வார்த்தை ஈழத்தமிழர்களை விட்டு செல்லாதது துயரமே.

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட பகுதிகளை சேர்ந்த ஆயிரக்காணக்கானவர்கள் இன்றும் வடக்கு, கிழக்கில் அகதி வாழ்வை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் தென்னிலங்கை ஆட்சியாளர்களும், நமது அரசியல்வாதிகளும் இவர்களை எப்படியோ நினைவு கூர்கிறார்கள். ஓடிவருகிறார்கள். வாக்குறுதிகள் வழங்குகிறார்கள். பெரிய எதிர்பார்ப்புடன் காத்திருந்து... அனைத்தும் நிராசையாகி நம்பிக்கையிழந்த வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இடம்பெயர்ந்தவர்கள்.

இப்படி அகதி வாழ்வு வாழ்பவர்களில் ஒருவரே சிசிலியா. நாவற்குழியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து, மானிப்பாய் பிப்ளி பகுதியில் குடியேறியுள்ளவர்களில் ஒருவர். சிசிலியா போல, நாவற்குழியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த குடும்பங்கள் அங்கு குடியேறியுள்ளன. இதனால் அந்த பகுதி பிப்ளி முகாம் என இப்பொழுது அழைக்கப்படுகிறது.

கடந்த 15 வருடங்களாக அந்த முகாம் உள்ளது. யாழ்ப்பாண நகரிற்கு நெருக்கமான மானிப்பாய் பகுதியிலேயே இந்த முகாம் அமைந்துள்ளது. இதில் துயரம் என்னவென்றால், இந்த அகதித்துயரம் பற்றி அறியாமல் யாழிலேயே எண்ணற்றவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதே.

நம்மவர்கள் பலர் கடைகளில் சந்திரிகா பை தேடி வாங்கிக் கொண்டிருந்த காலத்தில் சிசிலியா இடம்பெயர்ந்து இங்கு வந்திருக்கிறார். அதன் பின்னர் மதுரை சாறி, வாணி சாறி, மதுபாலா சல்வார் என ஏராளம் பாஷன்களை மாற்றி விட்டார்கள். ஆனால் சிசிலியாவின் வாழ்க்கை மாறவில்லை. சிறிய அகதிப்பெண்ணாக வந்தவர், பெரியவராகி இங்கேயே காதலித்து ஒருவரை கல்யாணம் செய்துவிட்டார். சிசிலியாவை விட மோசமான அனுபவத்துடன், பிறக்கும் போதே அகதியாக அவருக்கு குழந்தைகள் உள்ளன.

நாவற்குழியிலிருந்து வெளியேறிய 80 குடும்பங்கள் தற்பொழுது இந்த முகாமில் வசித்து வருகின்றன. ஆரம்பத்தில் 100 குடும்பங்கள் குடியேறின. நாவற்குழியில் சொந்த காணி உள்ளவர்கள் அங்கு சென்றுவிட்டனர். 80 குடும்பங்களிற்கு அங்கும் உரிமையில்லை. இங்கும் உரிமையில்லை.

இந்த நாடோடி வாழ்க்கை ஒரு துயரமாக சிசிலியாவின் முன்னோர்களையும் பிடித்திருக்கிறது. நாவற்குழியில் சிசிலியா குடும்பத்திற்கென சொந்தமான காணியெதுவும் இல்லை. பொதுக்காணி ஒன்றிலேயே வசித்து வந்திருக்கிறார்கள்.



நான் எப்படியாவது இந்த காணியை வாங்க முயற்சிக்கின்றேன். ஆனால் அது எவ்வளவு காலமாகுமோ தெரியவில்லை. எங்களுக்கு யாராவது முடிந்தால் இந்த மலசல கூட வசதியையாவது செய்து தாருங்கள்.

இடம் பெயர்ந்து உறவுகளாக ஒன்று சேர்ந்து மானிப்பாய் பிப்ளி சுடலையை அண்டி குடியேறினார்கள். அதுதான் பிப்ளி முகாம் என்று அழைக்கப்படுகிறது.

இம் முகாமில் வசிக்கும் சிலருக்கே நாவற்குழியில் காணி இருந்தது. பலருக்கு அங்கும் காணிகள் இல்லை. நீண்ட காலம் வசித்தோம் என்ற பெயரில் அந்த காணியை உரிமையாக்க நினைத்தனர். ஆனால் இடம் பெயர்ந்ததை காரணம் காட்டி, நீண்ட காலம் அங்கு வசிக்காததால் காணியில்லையென அரசு கைவிரித்துவிட்டது.

கடந்த 15 வருடமாக பிப்ளி முகாமில் சிசிலியா வசித்துவருகிறார். 15 வருடமாக தான் வாழ்ந்த கோர வாழ்வைப் போலல்லாமல், தனது பிள்ளைகளாவது செழிப்பாக வாழ வேண்டுமென தாய்மை பொங்க எம்முடன் பேசினார் சிசிலியா.

'நான் பிறந்தது நாவற்குழியில். எனது அம்மா அப்பா பல காலம் வாழ்ந்து வந்த மண் அது. அவர்கள் திருமணம் செய்த காலம் தொடக்கம் எம்மை பெற்று வளர்த்த மண் நாவற்குழி. ஆனால் அவர்களுக்கு என்று அங்கு ஒரு காணிப்பரப்பு கூட இல்லை. ஆனால் பொதுவான காணியொன்றில் 30 வருடங்களாக வாழ்ந்தனர். அந்த காணி அவர்களுக்குத்தான் சேர வேண்டும். ஏனென்றால் 30 வருடம் வாழ்ந்திட்டார்கள். அதன் உறுதி பெற்று அந்த காணியில் வீடு கட்டி வாழ்வோம் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து வந்தனர்.

ஆனால் 95 பிரச்சினையோடு ஊரை விட்டு ஓட வேண்டியதாயிற்று. இடம் பெயர்ந்து திக்கு திக்கா திரிஞ்சு கடைசியில வட்டுக்கோட்டையில போய் இருந்தோம். அங்கு தான் நிறைய காலம் ஒரு முகாமில் வாழ்ந்தோம். பின்னர் 2000ம் ஆண்டு விடுதலைப்புலிகளால் ஆனையிறவு தாக்கப்பட்டவுடன் எமது இடத்திற்கு செல்ல முடிந்தது. சென்று காணிகளை துப்பரவு செய்தோம். ஆனால் வாழ்வதற்கான வசதிகள் சிறிதும் கிடைக்கவில்லை. குடியேற முடியாத இடமாக இருந்தது. பின்னர் 2002ம் ஆண்டின் பின்னர் அங்கு வாழ அனுமதிக்கவில்லை. அதன் பின்னர் இங்கு வந்து குடியேறிவிட்டோம்.

நாங்கள் இங்க வரும் பொழுது இந்த இடம் சுடலையோடு சுடலையாக பத்தை காடாக கிடந்தது. காணிக்கு சொந்தமாக யாரும் இல்லை என்றார்கள். நாங்கள் ஒரு 100 குடும்பம் இந்த இடத்தை துப்பரவு செய்து குடிசைகள் போட்டு குடியேறினோம். அதன் பின்னர் இந்த குடிசையில் தான் எங்கள் வாழ்க்கை.

இங்கே வரும் பொழுது நான் அம்மாக்களோடு சின்ன வயதாக வந்தேன். இங்க வந்து காதலிச்சு திருமணம் செய்திட்டேன். எனக்கு தருவதற்கு என்று அம்மா அப்பா விடம் எதுவுமே இல்லை. இல்லாதவர்களிடம் எதிர்பார்க்கவும் முடியாது தானே. எனவே நாங்களும் எதிர்பார்க்கவில்லை. எங்கட அம்மா வீடு பக்கத்தில தான். (பக்கத்தில் உள்ள இன்னுமொரு குடிசையை காட்டினார்)

எங்களுக்கு இப்ப நான்கு பிள்ளைகள். நான்கும் பெண் பிள்ளைகள். அது தான் யோசனையாக இருக்கு. முடிஞ்ச அளவுக்கு படிப்பிக்கிறம். ஆனால் எங்கள போல் கொடுமையான கஸ்ரத்தை எங்கட பிள்ளைகள் அனுபவிக்க கூடாது கடவுளே.

என்னுடைய கணவர் அந்தோனி. இவர் என்னை விட கொஞ்சம் படிச்சவர். ஒரே இடத்தில் நிலையா இருந்திருந்த "வோச்மனா" தன்னும் அரசாங்க வேலை செய்திருப்பார். நாங்கள் தானே நாடோடிகள். பிறகு எப்படி. ஆனாலும் அவர் இப்பொழுது யாழ்ப்பாண வைத்தியசாலையில் "கிளீனராக" பணி புரிகின்றார். சம்பளம் 12000 தான். அதையாச்சு நிரந்தரம் ஆக்குவாங்க என்டால் இல்லை.

அவற்ர 12000 தான் நான்கு பிள்ளையலையும் படிப்பிச்சு சாப்பாடு கொடுக்க உதவுது. மற்றும் படி இந்த வீடு தான். முதல்ல இதை விட குடிசை. பிறகு நாங்கள் கொஞ்சம் கொஞ்சமா தகரம், செங்கல், சுவர் வைச்சு இப்படி ஆக்கிட்டம். குசினி நல்லதில்லை. கிணறு இல்லை. மலசல கூடம் இல்லை. கிராம சேவகர் ஊடாக பிரதேச சபையிடம் கதைச்சம். அவங்க சொந்த காணி இருந்தால் தான் கட்டி தருவார்களாம் என்றார்கள்.

இந்த காணிகள் யாருடையது என்றே தெரியாது. ஆனால் இப்போ இந்த காணிக்கு சொந்தக்காரர் என்று கூறிக்கொண்டு உறுதி கொண்டு ஒருவர் சாவச்சேரியில் இருந்து வந்தார். ஆனால் அவர் எழும்ப சொல்லவில்லை. அப்படி சொல்லவும் முடியாது தானே.



ஏனென்றால் நாங்கள் காடாக இருந்த காணியை துப்பரவு செய்து 15 வருடமாக இருக்கின்றோமே.

இப்ப சொல்லி இருக்கிறார், 1பரப்பு 1லட்சம் படி தாறதென்று. இப்ப அந்த 1லட்சம் எப்படி எடுப்பது என்று தான் தெரியவில்லை.

வாங்கிறதுக்கு லோன் கூட எடுக்க முடியாது. கேட்டால் 12000 சம்பளத்தில் எவ்வாறு கட்டுவீர்கள் என்ற கேட்கிறார்கள். சுய தொழிலுக்கு என்று கூட தாறாங்க இல்லை. அப்படி தந்தாலும் கட்டுக்காசு அதிகளவில் கட்டுற அளவுக்கு எமக்கு வசதியும் இல்லை. 1500 ரூபா அப்படி கட்டுறது போல யாரும் உதவி செய்தால் பிரச்சினை இல்லை. மலசல கூடமாவது கட்டலாம். மிக அத்தியாவசியமாக உள்ளது. எத்தனை நாளுக்கு தான் பக்கத்து வீட்டயும் பத்தேக்கையும் போறது. தண்ணி கூட அப்படி தான். குளிப்பதில் இருந்து குடிக்கிறது வரை பக்கத்தில தான் போகனும்.

நான் எப்படியாவது இந்த காணியை வாங்க முயற்சிக்கின்றேன். ஆனால் அது எவ்வளவு காலமாகுமோ தெரியவில்லை. எங்களுக்கு யாராவது முடிந்தால் இந்த மலசல கூட வசதியை யாவது செய்து தாருங்கள். இங்கையாவது நிம்மதியாக இருந்து என்ர பிள்ளைகளை படிப்பிச்சு விட்டிடுவன். பிறகு அதுகள் வீடு கட்டுங்கள் தானே. அதற்கிடையில் ஓரளவு ஏதும் நாங்கள் வீட்டினை திருத்தி விடுவோம். இதே வீட்டை கல்லு வைத்து தன்னும் கட்டிவிடுவோம் என்றார் வாழ்வின் உச்சம் ஒன்றை தான் அனுபவிக்கா விட்டாலும் தன் பிள்ளைகளுக்கு காட்ட துடிக்கும் சிசிலியா.

தேர்தல் காலத்தில் மட்டும் சிறிதாக கொடுத்து பெரியதாக விளம்பரம் செய்யும் அரசியல்வாதிகள், வீணாண விளம்பரங்களிற்கு கோடிக்கணக்கில் கொட்டும் அரச அதிகாரிகள் ஆகியோரின் கவனத்திற்கு இந்த விடயத்தை சமர்ப்பிக்கிறோம். அடிப்படை வசதிகளே இல்லாமல் 15 வருடங்களாக வாழ்ந்து வரும் இவர்களின் துயரத்தை தீர்த்து வைக்க வேண்டியது உங்களின் கடமையல்லவா.

### எஸ். கீதாஞ்சலி கிராமசேவகர் உத்தியோகத்தர் ஜே.140



இந்த மக்கள் 15 வருடம் வாழ்கின்றனர். இவர்களுக்கு சொந்த காணி இல்லாமல் வீடோ மலசலகூடமோ கட்டி கொடுக்கும் சட்டம் எம்மிடம் இல்லை தானே. அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் நிச்சயம் கட்டி கொடுத்திருப்போம்.

இப்போ இவர்கள் இருக்கும் காணிகள் விற்கப்படுகிறது. அப்படி வாங்கி உறுதி கொண்டு வருபவர்களுக்கு கட்டி கொடுக்கின்றோம். எமது கடமையை நாங்கள் செய்கிறோம். இங்கு வந்து குடியேறியவர்கள் பலரும் படித்த, அரசாங்க வேலை எடுத்தவர்கள். காணிகளை லோன் எடுத்து வாங்குகின்றார்கள். சிசிலியா போன்ற சில குடும்பங்கள் தான் சிறு பிள்ளைகள் என்பதால் மீள முடியாமல் இருக்கின்றனர்.

நிச்சயம் இவர்களுக்கு ஏதாவது உதவி செய்யும் வாய்ப்பு வரும் பொழுது பிரதேச சபை ஊடாக செய்வோம்.

# யாழ்ப்பாணத்தில் ஒரு திருவிழா

## அது எங்கள் ஊரிலெல்லாம் பெருவிழா

ரஜிந்தன்
rajinthan2011@gmail.com



"டாடி நாங்க நெக்ஸ்ட் இயர் கொலிடேக்கும் ஸ்ரீலங்கா வருவாமா" எனத் தன் தந்தையிடம் கெஞ்சலாக கேட்கிறாள் புலம்பெயர் தேசத்துச் சிறுமியொருத்தி. நிலவின் ஒளியுடன் கூடிய ரம்மியமான சூழலில் மணல் தரையில் பலர் தம்மை மறந்துபோய் உட்கார்ந்திருக்கிறார்கள்.

இவர்களைப் போல எதிர் காலம் பற்றி எவ்விதமான எண்ணங்களுமற்றவர்கள், அடுத்த நாள் செலவுக்கு என்ன செய்வதென்ற ஏக்கத்தோடு வாழ்பவர்கள், தம்முள் இருந்த புன்னகையை, மகிழ்ச்சியை எங்கோ தொலைந்துவிட்டு அமைதியை தேடுபவர்கள் என ஆயிரக்கணக்கானோர் எதிர்பார்ப்புகளோடும், வேண்டுதல்களோடும் நல்லூரானின் ஆறு விதிகளிலும் படையெடுத்து வருகின்றனர்.

ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தனின் திருவிழாக் காலம் இது. ஓகஸ்ட் 19ஆம் திகதி ஆரம்பமான இத் திருவிழா 25 நாட்கள், நடைபெறவுள்ளன. நல்லூர் திருவிழா என்றால், யாழ்ப்பாணத்து மக்கள் மட்டுமல்ல, வடக்கு மாகாண மக்களுக்கே, ஏன்; புலம்பெயர் தமிழர்களுக்கும் ஏதோ இனம்புரியாத ஒரு மகிழ்ச்சி, பக்தி. நல்லூர் ஆலயம் நோக்கி படையெடுக்கின்றனர். ஓகஸ்ட் மாத காலப்பகுதி இலங்கை உட்பட உலகின் பெரும்பாலான நாடுகளில் கோடைகால விடுமுறைக் காலம் என்பதால் வெளிநாட்டவர்கள் அதிகமாக வருகின்றனர்.

### ஆலயச் சூழலின் அழகு

இவ்வாலயத்தின் நாற்திசை வீதிகளிலும் இளைப்பாறும் பந்தல்கள், தண்ணீர் பந்தல்கள், அன்னதான மடங்கள், அமைந்துள்ளதோடு, ஆலய சுற்றுப்புற வீதியொங்கும் மணல் பரவப்பட்டுள்ளமை சிறப்பாகும். இவ் மணலில் மாலைவேளைகளில் சிறியவர்கள் மட்டுமன்றி பெரியவர்களும் மணற்சிற்பங்கள் செய்து விளையாடுகின்றன்றமை, அடடா, என்ன ஒரு ஆனந்தம்.

இவையெல்லாம் ஒரு புறம் இருக்க ஆலயத்திற்கு வரும் பெருந் தொகையான மக்கள் கூட்டத்தை இலக்கு வைத்து ஆலயத்தின் வீதிகளில் பல வியாபார நிலையங்கள், சுண்டல் வண்டிகள், ஐஸ்கிறீம் வண்டிகள் காணப்படுகிறது. இவ் வியாபாரக் கடைகளைப் பார்ப்பதற்கென்றே வருகிறது ஒரு கூட்டம். நல்லூரரான் வீதியில் உள்ள சிற்றாலயங்கள், மண்டபங்கள் என அனைத்திலும் தினமும் பஜனைகள் பிரசங்கங்கள், அரங்கேற்றங்கள் என ஒரே கலகலப்புதான் எப்போதும்.

### கந்தனின் வீதியுலா

இது மட்டுமல்லாமல் 25 நாள் உச்சவத்திலும் விதவிதமாக விதியுலா வரும் அலங்காரக் கந்தனின் காட்சி பார்ப்போரை பரவசப்படுத்துகின்றது. அது மட்டுமா கந்தனின் அலங்காரத்திற்கும் அவன் அழகிற்கும் போட்டியாக மங்கையரின் மரகத நடை உள்ளது.

ஆரோகரா ஊர்வலத்தில் பல அலங்காரத் தீபங்கள், ஆலவட்டங்கள், வீர விளையாட்டுக்கள் என பக்கதர்களைப் பரவசப்படுத்த, கந்தனின் பின்னே பஜனைகள், சங்கீத இசைகள் என அற்புதமான வீதியுலாவில் கந்தனை வரவேற்பதற்காய் மாவிலை தோரணங்கள், நிறைகுடம் குத்துவிளக்கு என ஆனந்தப் பரவசமூட்டும் அந்த அரகரோகரா ஊர்வலம்.

இவ் 25 நாள் கொண்டாடத்திலும் கொடியேற்றத்தில் ஆரம்பமாகி மஞ்சத் திருவிழா, கார்த்திகைத் திருவிழா, மாம்பழத் திருவிழா, சப்பறத் திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா, பூங்காவனம் என அனைத்துமே அற்புதமாக நிறைவேறக் காத்திருக்கின்றன.

இவை அனைத்தையும் தாண்டி வரமளித்த கந்தனுக்காக அவன் அடியார்கள் எடுக்கும் கற்பூர சட்டிகள், காவடிகள் என ஒரே அற்புதம்தான். அதிலும் காவடி என்னும்போது விதவிதமான ஆட்டக்காவடிகள், தூக்குக் காவடிகள் பறவைக் காவடிகள் என அதனை வகைப்படுத்திக் கொள்ளலாம்.

இக்காவடிகளின் அணி வகுப்பைக் காணவேண்டுமானால் இறுதி உற்சவமான தீர்த்தோற்சபத்தில் காணலாம். அன்று ஆலயத்தின் நாற்திசை வீதியாலும் ஆயிரக்கணக்கில் காவடிகள் அணி அணியாய் வரும்.

அத்தோடு இங்கு பல்வேறு சமூக சேவை அமைப்புக்களாலும், குழுக்களாலும் தினந்தினம் பல்வேறுபட்ட சமூக விழிப்புணர்வு அறிவூட்டல் செயற்பாடுகளும் இடம்பெறுவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாக காணப்படுகின்றது. இப்படி நல்லைக் கந்தனின் சிறப்பைச் சொல்லிக் கொண்டே போகலாம். அது ஒருபுறம் இருக்க ஆங்காங்கே சில அருவருப்பான சம்பவங்களும் இங்கு அரங்கேரத்தான் செய்கின்றது.

அதிலும் அதிகளவில் இடம்பெறுவது திருட்டுக்கள்தான். என்னதான் அவசரப் பொலிஸ் ஆயிரக்கணக்கில் காத்திருந்தாலும் நூற்றுக்கணக்கான பாதுகாப்புக் கமராக்கள் பொருத்தப் பட்டிருந்தாலும், இந்த திருடர்களின் தொழில் தேர்ச்சி இருக்கிறதேஞ் அப்படியொரு தேர்ச்சி. முண்டாசு மீசை, திருதிரு கண்கள் என்றுதான் திருடர்களின் அடையாளங்களை நீங்கள் கற்பனை செய்து கொண்டிருக்க, அப்பாவியாக பக்கத்தில் நிற்பவரும் அறுத்துக் கொண்டு தப்பியோடிவிடும் சம்பவங்கள்தான் நடக்கின்றன. அதிலும் குறிப்பாக இப்பொழுது இந்த தொழிலில் பெண்கள் வேறு இறக்கிவிடப் பட்டுள்ளனர். கொடியேற்றமன்று தொடக்கி வைக்கப்பட்ட 35 பவுன் திருட்டு உற்சவ முடிவில் எத்தனை கிலோவில் போய் நிற்குமோ.

இது மட்டுமா.. உற்சவகாலத்தில் காணப்பட்ட சில பல சந்தர்ப்பங்களைப் பயன்படுத்து இங்குள்ள மக்களுக்கு அதிலும் குறிப்பாக யாழ்பாணத்து இளசுகளுக்கு போதையூட்டும் செயற்பார்டுகளும் அடுக்கடுக்காக அரங்கேறுகின்றது. இதைவிட, கோஷ்டி மோதல்கள், அருவருப்பான அநாகரீகமான செயற்பாடுகள் என ஆலய சூழலின் புனிதத்தை தமக்கான வாய்ப்பாக பயன்படுத்தி பிழைப்பு நடாத்தும் கூட்டமும் இங்குண்டு.

இத்தகைய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த என்னதான் சட்டங்கள், பாதுகாப்பு பொறிமுறைகளிலும் எண்ணற்ற மாற்றங்கள் கொண்டுவரப்படினும் அது பயனற்றதாய்ப் போய்விடுகிறது என்பது மட்டுமே இங்கு உண்மையாத் தெரிகின்றது.

நல்லூர் ஸ்பெஷல்



இப்படியே சொல்லிக்கொண்டே போகலாம் எம்பெருமானின் உச்சவகாலச் சிறப்புக்களை. இருப்பினும் காலப்போக்கில் இங்கு இடம்பெறும் வேண்டப்படாத செயற்பாடுகளைக் களைந்து அற்புதமான ஆவணிமாத அனுபவத்தை நாம் அனைவரும் பெற்றுக்கொள்ள முன்வரவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

# சர்வதேச தரத்தையுடையதா இலங்கை டெஸ்ட் அணி?





கடந்த வருட இறுதியில் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த மேற்கிந்திய கிரிக்கெட் அணி, சில உள்சிக்கல்களால் பாதியிலேயே பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிவிட்டது. உலகக்கிண்ணத்திற்கு இந்தியர்களிற்கு பயிற்சி, ஸ்பொன்சர்கள் விவகாரம் என பலவற்றை கருத்தில் கொண்டு இந்தியா அவசர கதியிலான ஒரு தொடரை ஏற்பாடு செய்தது. ஆம். மேற்கிந்தியாவிற்கு பதிலாக இலங்கை சென்றதை அப்படித்தான் குறிப்பிடுவது பொருத்தம். நீண்ட ஓய்வில் வீடுகளில் இருந்த வீரர்களை அவசரமாக திரட்டி போருக்கு செல்பவர்களை போல, இந்தியாவிற்கு அனுப்பினார்கள். அந்த தொடரில் இலங்கை மோசமாக தோற்றது. ஆனால் அந்த அணி மோசமான அணியல்ல. அந்த அணிதான் பின்னர் உலகக்கோப்பையில் கலக்கியது.


இந்த அவசர சுற்றுப்பயணத்திற்கு பிரதியுபகாரமாக இந்தியா தற்பொழுது இலங்கைக்கு வந்து விளயாடி விட்டு சென்றுள்ளது. மூன்று பொட்டிகளை கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை மிகமோசமாக ஆடி தோற்றுப்போயுள்ளது. அதாவது, இந்தியாவின் மிகச் சிறந்த டெஸ்ட் அணிகள் எல்லாம் கடந்த 22 வருடங்களாக முயன்று முடியாமல் போனதை, விராட் கோலி தலைமையிலான சுமாரான அணியொன்று நிறைவேற்றியுள்ளது. 22 வருடங்களின் பின்னர் இலங்கையில் டெஸ்ட் தொடரொன்றை இந்தியா வென்றுள்ளது. இவற்றையெல்லாம் விட, வரிசையாக சொந்த மண்ணில் இரண்டு தொடர்களை இலங்கை இழந்துள்ளது. இரண்டும் மோசமான தோல்விகள்.

கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இலங்கையணியின் அடையாளமாக இருந்த சங்கக்கார, மஹேல, டில்சான் போன்றவர்களின் இழப்பு இலங்கையணியை எப்படி சிதைத்துள்ளதென்பதும், விடைபெறப்போகும் வீரர்களிற்கான பதிலீடை கண்டுபிடிப்பதில் தேர்வாளர்கள் எவ்வளவு அசிரத்தையாக இருந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த தோல்விகள் வெளிப்படுத்துகின்றன.

தற்போது டெஸ்ட் ஆடும் அணிகளில் இலங்கையணிதான் மிக பலவீனமானதாக இருக்குமென எந்த சந்தேகமுமில்லாமல் சொல்லலாம். டெஸ்ட் தரவரிசையில் பின்தங்கியுள்ள மேற்கிந்தியா, சிம்பாவே போன்ற நாடுகள் கூட இலங்கை சுற்றுப்பயணம் செய்தால் தொடரை வென்று செல்லத்தக்க சூழ்நிலை தான் உள்ளது. இறுதியான டெஸ்ட் தரபபடுத்தலில் 89 புள்ளிகளுடன் 7வது இடத்தில் இலங்கை உள்ளது. இவ்வளவு வீழ்ச்சியை அண்மையில் இலங்கை அடைந்ததேயில்லை.







**இந்தியாவின் மிகச்சிறந்த டெஸ்ட் அணிகள் எல்லாம் கடந்த 22 வருடங்களாக முயன்று முடியாமல் போனதை, விராட் கோலி தலைமையிலான சுமாரான அணியொன்று நிறைவேற்றியுள்ளது.**

இந்த மேசமான கட்டத்தை இலங்கையணி ஒரே நாளில் வந்தடையவில்லை. நீண்டகாலமாக மெதுமெதுவாக இந்த கட்டத்தை அடைந்துள்ளது.

சமிந்தவாஸ், முரளிதரன் போன்ற வீரர்கள் விடைபெற்றபோது இலங்கையணியின் பந்துவீச்சு பலவீனப்படுமென பரவலாக கூறப்பட்டது. உண்மையில் அப்படித்தான் நடந்தது. ஆனால் அது மோசமான பாதிப்பாக அல்லாமல் போனது. ஹேரத், அஜந்த மென்டிஸ், மலிங்க, குலசேகர, வெலகெதர, தம்மிக்க என பலர் பல்வேறு காலகட்டங்களிலும் பங்களிப்பு செய்து, அணியை ஓரளவு தூக்கி நிறுத்தினார்கள். இந்த காலகட்டத்தில்தான் இலங்கையணியின் துடுப்பாட்ட பொற்காலம் உருவானது. முன்னர் ஒருகாலத்தில் சனத், கலுவிதாரண, அரவிந்த, ரணதுங்க, மஹாநாம காலத்து அணியை பலரும் கொண்டாடுவதுண்டு. அந்த கூட்டணியின் சாதனைகளையும், இலங்கை கிரிக்கெட்டில் ஏற்படுத்திய புத்தடையாளங்களையும் யாராலும் நிராகரிக்க முடியாது. என்றாலும், பின்னாளில் இருந்த சங்கக்கார, மஹேல, சனத்(சிலகாலம்), டில்சான் கூட்டணிதான் பலருக்கு மனதில் நிற்கிறது. இந்த கூட்டணி பந்துவீச்சில் ஏற்பட்ட சிறிய சரிவை துடுப்பாட்டத்தால் நிமிர்த்திக் கொண்டிருந்தது. இந்தகாலகட்டத்தில் பந்துவீச்சாளர்களிற்கு சாதகமற்ற விதிகள் வேறு நிறைய வந்துவிட்டன. இதனால் கிரிக்கெட் எனப்படுவது துடுப்பாட்டக்காரர்களை மையப்படுத்திய விளையாட்டு என்பதை போன்ற ஒரு அபத்தான போக்கு கடந்த சில வருடங்களில் ஏற்பட தொடங்கிய நிலையில், பந்துவீச்சு பலவீனங்கள் அவ்வளவாக வெளித்தெரியாமல் இருந்தன.

மஹேல, சங்கக்கார, டில்சான், சமரவீர போன்ற வீரர்கள் விடைபெற்ற பின்னர்தான் இலங்கையணியின் முழுமையான சரிவு வெளித் தெரிகிறது.

விடைபெற்ற வீரர்களிற்கான பிரதியீடுகளை இலங்கை தேர்வாளர்கள் இதுவரை கண்டுபிடிக்கவில்லையென்ற பேரதிர்ச்சியை பாகிஸ்தான், இந்தியாவுடனான தொடர்கள் வெளிப்படுத்துகின்றன.

முன்னர் ஒரு காலத்தில் சந்திமால் மீது நிறைய எதிர்பார்ப்பு இருந்தது. அறிமுக காலத்தில் அசத்தினார். எனினும், அவர்மீதான எதிர்பார்ப்புக்கள் மிகையானதென்பதை அவரது பின்னாளைய ஆட்டங்கள் வெளிப்படுத்தி விட்டன. அணியிலேயே அவர் இடம்பிடிக்க திண்டாடும் நிலைதான் உள்ளது. முக்கியமான மூன்றாமிலக்கத்தில் அவர் ஆட தகுதியானவரென முன்னர் கருதப்பட்டாலும், இப்பொழுது மத்தியவரிசை வீரராகத்தான் உள்ளார்.



இதேபோலத்தான் சங்கக்காரவின் பின்னர் மூன்றாமிலக்க வீரர் என அண்மைநாட்களாக பரிந்துரைக்கப்பட்டுவந்த திரிமன்னவும். இவர் சந்திமாலைவிடவும் மோசமான நிலையில் உள்ளார். 22 டெஸ்ட்களில் ஆடிய பின்னரும் இன்னும் சராசரியை 25 என்று மிக மேசமான நிலையித்தான் வைத்திருக்கிறார். இந்திய தொடரில் 6 இன்னிங்ஸ்களிலும் ஆடி மொத்தமாக 142 ஓட்டங்களைத்தான் பெற்றிருக்கிறார். அதிலும் இறுதி இரண்டு டெஸ்டிலும் முக்கியமான தருணங்களில் களமிறங்கினார். போராடினால் வெற்றி தோல்வியின்றி முடிக்கலாம் அல்லது வெற்றிபெறலாம் (தற்போதைய இலங்கையிடம் அதை எதிர்பார்ப்பது அதிகப்படிதான்) என்ற நிலையில்தான் அவர் களமிறங்கினார். அவரது ஆட்டத்தில் எந்த போராடும் தன்மையும் இருக்கவில்லை. ஒருநாள் போட்டிகளில் திரிமன்ன ஏற்படுத்திய நம்பிக்கையை இன்னும் டெஸ்ட்டில் ஏற்படுத்தவில்லை.

இலங்கையின் தொடக்க ஆட்டம் பற்றி சொல்லத் தேவையில்லை. திமுத் கருணாரத்ன, கௌஷால் சில்வா என இரண்டுபேரை வைத்து திண்டாடிக் கொண்டிருக்கிறது. இருவரும் 20இற்கும் மேலான டெஸ்டில் ஆடிவிட்டார்கள். ஆனாலும் அதற்கேற்ற முதிர்ச்சி ஆட்டத்தில் தெரியவில்லை. டி20 பாணியில் முதலந்திலேயே விக்கெட் போய்விடுமோ என வரும் ரென்சன், இவர்கள் டெஸ்டில் ஆடும்போது ஏற்படுகிறது. இந்தியாவுடனான டெஸ்டில்

இருவரில் யாராவது ஒருவர் முதல் ஓவர் அல்லது அடுத்த ஓவர்களில் நடையை கட்டிவிடுவார் என்ற நிலைதான் இருந்தது. ஆறு இன்னிங்சிலும் ஆடி கருணாரத்ன எடுத்தது 67 ஓட்டங்கள். இரண்டு டக் வேறு. கௌஷால் சில்வா ஆறு இன்னிங்சில்எடுத்தது 87ஓட்டங்கள். இதில் ஒரு அரைச்சதமும் வருகிறது.

அத்தியாவசியமாக பொருத்தமான தொடக்க ஆட்டக்காரர்களை இலங்கை கண்டறிய வேண்டும். உபுல் தரங்கவை ஏன் டெஸ்டில் இணைப்பதில்லை என்ற முணு முணுப்பு முன்னர் இருந்தது. அவர் டெஸ்டிற்கு பொருத்தமற்றவர் என்பதை இந்திய தொடரில் நிரூபித்து விட்டார். அதனால் அவர் போன்றவர்களை வைத்து திரும்பத்திரும்ப பரீட்சித்துக் கொண்டிருக்காமல் புதிதாக சிந்திக்க வேண்டும். அதுபோலவே பின்வரிசையில் ஆட வந்த முபாரக். அவரையெல்லாம் எதற்காக இன்னும் தேர்வு செய்கிறார்கள் என்பதை புரிந்தே கொள்ள முடியவில்லை. 13 டெஸ்ட் ஆடி ஒரு அரைச்சதத்தைகூட அடிக்காதவரை எந்த வகைக்குள் அடக்குவது?

மூத்தவீரர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும் சமயத்தில் எல்லா அணிகளும் இப்படியான நெருக்கடிகளை சந்திக்க வேண்டியிருப்பது உண்மைதான். அவுஸ்திரேலிய அணிகூட இப்படியான நெருக்கடியொன்றை கடந்து மைக்கல் கிளார்க் தலைமையில் மீளெழுந்தது. ஆனால், இந்த சமயத்தில் தேர்வாளர்களின் கைகளிலேயே அனைத்தும் உள்ளன. விருப்பு வெறுப்புக்களிற்கு அப்பால், எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சரியான வீரர்களை தேர்வு செய்வதிலேயே அணியின் எதிர்காலம் தங்கியுள்ளது. இலங்கை சறுக்கும் இடம் இதுதான் போலுள்ளது. இலங்கை தேர்வாளர்களின் முடிவுகள் கடந்த காலத்தில் பெருமளவில் அரசியல்மயப்பட்டிருந்தது ஒன்றும் இரகசியமல்ல. இலங்கையின் இப்போதைய வீழ்ச்சிக்கான காரணங்களிலொன்றாக அதனையும் குறிப்பிடலாம்.

ஆனால் இப்பொழுதும் அப்படியான அரசியல் நெருக்கடியெதுவும் இல்லை. இருந்தும் அணித்தேர்வு, தேர்வாளர்களின் திறன் தொடர்பான ஐயங்களை எழுப்பவதாக உள்ளது. நல்ல துடுப்பாட்டக்காரர்கள் என நம்பிக்கையூட்டும் இளம் வீரர்களாக செகான் ஜெயசூர்ய, டசுன் சானக, சிறிவர்த்தன போன்ற வீரர்கள் வெளியில் உட்கார்ந்துள்ளனர். இவர்களிற்கு வாய்ப்பளித்து பார்க்க வேண்டும்.

மூத்தவீரர்கள் ஆடிக்கொண்டிருந்தபோதே பதிலீடுகளை கண்டறிந்திருக்க வேண்டும். சுழற்சி முறையில் மூத்தவர்களிற்கு ஓய்வளித்து புதியவர்களிற்கு இடமளித்து அவர்களை தேறச் செய்திருக்க வேண்டும். எனினும், இலங்கை தேர்வாளர்கள் மிக அடிப்படையான இந்த விடயத்தையே கோட்டைவிட்டுள்ளார்கள்.

இலங்கை கிரிக்கெட்டிற்கு மோசமான காலம் அவ்வளவு விரைவில் தீர்ந்துவிடும் என தெரியவில்லை.

1-ம் பக்க தொடர்ச்சி



கருத்திற்கு இடமில்லை. அதற்காக அவர்களிற்கு மாயமான் காட்டிக் கொண்டிருப்பதையும் ஏற்க முடியாதல்லவா? அவர்கள் உள்ளிட்ட தமிழர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஏதாவது தீர்வுப்பொறிமுறைக்குள் நுழைந்து விட வேண்டும். இதுதான் தற்போதைய நிலையில் தமிழர்களின் இராஜதந்திரமாக இருக்கும்.

சர்வதேச விசாரணையென்ற பெயரில் உள்ளூர் பொறிமுறையற்ற ஒரு விசாரணை சாத்தியமேயில்லையென்ற யதார்த்தத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். மாறாக நல்லிணக்க செயற்பாட்டில் உளப்பூர்வமாக அக்கறை கொண்ட ஒரு அரசு, சர்வதேச விசாரணைகள், மேற்பார்வைகள் இல்லாமலே சிறந்த உள்ளக விசாரணைகளை செய்யலாம். எனினும், தற்போது வரை இலங்கையில் அப்படியான நம்பிக்கைகள் ஏற்படவில்லை.

இப்படியான சிக்கலான நிலையில் நமது அரசியல்வாதிகள் மிக நிதானமாகவும், பொறுப்புணர்வுடனும், பொதுவேலைத் திட்டத்தினடிப்டையிலும் செயற்பட வேண்டும். இந்த சவால்களை எப்படி கடப்பதென்பதை தமிழர்கள் ஒற்றுமையாக சிந்தித்து கடக்க வேண்டும். ஒரு கட்சி செய்வதை இன்னொரு கட்சி எதிர்ப்பதென்ற பாரம்பரியம் இனியும் எமக்கு உதவாது. அதேவேளை, இந்த செயற்றிட்டங்களை முன்னகர்த்துபவர்களும் பலகட்சி ஆலோசனைகளுடன் செயற்படுவதே சிறந்தது. அது வீணாண எதிர்ப்பு, மக்கள் மத்தியில் ஏற்படும் குழப்பம், சந்தேகங்களை தோற்றுவிக்காது.

யுத்தகாலத்தில் மகிந்த ராஜபக்ச அப்படியொரு பொறிமுறையை செயற்படுத்தினார். அதனால்த்தான் யுத்தம் முடியும் வரை ஐக்கியதேசியக்கட்சி, ஜே.வி.பி என்பன ஒத்துழைப்பாக செயற்பட்டன. அரசின் வேலைத்திட்டம் என்னவென்பதை அவை அறிந்து, ஏற்றுக் கொண்டிருந்தன.


எனினும், தமிழர்களிடம் அப்படியொரு பொறிமுறை இதுவரை ஏற்படவேயில்லை. பல சமயங்களில் தமிழ் தலைமைகளிற்கு ஜனநாயக அடித்தளங்களில் இயங்கத் தெரிவதேயில்லையோ என கடந்த காலங்களில் பலமுறை எண்ணத் தோன்றியது. தமிழர்களின் பெரும்பாலான அரசியல் வீழ்ச்சிகள், உள்வீட்டு முரண்களின் பின்னணி ஜனநாயகப்பண்புகளை உதாசீனம் செய்ததுதான்.

இது தமிழர்களிற்கு முக்கியமான காலகட்டம். நமது தலைவர்கள் மாயமான் காட்டப் போகிறார்களா? உருப்படியாக எதையாவது செய்யப் போகிறார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.





# உங்களுக்கு பொருத்தமானதை நீங்களே தெரிவு செய்யுங்கள்...



இவை மெல்லிய மற்றும் அளவான உடலமைப்பு கொண்ட நிறமான பெண்களுக்கு மட்டுமே ஏற்ற கொலர்(collar) சாறி பிளவுஸ் டிசைனஸ். பின்பக்கம் மட்டுமே வெவ்வேறு வடிவங்களில் கழுத்து டிசைன்ஸ் அமைக்க முடியும். நெற் சாறிகளுக்கே பொருத்தமானது.



இது முன்பக்கம் வட்ட வடிவிலும், பின்பக்கம் சதுர வடிவிலும் கழுத்து டிசைன்ஸ் உள்ளது. மெல்லிய உடலமைப்பு கொண்டவர்கள் மற்றும் குண்டான பெண்களும் இந்த டிசைனில் தைத்து அணியலாம். குண்டானவர்களுக்கு கட்டும் பட்டி வைக்காமல் தைத்தால் எடுப்பாக இருக்கும். கொட்டுன், பட்டு சாறிகளுக்கு இவ்வாறு தைக்கலாம்.



நெற் சாறிகளுக்கே இந்த டிசைன்ஸ் ஏற்றது. பிளவுஸின் கழுத்து டிசைன்ஸ் பின்பக்கம் மூடியுள்ளதுடன், முன்பக்கம் மட்டுமே வட்ட வடிவில் உள்ளது. முன்பக்க கழுத்தின் டிசைனை அவரவர் விருப்பத்திற்கேற்ப மாற்றி தைத்துக்கொள்ளவும் முடியும். இந்த வீடிசன் மெல்லியவர்கள் மட்டுமன்றி ஓரளவு குண்டான பெண்களும் அணியலாம்.

இதன் கழுத்து டிசைன்ஸ் ஐங்கோன வடிவில் உள்ளது. நீளக் கை பிளவுஸ் எனபதால் மெல்லிய தோற்றமுடைய உயரமான பெண்களுக்கு இந்த டிசைன்ஸ் பொருத்தமானதாகும். சில்க் சாறிகளுக்கு ஏற்றது.





# சமையலறையை சுத்தமாக வைத்திருப்பது எப்படி?

"வீட்டை கட்டிப்பார் கல்யாணம் செய்துபார் என்று பெரியவர்கள் சொல்வார்கள். வீடு கட்டுவது அவ்வளவு சுலபமான விஷயம் இல்லை. அப்படியே கஷ்டப்பட்டு வீட்டை கட்டினாலும், அதை பராமரிப்பது, அதுவும் சமையலறை பராமரிப்பது இன்றைய பெண்களுக்கு மிகப் பெரிய சவால். காரணம் ஒரு வீட்டின் அழகையும், சுத்தத்தையும் தீர்மானிப்பதில் சமயலறை பிரதான பங்கு வகிக்கின்றது.

ஆனால், பரபரப்பான உலகில் சமயலறைச் சுத்தம் என்பது இன்று பலருக்கு கஷ்ரமான காரியமாகவே உள்ளது. அவசர உலகில் அவசர அவசரமாக சமைத்து எடுத்துக் கொண்டு செல்வோரையே இப்போது அதிகம் காணமுடியும். விடுமுறை நாட்களில் மட்டுமே வீட்டை துப்புரவு செய்வதை வழக்கமாகக் கொண்ட 'நவநாகரீக' காலத்திலேயே நாம் வாழ்கிறோம்.

இருப்பினும், சமயலறயை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பும் பெண்களுக்கு சில யோசனைகள்,

1. சமையலறையில் பழைய மற்றும் உபயோகமற்ற சாதனங்களை தூக்கிப் போடவும். அதற்காக புத்தம் புதிய சாதனங்கள் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. யாராவது பயன்படுத்திய நல்ல நிலையில் இயங்கும் பொருட்களை கூட வாங்கலாம்.
2. தேவையான பாத்திரங்களை தவிர அதிகமாக பாத்திரங்களை குவித்து வைக்கக் கூடாது. அவை சில நேரங்களில் அசௌகரியங்களை ஏற்படுத்தலாம்.
3. சுத்தம் செய்வதற்கான திரவங்களைப் பயன்படுத்தி சமயலறையின் முகப்பு, மூலை முடுக்குகளில் படிந்திருக்கும் தூசுகளையும், கறைகளையும் அகற்ற வேண்டும்.
4. சமைக்கும் போது சாதத்தின் கஞ்சி, கறிகள், கரி போன்றவை வாயு அடுப்பில் படிந்து பார்ப்பதற்கு அலங்கோலமாக இருக்கும். எனவே சமைத்து முடிந்தபின் முதலில் வாயு அடுப்பை பளபளக்கும் வகையில் சுத்தம் செய்துவிடுவது நல்லது. எவ்வளவுதான் சமயலறையை சுத்தம் செய்தாலும் அடுப்பினை சுத்தம் செய்யாமல் இருந்தால் அது சமயலைறையின் அழகையே கெடுத்துவிடும்.
5. சாப்பிட்ட பின்னர் தட்டுக்கள், சமையலுக்கு பயன்படுத்திய பாத்திரங்களை அப்படியே குவித்து வைக்காமல் உடனுக்குடன் கழுவி விடுவது நல்லது.
6. சமயலைறையில் காணப்படும் 'ஸிங்க்' இல் தேங்கிக் கிடக்கும் உணவுத் துகள்கள், எண்ணெய் மற்றும் கழிவுபொருட்களை அகற்றி, ஸிங்கை சவர்கார கரைசல், ஸ்பொஞ்ச் ஆகியவற்றைக்கொண்டு சுத்தம் செய்து விடவேண்டும்.
7. குளிர்சாதனப்பெட்டியின் வெளித்தோற்றத்தில் படிந்து கிடக்கும் அழுக்குகள் குளிர் சாதனப்பெட்டியின் உண்மை நிறத்தையே மாற்றிவிடுகின்றது. எனவே அவற்றை நீக்கி குளிர் சாதனப் பெட்டியை புதுப் பொலிவுடன் வைத்துக்கொள்வதுடன், குளிர்சாதனப் பெட்டியின் உட்புறத்தை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். குளிர் சாதனப் பெட்டியை திறந்தவுடனே எழும் துர்நாற்றத்தை முற்றிலும் தவிர்த்துக்கொள்ள குளிர்சாதனப்பெட்டியில் தேவைக்கு உதவாத வகையில் அடுக்கி வைத்திருக்கும் பழைய பொருட்கள் என்பவற்றை அகற்றிவிடலாம்.
8. சமையலைறயிலுள்ள போத்தல்கள் மற்றும் பலசரக்கு பொருட்களை அடுக்கி வைத்திருக்கும் இராக்கைகள், அலுமாரிகளின் வெளித்தோற்றத்தில் படிந்துகிடக்கும் அழுக்குகளை அகற்றிவிட்டு அவற்றையும் பளிச்சிடும் வகையில் வைத்திருந்தால் சமையலறை அழகாக காட்சியளிக்கும்.
9. சமயலைறையின் தரையில் அழுக்குகள் தேங்கியிருந்தால் துர்நாற்றம் ஏற்படுவது இயல்பு. எனவே அழுக்கு நீக்கி கரைசல்களை பயன்படுத்தி பளபளக்கும் வகையிலும் தரையில் நீர் இல்லாத வகையிலும் சுத்தம் செய்துவிடவேண்டும்.
10. அதேவேளை தரையில் நீர் முதலான திரவங்கள் சிந்தப்பட்டிருந்தால் அதை உடனே துடைத்துவிட வேண்டும். அது சுத்தத்திற்கு மட்டுமல்ல, வழுக்கி விழுதல் போன்ற ஆபத்துகளையும் தவிர்க உதவும்.
11. இவையனைத்தையும் செய்து முடித்தபின்பு குப்பைக் கூடை, தும்புத்தடி, சவல், பாத்திரங்களை பிடிப்பதற்கு பயன்படுத்திய துணிகள் என்பவற்றையும் கழுவி உலர விடுவது சிறந்தது.
12. சாப்பாட்டு மேசையின் நடுவே பழக்கூடை அல்லது சிறிய பூவாஸ் வைத்தால் அழகா இருக்கும்.

# திராட்சைப்பழ ஐஸ்கிறீம்

நமது நாட்டில் உற்பத்தி செய்யும் பழங்களில் ஒன்றான திராட்சையை பழமாக சாப்பிட்டிருப்பீர்கள். வற்றலாக சாப்பிட்டு இருப்பீர்கள். யூஸ் ஆக சாப்பிட்டு இருப்பீர்கள். எத்தனை பேர் ஐஸ்கிறீமாக வீட்டிலே இலகுவாகவும் சுத்தமாகவும் தயாரித்து ருசித்து பார்த்துள்ளீர்கள். கடையில் பெரியவர்களும் விரும்புவது ஐஸ் கிறீம் தரம் எப்படி இருக்குமோ, ஏதாவது கெடுதல் செய்து விடுமோ என்ற எண்ணம் இருப்பவர்களுக்காக வீட்டிலேயே தரமான ஐஸ் கிரீம் தயாரிப்பதற்கான செய்முறைகள் தரப்பட்டுள்ளன. ஐஸ் கிரீம் தயாரிக்கும் போது கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டியவை. ஐஸ் கிறீம் செய்ய வேண்டும் என விரும்புகிறவர்கள் முன்னதாகவே ஃப்ரிட்ஜை டீப்ராஸ் செய்தால் ஐஸ் கிறீம் மிகவும் சீக்கிரமாக செட்டாகும். ஐஸ் கிரீம்




ஃபிரிட்ஜில் வைக்கும்போது மூடி வைக்க வேண்டும். ஃப்ரீஸரில் மட்டுமே வைக்கவும்.. இதோ இந்த செய்முறைய படித்து விட்டு இன்றே உங்கள் வீட்டில் செய்திடுங்கள் திராட்சைப்பழ ஐஸ்கிறீம்.

**தேவையானவை:** பால்பவுடர: 1கப், திராட்சை 1கப், சீனி 1கப், தண்ணீர: 2கப், பிரேஸ் கறீம் 1கப், டோனோவின் எஸன்ஸ் 1 தேக்கரண்டி, ஜி.எம்.எஸ். அரை தேக்கரண்டி, ஸ்டெபிளைசர 1 கேகரண்டி.

**செய்முறை:** கறுப்பு நிற திராட்சை பழங்களை கழுவி சுத்தம் செய்து அதன் பின்னர் விதைகளை நீக்கி கொள்ள வேண்டும். பின்பு சிறிது தண்ணீர் சேர்த்து கொதிக்க வைத்து அதன் பின்னர் இறக்கி வடி கட்டி திராட்சை ஜீஸ் எடுத்முது கொள்ள வேண்டும்.

அதன் பின்பு பால் பவுடரை தண்ணீரில் சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். அதற்குள் இந்த ஜீஸினை ஊற்றி கிறீம் சீனி எசன்ஸ் சேர்த்து இறுதியாக ஸ்டெபிளைசர் சேர்த்து கலந்து தட்டில் ஊற்றி ஆறிய பின்னர் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தெடுக்க வேண்டும்.

தயாராகி விட்டது எமது வீட்டில் தாயாரிக்கப்பட்ட சுத்தமான திராட்சைப்பழ ஐஸ்கிறீம். ருசித்து பாருங்கள் சுவையோ சுவை.



# என்ன அழகு... எத்தனை அழகு...

கு.அனுசா
கலாலயா பயிற்சியகம்

**பேஷியல் செய்தபின் கவனிக்க வேண்டியவை!**

1. பேஷியல் செய்த பின்னர் 24 மணி நேரத்துக்கு முகத்திற்கு சோப், பவுடர், கிறீம் எதுவும் போடக்கூடாது, அதோடு தலைக்கு ஷம்பூ வைத்த முழுகவும் கூடாது.
2. பேஷியல் மசாஜ்ச் (Facial massage) இரு கை விரல்களினாலும் முதலில் தாடையிலிருந்து காது ஓரம் வரைம், பின்னர் மூக்கின் இரு ஓரங்களிலிருந்து காதும் ஓரம் வரையும், வாயின் இரு புறத்திலிருந்து காதுகளின் பின்புறம் வரையும் மசாஜ்ச் செய்யவேண்டும். பின்னர், கழுத்தின் பின்பகுதில் அழுத்தி புள்ளிகளைப் பார்த்து மசாஜ்ச் செய்யவேண்டும். இவ்வாறு முகத்தின் ஒவ்வொரு உறுப்பின் இருபக்கமும் விரல்களால் ஒரே சமயத்தில் மசாஜ்ச செய்யவேண்டும்.
3. ஒரு தேக்கரண்டி cleansing milk அடைம முகத்தில் தடவி 15 நிமிடங்களின் பின்னர் பஞ்சை நீரில் நனைத்து துடைத்தால் அழுக்கு நீங்கும். தினமும் இதனை வீட்டிலேயே செய்யலாம்.



**முகம் அழகாகவும் பளபளப்பாகவும் இருக்க இலகுவான சில டிப்ஸ்**

- தினமும் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும்.
- இரவில் நீண்ட நேரம் விழித்திருக்காது ஆழ்ந்த உறக்கம் அவசியம்.
- கொழுப்பற்ற உணவுகளை உட்கொள்வதுடன், உணவில் அதிகம் உப்பு சேர்ப்பதை தவிர்க்கவேண்டும். பச்சை காய் கறிகள், பழங்கள், விட்டமின் சத்துள்ள பால், முட்டை, கரட், மீன் போன்றவற்றை அதிகம் சாப்பிடவேண்டும்.
- தினமும் காலையில் உடற்பயற்சி செய்தல்.
- சூடான நீரில் சிலதுளி எழும்பிச்சை சாறு கலந்து நீராவி பிடித்தால் சருமத்துவாரம் திறந்து அழுக்குகள் வெளியேறி முகம் மிருதுவாகவும். திறந்த துவாரங்களை மூடுவதற்கு நீராவி பிடித்த பின்னர் குளிர்ந்த பன்னீரால் முகத்தை துடைத்தல் வேண்டும்.
- வீட்டில் தயாரிக்கப்பட்ட 2 தேக்கரண்டி பன்னீர், பசளைக் கீரைச் சாற்றை முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து வெதுவெதுப் பான நீரில் முகத்தை கழுவினால் சருமம் மிருதுவாகும்.
- 2 தேக்கரண்டி கரட் சாற்றுடன் 2தேக்கரண்டி உருளைக்கிழங்குச் சாறு கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரால் கழுவவும்.



# நகப்பூச்சை அகற்ற இலகுவான முறைகள்!

பெண்கள் தங்களது கைகளை அழகாக்க நகப்பூச்சை அடிக்கடி வெவ்வேறு நிறங்களில் மாற்றிக் கொண்டே இருப்பார்கள். இதற்காக, ஏற்கனவே பூசிய நகப்பூச்சை அகற்றவதற்கு கடையில் விற்கும் நகப்பூச்சு ரிமூவரையே (nail polish remover) வாங்கி பயன்படுத்துவார்கள். ஆனால், நம் வீட்டில் இருக்கிற பொருட்களை கொண்டே இலகுவாக நகப்பூச்சை அகற்றலாம்.

- ஏற்கனவே இருக்கிற நகப்பூச்சின் மேல் ஒரு கோட்டிங் நகப்பூச்சை போட்டு உடனே பஞ்சால் துடைத்தால் அது போய்விடும்.
- வினிகரில் பஞ்சை நனைத்து நகத்தில் துடைத்தால் நகப்பூச்சு போய்விடும்.
- வினிகருடன் சிறிது எலுமிச்சை சாறு அல்லது தோடம்பழ சாற்றை சேர்த்து அதில் பஞ்சை நனைத்து நகத்தில் சிறிது நேரம் துடைக்கலாம்.
- ஒரு துண்டு எலுமிச்சையை வெட்டி எடுத்து நகத்தில் தேய்த்தால் அல்லது சற்று சூடான நீரில் கையை 3 6 நிமிடம் ஊற வைத்து, பின் எலுமிச்சைத் துண்டால் துடைத்தால் நகப்பூச்சு போய்விடும்.








# மைற் பீடையை கட்டுப்படுத்தி தெங்கு விளைச்சலை அதிகரிப்போம்



திரு.ஜெ. சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்,
தென்னைப் பயிர்ச் செய்கைச்சபை
கிளிநொச்சி

மைற்பீடையை கட்டுப்படுத்தி தெங்கு விளைச்சலை அதிகரிப்போம். தென்னையில் பாளைகள் வந்துவிரிந்தவுடன் குரும்பட்டிகள் உற்பத்தியாகும் ஏனைய பருவநிலைகளில் "சேரியாகுரோரோனிஸ்"(Aceriaguerreronis) எனும் விஞ்ஞானபெயருடைய மைற் (MTE) பீடைதாக்குகின்றது. இதுஆத்திரோபோடா இனத்தில் இனப்பெயர் "இலீஜீயோபைட்" என்னும்பாகுபாட்டைச்சேர்ந்தஓர் உயிரி ஆகும். தேங்காய் உற்பத்தியில் பொருளாதாராறிதியில் மிகவும் பாதிப்பினை ஏற்படுத்தும் பீடைஆகும். இதனைக் கண்ணினால் பார்க்கமுடியாது. நுணுக்குக் காட்டியால் பார்வையிட முடியும்.

குரும்பையிலிருந்து தேங்காய் வரை முகிழ்பகுதிக்குள் கூட்டமாக வெள்ளை நிறமாகக் காணப்படும். இவை 36 மாதங்கள் வரையான தென்னங்குரும்பட்டிகளின் மேற்றோல் இழையங்களை உண்ணுவதனால் தேங்காயின் மேற்பகுதி



தாக்கப்பட்டகுரும்பை



கறாவல் தோற்றமுடையதாக மாற்றமடைகின்றது. அதுமட்டுமல்லாமல் தேங்காய்களின் பருப்பு உள்ள பகுதியும் சிறியதாக மாற்றமடையும்.

**மைற் (MTE)**

ஐமற் தாக்கத்தின் தீவிர நிலையில் தேங்காய்கள் முதிர்வடையாமலே மரத்திலிருந்து விழும். இப்பீடை காற்றினால் பரம்பலடைகின்றது. தாக்கத்தின் தீவிர நிலையில் தேங்காயின் வெளிப்புறத்தோலில் ஆழமானவெடிப்புக்கள் தோன்றி, விரும்பத்தகாத வடிவத்தினைக் கொண்டிருக்கும். அதுமட்டுமல்லாமல் தேங்காய் கொப்பறா உற்பத்திகளில் வீழ்ச்சி ஏற்படுகின்றது.

மைற் பரம்பலினைக் குறைத்து சேதத்தினைக் கட்டுப்படுத்தும் முக்கியமான இரு வெவ்வேறான கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்துகின்றோம். இயற்கைநாசினிகளைக் கொண்டும், நவீனமுறையிலான உயிரினவியல் கட்டுப்பாடு மூலமும் கட்டுப்படுத்தலாம்.

**இயற்கைநாசினி முறை 1**

சல்பர்பாம் ஒயில் அல்லது மரக்கறி எண்ணை கலவை விசிறல்.

**ஒரு லீற்றர் கலவைதயாரிக்கத் தேவையானபொருட்கள்.**

1. பாம் ஒயில் 200மி.லீற்றர்.
2. நீர் 800மி.லீற்றர்
3. சவர்க்காரத்துலீள் 12 கிராம் (2 மேசைக்கரண்டி )
4. கந்தகம் ( சல்பர்) (ஒருமேசைக்கரண்டி) (நீரில் கரையக்கூடியது)

**தயாரிக்கும் முறை.**

நீரில் சவர்காரத்துலீள், கந்தகம் என்பவற்றினை நன்றாகச் சேர்த்து கரைக்க வேண்டும். பின்பு இறுதியில் பாம் ஒயிலைச் சேர்த்து ஒன்றாக்கவும். இதனை ஒரு கைத்தெளி கருவி யில் விட்டு மரமேறும் ஒருவரிடம் கொடுத்து, வட்டில் எல்லா குரும்பைகளுக்கும, தேங்காய்களுக்கும் விசிறச்செய்யவும்.

**இயற்கைநாசினி முறை 2**

தேவையான பொருட்கள்.

1. வெள்ளைப்பூடு (உள்ளி) 20கிராம். அரைகப் நீர்
2. சவர்க்காரம் 5 கிராம். அரைகப் நீர்
3. வேப்பெண்ணை 20 மி.லீற்றர்.

முதலில் வெள்ளைப் பூண்டினை தோலுரித்து கிரைண்டர் அல்லது அம்மியில்இட்டு,அரைகப்தண்ணீர் விட்டு நன்றாக அரைக்கவும். பின்பு அக்கரைசலினை(பருத்தி) கொட்டின் துணி உதவியுடன் வடிக்கவும். இக்கரைசலினை வேறாக வைக்கவும். பின்பு சவர்க்காரத்தினை 5 கிராம் அளவு சீவி எடுத்து அரைக்கப் நீரில் கரைக்கவும். உள்ளிக் கரைசலையும் சவர்காரக் கரைசலினையும் ஒன்றாகச் சேர்க்கவும். இதன் பின்பு 20மி.லீற்றர் வேப்பெண்ணையையும் அதனுள் சேர்த்து ஒருபோத்தல் நீரில் ஜதாக்கவும். இக்கலவையினை கைத்தெளிகருவி ஒன்றினுள் இட்டு மரமேறும் ஒருவரிடம் கொடுத்து குரும்பட்டியின் எல்லா பருவநிலைகளுக்கும் படத்தக்கதாக விசிறவும்.

குறிப்பு : **கலவை விசிறுவதற்கு முன்பு குலையிலுள்ள எல்லா பருவநிலையிலுமுள்ள காய்ந்த குரும்பட்டிகளை வெட்டி அப்புறப்படுத்தவும்.**

**உயிரினவியல் கட்டுப்பாடு.**
**மைற் தாக்கத்திற்கு"பராக்கி" பரிகாரம்**

தென்னை அசோஜீயாமைற்றினைக்கட்டுப்படுத்தஉயிரினவியல் ரீதியாக இரைகௌவி யான "நியுசிலஸ் பராக்கி" என்னும் உயிரியை இன விருத்தி செய்து பொலித்தீன் பைக்கற்றுகளில் அடைக்கப்பட்டு தென்னைச் செய்கையாளர்களுக்கு விநியோகிக் கப்பட்டுவருகின்றது. 4 மரத்திற்குஒரு பைக்கற் என்ற அளவில் ஏக்கருக்கு 16 பக்கற்றுகள் தேவைப்படும்.

**குறிப்பு: இப் பக்கற்றிலுள்ள "பராக்கி" எனும் உயிலீஜீயினை வெயில் அதிகமாகவுள்ள நேரத்தினைத் தவிர்த்து மாலை நேரங்களில் தென்னந்தோட்டங்களில் 4 மரத்திற்கு ஒரு பக்கற் என்ற அளவில் மரத்தில் ஏறி வட்டுப்பகுதியில் பக்கற்றின் மூலைப்பகுதியினை வெட்டி தடித் துண்டால் தட்டிவிடவும். இவ் இலகுவான முறையின் மூலம் மைற்றினைக் கட்டுப்படுத்த முடியும்.**

எனவே, இவ் இரைகௌவி பக்கற்றுகள் தேவையானோர் ஒவ்வொரு புதன்கிழமையிலும் அவ்வப்பகுதியிலுள்ள கமநல சேவை நிலையத்தில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச் செய்கைச்சபை, தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரைச் சந்தித்து பெற்றுக் கொள்ளமுடியும்.

**02.09.2015 அன்றைய தெங்கு தினத்தையொட்டி இக்கட்டுரை வெளியாகிறது.**





தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்டைபறிச்சான் செயற்பாட்டாளர் ஜீவேந்திரன் தலைமையில் கட்டைபறிச்சான் மற்றும் கூனித்தீவைச் சேர்ந்த 540 குடும்பங்களுக்கு கட்டைபறிச்சான் பிரஜைகள் அமைப்பினால் தென்ங்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டது.

சி.திவாகரன்
thivaharan07@gmail.com

# கழிவுகளால் ஒளிரும் வீடு

## பசளையில் இருந்து எரிவாயு எடுக்கும் யாழ்வாசி

உயிர்வாயு தொட்டியை உருவாக்குவதற்கு ஊக்குவிப்புப் பணமாக ரூபா ஐம்பதாயிரத்தை கால்நடை ஆணையகம் அவருக்கு வழங்கியது.





தனது பண்ணையிலிருந்து கிடைக்கும் மாட்டெரு, கோழி எச்சங்களை கொண்டு வீட்டிற்கு தேவையான மின்சாரம் மற்றும் எரிவாயுவை தயாரித்து கொள்கிறார் ஒரு யாழ்வாசியென்றால் நீங்கள் நம்புகிறீர்களா?. நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும் ராஜேந்திரனின் கதையை கேட்டால். உங்களை ராஜேந்திரனின் வீட்டிற்கே அழைத்து செல்கிறோம் வாருங்கள்.

வட்டுக்கோட்டையில் வசிக்கும் ராஜேந்திரன் பண்ணையில் ஆடு, மாடு கோழி என்பவற்றை வளர்க்கிறார். விவசாயச் செய்கையிலும் ஈடுபட்டு வருகிறார்.

காஸ் விலையும் மின்சாரக் கட்டணமும் மனிதனுக்கு பெரும் சுமையாகி விட்டபோதும் அந்தச் சுமைகளுக்கு சற்றும் அஞ்சுவதில்லை இவர். நாம் குப்பையாகக் கருதி வீசியெறியும் கழிவுகளை மூலதனமாகக் கொண்டு மிக இலகுவான பொறிமுறை ஒன்றினூடாக தனக்குத் தேவையான மின்சாரம் மற்றும் எரிவாறு தேவைகளை நிறைவு செய்கிறார்.

பண்ணையில் அவர் வளர்க்கும் விலங்குகளின் எச்சங்களும் தோட்டத்தில் கிடைக்கும் இலை, குழை கழிவுகளும் இவரின் எரிவாறு தொட்டிக்கான மூலப்பொருட்கள்.

2010ஆம் ஆண்டு ராஜேந்திரனின் பண்ணையைப் பார்வையிட்ட கால்நடை ஆணையகம் இப்பண்ணையில் இருந்து பெறப்படும் எருக்களையும், எச்சங்களையும் கொண்டு உயிர்வாயு தயாரிக்கும் யோசனை அவருக்குக் கூறியது.

ராஜேந்திரனும் அந்த யோசனைக்கு உடன்பட்டார். உயிர்வாயு தொட்டியை உருவாக்குவதற்கு ஊக்குவிப்புப் பணமாக ரூபா ஐம்பதாயிரத்தை கால்நடை ஆணையகம் அவருக்கு வழங்கியது.

அதனைக் கொண்டு உயிர்வாயுத் தொட்டியை உருவாக்கும் வேலையை ஆரம்பித்தார். ஆனால் அத்தொட்டியை பூரணமாக நிறைவு செய்ய இரண்டு இலட்சம் ரூபா முடிந்தது எனக் கூறுகின்றார்.

சீமெந்து, மணல், கல் மற்றும் இரும்புக் கம்பிகளை பயன்படுத்தி ஏழு அடி நீளமும் மூன்றறை அடி அகலமும், ஐந்து அடி ஆழமும் கொண்டதாக முற்று முழுதாக மூடிய நிலையில் அத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

உயிர்வாயுத்தொட்டியில் இரு புறமும் இரண்டு சிறு தொட்டிகளும் உள்ளன. ஒரு சிறு தொட்டி வழியே எருக்கள், எச்சங்கள், இலை, குழைக் கழிவுகள் என்பன கொட்டப்படுகின்றன. மற்றையது நொதித்து வெளிவரும் பசளைகளை வெளியேற்றுவதற்கு அமைக்கப்பட்டது.

நேரடியாக பண்ணைத் தொழுவத்தில் இருந்து வாய்க்கால் வழியாகவும் உயிர்வாயு தொட்டிக்குள் எருவை செலுத்தலாம்.

ஆனால் இவர் அந்த முறைப்படி எருவை செலுத்தவில்லை. அள்ளப்பட்ட எருவை சிறு தொட்டியினுடாகவே செலுத்துகின்றார்.

சிறு தொட்டியின் ஊடாக செலுத்தப்பட்ட எரு உயிர்வாயுத் தொட்டியினுள் சென்று நொதித்தலுக்குள்ளாகின்றது. நொதித்தலுக்குள்ளான எருவில் இருந்து உயிர்வாயு உருவாகின்றது.

உயிர்வாயுத் தொட்டியில் பொருத்தப்பட்டிருக்கும் குழாயினுடாக எரிவாயு வெளியேற்றப்பட்டு சமையல் எரிவாயுவாகவும், தோட்டத்திற்கு நீர் பாய்ச்சும் நீர்ப்பம்பியின் எரிபொலீருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது.



அத்துடன் பண்ணைத் தொழுவங்கள் மற்றும் கோழிக் கூடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் பெற்றோல்மக்ஸ் விளக்குகளை ஒளிரவைக்கவும் இந்த உயிர்வாயு பயன்படுத்தப்படுகின்றது.

சமையல் அறைக்கு எரிவாயு அடுப்பை எரிய வைப்பதற்காக கொண்டு செல்லும் குழாயில் உள்ள திரவத்தின் அளவைக் கொண்டு தொட்டியில் இருந்து பெறப்படும் உயிர்வாயுவின் அளவைக் கணிப்பிடுகிறார் ராஜேந்திரன்.

அந்த அளவீட்டைக் கொண்டே எரிவாயு தொட்டிக்குத் தேவையான கழிவுகளை இடுகிறார்.

இந்த உயிர்வாயுத் தொட்டியால் மாதாந்தம் பதினைந்தாயிரம் முதல் இருபதாயிரம் வரை தனக்கு மீதமாவதாகவும் இவர் தெரிவிக்கிறார்.

உயிர்வாயு மட்டுமல்ல. இந்த பொறிமுறை மூலம் விவசாயத்திற்கு பசளையும் கிடைக்கின்றது. உயிர்வாயுத்தொட்டியில் இடப்பட்ட எருக்களும், எச்சங்களும், இலை, குழைக் கழிவுகளும் நொதித்தலுக்குஉள்ளான பின்பு பாணியான நிலையில் வெளியேறும். அவற்றை தனது தோட்டத்துக்கு பசளையாக இடுகிறார் ராஜேந்தின்.

வெயில் படக்கூடிய இடத்தில் இந்த பாணியை பரவலாக ஊற்ற வேண்டும். வெயிலில் நன்றாக காய்ந்துவிடும். காய்ந்த பின்பு மா போல் ஆகிவிடும். அதன் பின்பு விற்பனைக்கு உகந்த பசளையாக இது மாறிவிடும்.

ஆனால் தன்னிடம் தோட்டம் இருப்பதால் பாணிநிலையிலே தோட்டப்பயிர்களுக்கு அவற்றை ஊற்றிவிடுவேன் என்கிறார் ராஜேந்திரன்.

உயிர்வாயு ராஜேந்திரனின் ஊதியத்தை மிச்சப்படுத்துகின்றது. தோட்டத்திற்கு பசளையும் ஆகின்றது.

ஏன் நீங்களும் இப்படி முயன்று பார்க்க கூடாது?



# வெள்ளை நிறத்தில் நாவல்!

நாவல்பழம் என்றவுடன் நாம் எல்லோர் மனதிலும் தோன்றும் நிறம் நாவல்தான். ஆனால் வெள்ளை நிறத்திலும் நாவல்பழம் இருக்கிறது என்றால் நம்புவீர்களா?

யாழ்.தென்மராட்சி பிரதேசத்திலுள்ள சாவகச்சேரி நகரின் தென்பகுதியிலுள்ள மறவன்புலோக் கிராமத்தில் அமைந்துள்ள நீலசோதி பெரியதம்பிரான் ஆலயத்தில்தான் உள்ளது இந்த வெள்ளை நாவல் மரம். சுமார் 200 ஆண்டுகள் பழைமை வாய்ந்த நாவல் மரம் இன்னமும் பல கிளைகளுடன காய்த்துக் குலுங்குகிறது. பழத்தின் காய் பச்சை நிறமாகவும், பழம் வெள்ளை நிறமாகவும் காட்சியளிக்கும்.

நாவல்மரத்தின் கீழ்ப் பகுதியில் காணப்படும் மரப்பொந்துக்குள் வெள்ளை நிற நாகம் ஒன்று பல வருடங்களாக வாழ்ந்து வருவதாகவும், யாரும் இந்த பாம்மை எளிதில் பார்த்துவிட முடியாதெனவும் குறிப்பிட்ட கிராம மக்கள், ஆலயத்தை பரம்பரையாக பூசித்து வருபவர்களுக்கே நாகம் காட்சி கொடுத்துள்ளது என்றனர்.

1999 ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக தென்மராட்சி மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்திருந்த நிலையில், அந்தக் கிராமத்திலுள்ள மக்களின் சொத்துக்கள் மட்டுமின்றி தென்னை, பனை உட்பட பயன்தரு அனைத்து மரங்களும் அழிவடைந்திருந்தபோதும் இந்த வெள்ளை நாவல்மரம் மட்டும் எந்தவித சேதமுமின்றி அதே கம்பீரத்துடன் காட்சியளிக்கிறது.

கடும் பச்சை நிறக் காய்களையும், வெள்ளை நிறப்பழங்களையும் கொண்டுள்ள இந்த பழங்கள் வருடத்திற்கு ஒரு முறை மட்டும் கிடைக்கும் இந்தப் பழங்களை இந்த ஊர் மக்கள் மட்டுமன்றி வேறு இடங்களில் வசிப்பவர்களும் தேடிவந்து வாங்கிச் செல்கின்றனர்.



## பழைய நமீதா

நமீதாவை தமிழ் திரையுலகமும், ரசிகர்களும் கிட்டத்தட்ட மறந்துவிட்டார்கள் என்ற நிலையில், சில நாட்களின் முன்னர் திடீரென சென்னையில் பத்திரிகையாளர்களின் முன்னாள் தோன்றினார் நமீதா. என்ன ஆச்சரியம், அதே பழைய நமீதா. சமீபகாலமாக ஊதுஊதென உடல்ஊதிப் போயிருந்த நமீதா ஆளே மாறி, ஸ்லிம்மாக வந்து நின்றார். அப்படியே பழைய நமீதாவை பார்த்தது போலிருந்தது. 92 கிலோ வரை ஊதிப் போயிருந்த நமீதா 25 கிலோ எடையை குறைத்து விட்டதாக கூறப்படுகிறது. அந்த சந்திப்பில் பேசியபோது, அரசியலிற்கு வருவேன் என அடித்துக் கூறினார். 'நிச்சயமாக அரசியலுக்கு வருவேன். ஆனால் எந்த கட்சியென்றெல்லாம் முடிவெடுக்கவில்லை. ஆனால் எந்த கட்சியென்றெல்லாம் முடிவெடுக்கவில்லை. ஆனால் கண்டிப்பாக அரசியலுக்கு வருவேன்' என்றார். அத்துடன், தமிழ்நாட்டை விட்டு எங்கும் செல்லமாட்டேன் என்றும், என் உழைப்பு, சேவை எல்லாம் தமிழ்நாட்டுக்குத்தான் என்றும் கூறினார்.

## சின்னாபின்னமான சார்மி

ரசிகர் ஒருவரிடம் சிக்கி சின்னாபின்னாமாகியுள்ளார் சார்மி. ஐதராபாத்தில் உள்ள தனியார் அமைப்பொன்று ஏற்பாடு செய்த விருந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள சென்ற சமயத்திலேயே சார்மிக்கு இந்த கதி நேர்ந்துள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு சற்று தூக்கலான கவர்ச்சி உடையில் சார்மி சென்றிருக்கிறார். கவர்ச்சி சார்மியை கண்டதும், அவரை கூட்டம் மொய்க்கத் தொடங்கியுள்ளது. ஆட்டோகிராப் கேட்டுள்ளனர். சார்மி கொடுத்துள்ளார். ஒரு ரசிகர் உணர்ச்சிவசப்பட்டு, செல்பி எடுக்க வேண்டுமென அடம்பிடித்துள்ளார். போனால் போகட்டுமென சார்மியும் அவருடன் போஸ் கொடுத்துள்ளார். இந்த சமயத்தில் அவர் எல்லை மீறி நடந்துள்ளார். சார்மியின் கையைப்பிடித்து, அவரை கட்டியணைக்க முயன்றுள்ளார். ஆத்திரமடைந்த சார்மி அவரை தள்ளிவிட்டுள்ளார். ஆத்திரமடைந்த சார்மி, அது பற்றி நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடம் முறையிட்டார். இதற்குள் அங்கு கூடியவர்கள் அந்த ரசிகரை அடித்து உதைத்து விரட்டியுள்ளனர்.





## ஹீரோக்களுடன் நெருங்கிப்பழகாத அசின்

அசின் என்றால் கிசுகிசு என்பதே ஒரு காலத்தில் வாடிக்கையாக இருந்தது. அசின் கோடம்பாக்கத்தை விட்டு வெளியில் செல்லாதவரை ரொம்ப அடக்கஒடுக்கமான பெண்ணாகத்தான் இருந்தார். எந்த வம்பு தும்பிற்கும் சென்றதில்லை. ஒரு கிசுகிசு கிடையாது. ஆனால் எப்பொழுது ஹிந்திக்கு சென்றாரோ, அன்றிலிருந்து கதை மாறிவிட்டது. நாளொரு கிசுகிசு வீதம் வந்தது. ஆரம்பத்தில் சல்மான் கானுடக் இணைத்து பேசப்பட்டார். இருவரும் உருகிஉருகி காதலிப்பதாகவும், சொகுசு பங்களாவை சல்மான் பங்களித்தார் என்றும் கிசுகிசுக்கப்பட்டது. பின்னர் அபிஷேக் பச்சனுடன் நெருக்கம் என கிசுகிசு வந்தது. ஆனால் அசின் அசரவில்லை. இது பற்றி அலட்டிக் கொள்ளாமல் இருந்தார். இப்பொழுது அவருக்கு திருமணம் நடக்கவுள்ளது. மொபைல் நிறுவன அதிபரான ராகுல் சர்மாவை திருமணம் செய்யவுள்ளார். திருமணம் நிச்சயமானதாலோ என்னவோ கிசுகிசுக்கள் பற்றி வாய் திறந்துள்ளார். 'சில வதந்திகள் என்னைப்பற்றி வந்தன. அதற்காக நான் கவலைப்படவில்லை. எந்த ஹீரோவுடனும் நான் நெருங்கிப்பழகியதில்லை. தொழில்ரீதியான தொடர்பு மட்டுமே இருந்தது. நான் எப்பொழுதும் ஒதுங்கியே இருந்தேன். தொடர்ந்தும் நான் நடிப்பேன்' என்றார்.



## ஜீவாவிற்கும் கிடைத்தது ரஜினிபடம்

ரஜினிகாந்த் நடித்த பழைய படப்பெயர்கள் மீது தற்போது நடிகர்களிற்கு குறியாக உள்ளது. பில்லா, மாப்பிள்ளை, முரட்டுக்காளை, நான் மகான் அல்ல, பாயும் புலி வரிசையில் இறுதியாக இணைகிறது போக்கிரி ராஜா. 1982இல் ரஜினி, ஸ்ரீதேவி நடித்து வெளியான படம். ஏ.வி.எம் தயாரிப்பில் வெளியானது. இந்த படத்தின் பெயரை தற்போது ஜீவா வாங்கியுள்ளார். ஜீவா தரப்பு கேட்டதும், அனுமதி சுலபமாக கிடைத்ததாக கூறப்படுகிறது. இந்த படத்தில் ஜீவாவின் ஜோடியாக ஹன்சிகா நடிக்கிறார்.



### விருந்து தர காத்திருக்கும் ராய் லட்சுமி

தெலுங்கில் பவன் கல்யாணின் நடிப்பில் வெளியாகி சக்கைபோடு போட்டது 'கப்பார் சிங்'. இதன் இரண்டாம் பாகம் தற்போது உருவாகி வருகிறது. இதில் பவனின் ஜோடியாக அனிஷா அம்ரோஸ் நடித்து வருகிறார். இதன் படப்பிடிப்புக்கள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. இதன்போது சற்று கவர்ச்சி தூக்கலான பாத்திரமொன்றை திடீரென உருவாக்கி புகுத்தியுள்ளனராம். இதற்கு யார் பொருத்தமாக இருக்குமென வலைவீசி தேடி.. இறுதியில் ராய் லட்சுமியை பிடித்துள்ளனர். இருவருக்கும் ஒரு பாடலும் உள்ளதாம். இதுபற்றி ராய் லட்சுமி கூறும்போது 'இது எனக்கு பெரிய உற்சாகமாக உள்ளது. அவருடன் நடனமாடுவதை எதிர்பார்த்து காத்திருக்கிறேன். என்னுடைய ரசிகர்களிற்கு இது பெரிய விருந்தாக இருக்கும் என நம்புகிறேன்' என்றார்.



### அனுபமாவின் ஆபாசப்படம்

மலையாளத்தில் மெகா ஹிட்டான 'பிரேமம்' படத்தில் நடித்தவர் அனுபமா பரமேஸ்வரன். நல்ல நடிகையென்ற பாராட்டையும் பெற்றார். ஒருவர் நன்றாக பெயர் எடுப்பது பலரிற்கு பிடிக்காதே. தங்கள் கைவரிசையை காட்டிவிட்டார்கள். அனுபமாவின் ஆபாசப்படம் என இணையத்தில் படங்களை வெளியிட்டனர். அண்மைநாட்களாக நடிகைகளிற்கு பெரும் தலைவலியாக மாறிவிட்ட விடயம் இது. யாரோ சில வக்கிர எண்ணமுடையவர்களின் வஞ்சகவலையில் சிலர் அறியாமல் வீழ்கிறார்கள். அப்படி விழாதவர்களை மார்பிங் மூலம் பழிவாங்குகிறார்கள். இதனால் அனுபமா கொதித்து போயுள்ளார். சமீபத்தில் ஆஷா சரத் இந்த பிரச்சனையை தைரியமாக எதிர்கொண்டு, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தியதைப்போல தானும் தைரியமாக எதிர்கொள்ளப் போவதாக கூறியுள்ளார்.

# டூரிங் டாக்கீஸ்



### இரண்டாவது நாயகியாகும் நிக்கி

நிக்கி கல்ராணிக்கு தமிழில் நல்ல வாய்ப்புக்களிற்காக காத்திருந்தார். ஆனால் அதுவரை பெரிய ஹீரோக்களின் படங்கள் அமையவில்லை. இப்பொழுது இரண்டு பெரிய படங்கள் அமைந்துள்ளன. ஆனால் இரண்டிலும் அவருக்கு இரண்டாவது ஹீரோயின் வேடம்தான். 'டார்லிங்' படத்தில் ஜி.வி.பிரகாஷ் ஜோடியான அறிமுகமானவர் நிக்கி கல்ராணி. அந்த படத்தை தொடர்ந்து அவருக்கு நிறைய வாய்ப்புக்கள் வந்தபடிதான் உள்ளன. பாபி சிம்ஹாவுடன் 'கோ 2' இல் நடித்து வருகிறார். ஆனால் எதிர்பார்த்த மாதிரி பெரிய ஹீரோக்களிடம் இருந்து அழைப்ப வந்தபாடாக இல்லை. இந்தநிலையில்த்தான் அருள்நிதியின் புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். மலையாளத்தில் 'மெமோரிஸ்' என்ற படம் வெளியாகவுள்ளது. அதன் தமிழ் ரீமேக்கில் நடிக்கத்தான் நிக்கி ஒப்பந்தமாகியுள்ளார். மலையாள 'மெமேரிஸ்' இல் ப்ரிதிவிராஜுடன் மியா ஜார்ஜ், மேக்னா ராஜ் என இரண்டு நாயகிகள். தமிழில் ஏற்கனவே மேனால் கஜ்ஜார் உறுதியாகி விட்டார். இரண்டாவது நாயகியாக நிக்கி ஒப்பந்தமாகியுள்ளார். ஏற்கனவே ஜீவாவின் படமொன்றிலும் நிக்கி இரண்டாவது நாயகியாக ஒப்பந்தமாகியுள்ளார்.

## இணைய ஜன்னல்

**Shajahan**
ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கொள்வனவு செய்யும் நெல்லினை, மத்தல மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் களஞ் சியப்படுத்துவதற்கான அனுமதி கிடைத்துள்ளது நெல் சந்தைப்படுத்தும் சபையின் தலைவர் எம்.டி. திஸாநாயக்க.
# இதெல்லாம் வச்சித்தான் இலங்கையை ஆசியாவின் ஆச்சரியம் என்டு சொல்றோம், வௌங்குதா? #

**குகன் குகா**
ஹநண்பர்களை
பக்கத்தில வைச்சுக்க
எதிரிகளை இன்னும்
பக்கத்தில வைச்சுக்க
மிக முக்கியம் இத எல்லாம்
மறக்காம வைச்சுக்க

**ரஜிந்தன்**
என்ன செய்கின்றோம்
என்றே புரியவில்லை
இருப்பினும் நாங்கள் ஒரே பிசி
என்ன வாழ்க்கைடா இது.

**Soory Mahendrarajan**
பழுதான பண்ணும்
பாரபட்சம் காட்டும்
அன்பும் ஒண்ணு ஃபுரோ...
அதை எடுத்து திங்கவும் கூடாது
இதை புடிச்சு தொங்கவும்
கூடாது

**Vanna Serr**
உள்ளூர் கிழவியை அலங்கரித்து உலகஅழகிப்பேட்டிக்கு அனுப்புறதைப்போல இருக்கு இந்த மோடியும் ஹிந்தியும் படும்பாடு.

**Rimaz Ahamed**
"ராத்தாட கல்யாணம் முடிஞ்சி. தம்பிட File மேல வந்துட்டு. பொண் ஒண்டு பாப்பமா?" அங்கிள் கேக்க,
"அங்கிள் உங்கட மகளுக்கும் 20 வயசு ஆச்சுல்ல?" ன்னேன். அங்கிள் நழுவி போய்ட்டாரு.
உன் மகளுக்கு மட்டும் நல்ல மாப்பிள்ள வேணும், அடுத்தவன் மகள்ன்னா இழக்காரமா???

**மன்னர் அமுதன்**
ஜனாதிபதித் தேர்தல்: எதிரி தெற்கில் இருக்கிறான்
பாராளுமன்றத் தேர்தல்: எதிரி ஊருக்குள்ள தான் இருக்கிறான் (சைக்கிள் ஸ்டை வீடு)
உள்ளூராட்சி: எதிரி வீட்டுக்குள்ள தான் இருக்கிறான்

**Briyanthy Arumaithurai**
நேர்மையற்றவர்களின் கற்பனை மிகப்பயங்கரமானது. வரலாறுகளைக்கூட திரித்துவிடும் வல்லமை படைத்தவை.
# வரலாற்றைக் காவும் ஊடகமாக எழுத்தைக் கொள்வதில் நம்பிக்கை இழந்து கொண்டிருக்கின்றேன்.

**Ashroff Shihabdeen**
ரஸூலுல்லாஹ்வுக்குப் பிறகு இன்னொரு நபி வரமாட்டார் என்று அறிவிக்கப்படாதிருந்தால் ஏகப்பட்ட மனிதர்கள் தம்மைத்தவிர வேறு புனிதர்கள் இல்லையென்று சொல்லிக் கொண்டு "நான்தான் நபி" என்று கிளம்பியிருப்பார்கள்!



### கடன் வாங்க முன்னர்

- ✓ பலவிதமான கடன்கள் உண்டு. உங்களுக்கு தேவையான கடனைத் தெரிவுசெய்யுங்கள்.
- ✓ பெறப்போகும் கடன், அதன் வட்டி வீதம், கடன் காலப்பகுதி தொடர்பான முழு விபரங்களையும் அறிந்துகொள்ளுங்கள்.
- ✓ கடன் விண்ணப்பத்தை நியாயப்படுத்தக்கூடிய தெளிவான காரணமும், விண்ணப்பத்திற்கு வலுச்சேர்க்கும் போதியளவு ஆவணங்களும் உங்களிடம் இருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# இல்லை என்ற கவலை இல்லை...

## (ஏசியா எசட் ஃபினான்ஸ் பி.எல்.சி)

காலத்தின் மாற்றத்திற்கேற்ப இன்றைய நவீன வாழ்வியல் முறையில் ஒவ்வொரு மனிதனுக்கும் பணத்தின் தேவை பன்மடங்கு அதிகரித்துள்ளது. புதிதாக தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு, வாகனம் ஒன்றை வாங்குவதற்கு, வீடு ஒன்ற வாங்க, வீட்டிற்கு தேவையான பொருள்களை வாங்க என ஏராளம் தேவைகள் உள்ளன. இந்த தேவைகளை பூர்த்திசெய்வதற்கு பணம் இல்லை என்பதே பலருடைய கவலை.

சிலர் கடன் வாங்கி தம் தேவைகளை நிறைவேற்றுகின்றனர். பலருக்கு கடன் வாங்குவது என்றாலே பயம் வந்துவிடும், கடன் வாங்குவது கெட்ட பழக்கம் என்றும், தவறு என்றும் நினைக்கின்றனர். எதற்காக கடன் வாங்குகிறோம்? வாங்கும் பணத்தை ஆக்கபூர்வமாக எப்படிச் செலவழிப்பது? வருமானத்தை எப்படிப் பெருக்குவது? என்பதில் தெளிவு இருந்தால் கடன் வாங்குவது கெட்ட பழக்கமே அல்ல.

ஆனால், தற்போது பணம் இல்லை என காத்திருக்கவோ, கவலைப்பட வேண்டியோ தேவையில்லை வடக்கு மாகாணத்தில் பெருகியுள்ள வங்கிகள், ஃபினான்ஸ் கம்பனிகள், லீசிங் கம்பனிகளில் பல வழிகளில் குறைந்த வட்டியில் கடனைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், தவணை முறைக் கட்டணங்களில் வாகனங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

அந்தவகையில் கொழும்பில் பிரதான காரியாலயத்தையும், நீர்கொழும்பு, களுத்துறை, கம்பஹா, மொறட்டுவ, குருநாகல், காலி, வென்னப்புவ, திருகோணமலை, மட்டக்களப்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் பல்வேறு கிளைகளையும் கொண்டு தனது சேவையினை வழங்கிவரும்

**1 இலட்சம் தொடக்கம் 30 இலட்சம் வரை வழங்கப்படும் கடனை ஃபினான்ஸ் கம்பனியால் கேட்கப்படும் ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும். இந்தக் கம்பனியால் வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.**

ஏசியா எசட் ஃபினான்ஸ் பி.எல்.சி (Asia Asset Finance P.L.C) நிதி நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு கடன்களை வழங்குவதுடன், நிலையான பண வைப்பு, தங்க நகை அடவு, லீசிங் வசதி என்பவற்றையும் வழங்குகின்றது.




யாழ்.மாவட்டத்தில் யாழ்.நகரில் மட்டும் இயங்கி வந்த இந்தக் கம்பனி வாடிக்கையாளர்களின் அதிரிப்பு மற்றும் அவர்களின் நன்மை கருதி சாவகச்சேரி நகர் மற்றும் பருத்தித்துறை பிரதேசத்திலும் தனது கிளையை விஸ்தரித்துள்ளதாக தெரிவித்த சாவகச்சேரிக் கிளையின் முகாமையாளர் சபாரத்தினம் கருணாகரன், தினமும் நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்கள் தமது கிளைக்கு வந்துசெல்வதாகக் குறிப்பிட்டார்.

### நிலையான வைப்பு (Fixed Deposit)

நீண்டகாலத் தவணையில் பணத்தை வைப்பிலிட்டு உயர் வட்டியைப் பெற்றுக்கொள்ளும் வசதியை இந்தக் கணக்கு வழங்குகிறது. 1 தொடக்கம் 3, 3 தொடக்கம் 6 அல்லது ஒன்று முதல் ஐந்து வருடங்களுக்கான தவணை வைப்புக்களாகவும் பணத்தைச் சேமித்து வட்டி இலாபமீட்ட இந்தக் கணக்கு உதவும்.

### லீசிங் வசதி

புதிய மற்றும் பதிவுசெய்யப்பட்ட (இரண்டாம் தர) மோட்டார் வண்டிகள், முச்சக்கரவண்டிகள், உழவு இயந்திரங்கள், கார், வான், டிப்பர் என்பன குறைந்த மாதாந்தக் கட்டணத்தில் வழங்கப்படுகின்றது.

### தங்கக் கடன்

127 வருடங்களாக தங்கக் கடன்சேவையை வழங்கிவரும் ந்தியாவின் மிகவும் பிரபல்யமான Muthoot நிதி நிறுவனத்துடன் இணைந்து, ஏஷியா எசட் ஃபினான்ஸ் நிதி நிறுவனம் தற்போது முன்னணி தங்கக் கடன் சேவையை வழங்கி வருகின்றது. மிகக் குறைந்த வட்டியில் (0.7%) அதிகூடிய கடன்தொகை வழங்கும் இத் திட்டத்தில் 22கரட் தங்கத்திற்கு 37,000 ரூபாவும், 24கரட் தங்கத்திற்கு 43,000 ரூபாவும் வழங்கப்படுகின்றது. வாடிக்கையாளர்களின் வசதியையும், தேவையையும் பூர்த்திசெய்யும் வகையில் 7 நாள் முதல் 1 வருடம் வரை கடனை மீளச் செலுத்துவதற்கு அவகாசம் வழங்கப்படுகின்றது.

### அரச ஊழியர்களுக்கான கடன்

குறைந்த ஆவணங்கள்,விசேட சலுகைகளுடன் வழங்கப்படுகின்றது.

### வியாபாரக்கடன் வசதி

பதிவு செய்யப்பட்ட வியாபார நிலையங்களுக்கு மட்டும் மேலதிக மூலதனம், பொருள் கொள்வனவு, கட்டடம் வாங்குதல், திருத்த வேலைகள் மேற்கொள்ளல் போன்ற தேவைகளுக்காக இக்கடன் வழங்கப்படுகின்றது. குறைந்த மாதாந்தக் கட்டணம் மற்றும் நிபந்தனைகளுடன் 1 இலட்சம் தொடக்கம் 30 இலட்சம் வரை வழங்கப்படும் இந்தக் கடனை ஃபினான்ஸ் கம்பனியால் கேட்கப்படும் ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும். இந்தக் கம்பனியால் வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

ஏசியா எசட் ஃபினான்ஸ் பி.எல்.சி (AsiaAsset FinanceP.L.C) நிதி நிறுவனத்தால் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் நிபந்தனைக்கு உட்பட்டதாகும். மேலதிக விபரங்களை குறித்த நிறுவனத்தின் கிளைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.

# மாற்றி யோசி!



செ.கார்த்திகா
sukuna.k@gmail.com

யாழ்ப்பாணத்தில் எந்தவொரு வர்த்தகரிடம் கேட்டாலும், "புதுப்புதுக் கம்பனிகள் நிறைய வந்திட்டதால எங்கட வியாபாரம் விழுந்திட்டு" என்று முகத்தைச் சுழிக்கின்றனர்.

நாட்டில் முன்னர் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக முதலீட்டாளர்கள், வர்த்தகர்களின் கவனம் வடக்கு மாகாணத்தை நோக்கி இருக்கவில்லை. ஏற்றுமதி இறக்குமதிகளும் சராசரியாகவே இருந்தன. இதனால், யாழ்ப்பாண வர்த்தகர்களுகக்கு போட்டிச் சந்தை காணப்படவில்லை.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து யாழ். மாவட்டத்தின் வர்த்தகத்துறை நாளுக்கு நாள் வளர்ச்சிகண்டு வருவதால் பிறமாவட்டங்கள் மட்டுமன்றி வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் யாழ்ப்பாணத்தில் முதலீடுகளை மேற்கொள்கொள்வதில் அதிகம் முனைப்புக் காட்டியுள்ளனர்.

வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், லீசிங் கம்பனிகள், வாகன விற்பனை நிலையங்கள், நவீன பல்பொருள் அங்காடிகள் இப்போது வடக்கு நோக்கி நகர்ந்துள்ளன. இலங்கை முழுவதும் 120க்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டியங்கும் 'காகில்ஸ்'(Cargills Food City) வலைப்பின்னல் வடக்கு மாகாணத்திலும் விரிவாக்கப்பட்டு, வவுனியா, கிளிநொச்சி, யாழ் மாவட்டங்களில் புதிய பல கிளைகளை விரித்துள்ளதுடன் தற்போது, யாழ் மருத்துவமனை வீதியில், திரையரங்குகளுடன் கூடிய பல மாடிகளைக்கொண்ட நவீன சந்தைத்தொகுதியும் (Super Market Complex) நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்குச் சென்றே வாங்கவேண்டியிருந்த பொருள்கள் எல்லாம் இப்போது நாம் இருக்கும் இடத்திற்கே தேடி வருகின்றன. விலை கூட என நாம் வாங்கத் தயங்கிய அதி விலைகூடிய பொருள்களைக்கூட இப்போது தவணை முறையில் பணத்தைச் செலுத்தி வாங்க முடிகிறது.

இது, இதுவரை போட்டிச் சந்தைக்கு முகங்கொடுத்திராத யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கு பெரும் சவாலாக உள்ளது.

### எப்படி வெல்வது?

- ✓ வெளியிலிருந்து எத்தனை வரத்தகர்கள், முதலீடுகள் யாழ்ப்பாணத்திற்கு வந்தாலும், அதனைக் கண்டு அஞ்சாது தன்னம்பிக்கையோடு போட்டிச் சந்தைக்கு முகம்கொடுக்க வேண்டும். நாளுக்குநாள் புதிய நவீன உத்திகளைக் கையாண்டு போட்டிச் சந்தையை எதிர்கொள்ளவேண்டும்.
- ✓ இருந்த இடத்திலிருந்துகொண்டு தம்மை நுகர்வோர் தேடிவர வேண்டும் என காத்திருக்காது நுகர்வோரைத் தேடி வர்த்தகர்கள் செல்லவேண்டும்.
- ✓ வாடிக்கையாளர்களே வர்த்தகத்தின் பிரதான மூலதனம். எனவே, வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்தி அவர்களை ஈர்க்கும் புதியதிட்டங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.
- ✓ தமது உற்பத்திகள் அல்லது விற்பனைசெய்யும் பொருளுக்கான சந்தைப்படுத்தலை விரிவுபடுத்துவதுடன், அவற்றுக்கென ஒரு தனித்தன்மையான அடையாளத்தையும், நிலையான இடத்தையும் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

பிட்டு, இடியப்பம், தோசை, இட்லி போன்ற உணவுகளையே சாப்பிட்டு வந்த யாழ்ப்பாணத்தவர்கள் இன்று பீட்சா, நூடில்ஸ், பிறைட் றைஸ் என தமது உணவு ஸ்டைலையே மாற்றிவிட்ட நிலையில், இங்குள்ள உணவகங்களும், ஹொட்டேல்களும் இன்னமும் தோசை, இட்லியைத் தயாரித்து விற்பனை செய்யதால் என்ன ஆகும்?

அமெரிக்காவும், ஜப்பானும் இன்று பொருளாதாரத்தில் முன்னிலையில் இருப்பதற்கு அந்நாட்டு மக்களின் புதிய உத்திகளைக் கையாளும் திறன்களே காரணம். எந்த ஒரு வியாபார நடவடிக்கையாக இருந்தாலும் காலத்திற்கு ஏற்றவாறு புதிய புதிய மாற்றங்களை மேற்கொண்டால் மட்டுமே நிச்சயம் அதில் இலாபம் ஈட்ட முடியும்.

# கரையொதுங்கிய மனச்சாட்சி




புகைப்படங்கள் என்ன செய்யும் என்பதற்கு இந்தப்படம்தான் இறுதிச்சாட்சி. முன்னரும் பல சாட்சிகள் உள்ளன. இந்தப்படம் துருக்கிக் கடற்கரையில் எடுக்கப்பட்டது. கடந்த சில தினங்களின் முன்னர் வெளியாகி முழு உலகத்தினதும் மனச்சாட்சியையும் உலுக்கிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக அகதிகளிற்கான கதவுகளை இறுக அடைத்து வைத்துள்ள ஐரோப்பாவில்த்தான் அதிகம் எதிரொலிக்கிறது. அங்குள்ள ஊடகங்கள் அதனை ஐரோப்பாவின் ஆன்மாவில் விழுந்த இடியாக வர்ணிக்கின்றன. மக்களும் குமைந்து போயுள்ளனர். அது சமூகவலைத்தளங்களில் எதிரொலிக்கிறது. இது ஆட்சியாளர்களை நிச்சயம் சங்கடப்படுத்தும்.

சிரியாவின் கொபானி நகரை சேர்ந்த அப்துல்லா குர்தியின் குடும்பம் கடந்த ஆண்டு அங்கிருந்து அகதியாக துருக்கி சென்றது. சிரியாவில் அதிபர் ஆசாத் படைகளும், ஐ.எஸ் பயங்கரவாதிகளும் பயங்கரமாக மோதிக்கொள்வதால் அகதிகளான இலட்சக்கணக்கான மக்களில் ஒரு குடும்பம் அது.

துருக்கியில் அகதியாக இருந்தபடி கனடாவிடம் அகதித்தஞ்சம் கோரினார்கள். கிடைக்கவில்லை. அதன்பின்னர்தான் ஆபத்தான கடற்பயணங்களை செய்யத் தொடங்கினார்கள். 23பேரை ஏற்றிக் கொண்டு கிரீஸிற்கு சென்ற படகில் அப்துல்லா குடும்பமும் ஒன்று. ஆனால் துரதிஸ்டவசமாக கடலில் படகு கவிழ்ந்தது. 12 பேர் பலியானார்கள். அதில் துயரம் அப்துல்லா குடும்பத்தில் அவர் மட்டும்தான் எஞ்சினார். மனைவி ரேஹான், 5வயது மகன் காலிப், 3வயது மகன் அய்லான் ஆகியோர் பலியானார்கள். அய்லானின் சடலம் கரையொதுங்கியபோது படம்பிடித்து 'கரைக்கு அடித்து செல்லப்பட்டு விட்டது மனிதாபிமானம்' என தலைப்பிட்டு வெளியிட்டது துருக்கி செய்தி நிறுவனம். அதுதான் இப்பொழுது உலகையே உலுக்கிக் கொண்டிருக்கிறது.

மேற்கத்தைய ஊடகங்கள் அத்தனையின் முக்கிய பேசுபொருளாகியுள்ளது. இங்கிலாந்தின் புகழ்பெற்ற டெய்லி மெயில் பத்திரிகை 'ஒரு மனிதப்பேரழிவில் பலியான சிற்றுயிர்' என பக்கத்தில் படத்துடன் பிரசுரித்தது.

மூன்றே மூன்று வயதில் பிஞ்சுக்குழந்தையொன்றிற்கு இந்த உலகில் வாழ ஒரு இடம் கிடைக்கவில்லை என்பது எவ்வளவு துயரமானது?

# நலிவடையாத ஆனைக்கோட்டை நல்லெண்ணெய் பாரம்பரியம்



பி.சியா
siyapj27@gmail.com





தொழில் நுட்பம் விரிந்து பரந்து கிடக்கும் இந்த காலகட்டத்தில் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை முறையும், உணவுப் பழக்கமும் இன்றும் கிராமப்புறங்களில் உள்ளன என்பது அதிசயம் தான்.

நவீனமயமாக்கப்பட்ட இந்த உலகில் இப்படியான பாரம்பரியங் களில் ஆவது நமது இயற்கையான தமிழ் பண்பாடுகள் வாழ்கின்றன என்னும் பொழுது பெருமையாக தான் உள்ளது. அப்படி பார்க்கும் பொழுது தமிழர் வாழ்வியலில் உணவு மற்றும் மருத்துவ ரீதியாக இன்றும் உபயோகிக்கும் பொருளாக நல்லெண்ணெய் விளங்குகின்றது. புலம்பெயர் தமிழர்கள் கூட இங்கிருந்து நல்லெண்ணெயை தமது தேவைகளுக்கு எடுத்து செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இதற்கு "தினநெய்" என்னும் பெயர் உண்டு. தினமும் பயன் படுத்த வேண்டிய பொருள் என்பத னாலேயே இதனை இவ்வாறு குறிப்பிட்டனர் நமது மூதாந்தை யர்கள். இது நவ தானியங்களில் இருந்து கிடைப்பதனால் நல்லெண்ணெய் எனப்படுகின்றது.

இந்த எண்ணெயை கொண்டு நல்லெண்ணெய் குளியல், நல்லெண் ணெய் பொரியல் உணவோடு நல்லெண்ணெய் கலந்து உண்ணு தல், தீபம் ஏற்றுதல், போன்ற சகல செயற்பாடுகளின் ஊடா கவும் நல்லெண்ணெயின் மருத்துவ பயனை பெற்று கொள்ள முடி கின்றது. மூதாதையர் தொடக்கம் இன்றயகாலம் வரைக்கும் உணவில் பெருமளவு சேர்க்கும் எண்ணெயாக திகழ்கின்றது.









**இதன் பயன்பாடுகளாவன**

1 உடல் சூட்டை தனித்து புத்துணர்ச்சியை வழங்கும்.
2 நரம்புகளின் செயற்பாடுகளை அதிகரிக்க செய்து எப்போதும் புத்துணர்ச்சியுடன் செயற்பட தூண்டும் தன்மை உடையது.
3 சளித் தொல்லை தலையிடியை அகற்றி ஆரோக்கிய தூக்கத்திற்கு வழி வகுக்கும்.
4 இதிலுள்ள லெசித்தீன் என்ற பொருள் இரத்ததில் உள்ள அதிக படியான கொழுப்புக்களை அகற்றி கட்டுப்படுத் தும் தன்மை மிக்கது. அத்தோடு இரத்தத்தை சுத்தப்படுத்துகின்றது.
5 இதில் அடங்கியுள்ள விற்றமின் ஈ, கல்சியம், மக்னீசியம் போன்ற தாதுக்கள் எளிதாக சருமத்திற்குள் ஊடு ருவக் கூடியது. சருமத்தின் எண்ணெய் படையை அகற்றி தோலினை சுத்தமாக வைத்திருக்கவும் உதவும்.
6 பூப்பெய்த பெண்களுக்கு வயிற்று புண்ணை தணிக்க இன்றும் பயன்படுத்தப்படுகின்றது.

இப்படியான மருத்துவம், உணவு, இறை வழிபாடு, மற்றும் ஆரோக்கி யத்தில் முதன்மை பெற்று விளங்குகின்றது நல்லெண்ணெய்.

வர்த்தகத்திலும் வருமானத்தை அள்ளி தரக்கூடியது. இதற்கென யாழ் மாவட்டத்தில் சில பிரதேசங்கள் பிரசித்தி பெற்று காணப்படுகின்றன. அவையாவன ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை, மாதகல் என்பனவாகும். இங்கு இன்றும் நல்லெண்ணெய் உற்பத்தி இடம் பெறுவதை காண முடிகின்றது.

ஆனாலும் செக்குகளில் தயாரிக்கப்பட்ட சுத்தமான நல்லெண்ணெய் மறைந்து இந்த இயற்கை உணவு இயந்திரங்களுக்கு அடிமையாகி விட்டது.

நல்லெண்ணெய் உற்பத்தியினை இல்குவாக மேற்கொள்வதற்காக இயந்திரங்களை கொண்டு அதன் இயற்கை தன்மையை அழித்து தமது வருமானத்தை மட்டும் நோக்காக கொண்டு நல்லெண்ணெய் வர்த்த கத்தை மேற்கொண்டு வருகின்ற கம்பனிகள் மத்தியில் இன்னும் நல்லெண்ணெயின் இயற்கை தன்மையும், இயல்பு தன்மையும், மருத்துவ தன்மையும் குறையாத வகையில் சுத்தமாக கைகளையும், செக்கவீயும் பயன்படுத்தி பரம்பரை பரம்பரையாக நல்லெண்ணெயை உற்பத்தி செய்து வருகின்றார்கள் ஆனைக்கோட்டை வாழ் மக்கள்.

அந்த வகையில் இன்றும் நல்லெண்ணெய் தயாரிப்பில் 4வது தலைமுறையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஆனைக்கோட் டையை சேர்ந்த தம்பிப்பிள்ளை கணேசலிங்கம் கூறுகையில்,

முன்னர் ஆனைக்கோட்டையில் 500 குடும்பங்கள் வரையில் இந்த தொழிலை செய்து வந்தனர். இப்போது 300 குடும்பங்கள் வரை யில் தான் நல்லெண்ணெய் ஊற்று கின்றனர். மற்றயவர்கள் உத்தி யோகம் வேறு தொழில்கள் வெளி நாடு என்று சென்று விடுகின்றனர். பெரும்பாலும் அடுத்த சந்ததி இதனை செய்வார்களோ என்று தெரியாது என்கின்றார்.

மேலும் நீங்கள் எங்கிருந்து எள்ளினை கொள்வனவு செய்கிறீர்கள் என்ற போது,

மாகோ, தமத்துலாவ, அனுராதபுரம், கெக்கிராவ போன்ற இடங்களில் இருந்து லொறிமூலம் எள்ளினை பெற்று வருகின்றோம் . அதிலும் நம்பர்1 நம்பர்2 என்று உள்ளது. இதில் நம்ப1 மாகோலில் தான் கிடைக்கின்றது. எந்த இடத்தில் கொள்வனவு செய்தாலும் 100 மூட்டை எள்ளில் 10 மூட்டை மண்ணும் சப்பியும் தான்.

நாம் 1கிலோ எள்ளில் கால் போத்தல் முதல் அரைப்போத்தல் வரை எண்ணெயை பெற முடியும். நன்றாக விளைந்து முற்றிய எள்ளில் அரை போத்தல் கிடைக்கும். சாப்பாட்டுக்குரிய நல்லெண்ணெய், வைத்தியத்திற்கு உரிய நல்லெண்ணெய் என்று இரண்டாக ஊற்றுகின்றோம்.

செக்குக்கு புளியம் மரம் தான் பயன்படுத்த வேண்டும். செக்குக்கு ஏற்ற புளியம் மரம் இப்போது கிடைப்பது கடினம். இரண்டு மரம் தறித்தால் 4 மரம் வளர்க்க வேண்டும். ஆனால் யார் இப்போது அப்படி செய்கிறார்கள்.

இந்த தொழில் நலிவடைந்து செல்வதற்கு செக்குகேற்ற மரம் கிடைக்காததும் ஒரு காரணம். புளியம்மரம் உரலாகவும் முதுரை உலக்கையாகவும் இழுப்பை துலாவாகவும் பயன் படுத்தப்படும். துலா சுமார் 15 முழம் நீளத்தில் இருக்க வேண்டும். உரலின் உயரம் நில மட்டத்தில் இருந்து ஏழு அரை அடி வரையில் காணப்பட வேண்டும். ஆனால் நிலத்தின் கீழ் இதை போல் இரண்டு மடங்கு புதைக்க வேண்டும் என்று விளக்கினார்.

இந்த தொழிலில் உங்களால் எப்படி நிலைத்திருக்க முடிகின்றது? இந்த தொழில் ஊடாக நீங்கள் பெற்ற அனுபவம்? என்று கேடட் போது, எமது நேர்மை தான் காரணம். எமக்கு அதிக வருவாய் தேவையில்லை சுத்தமாக இப்படியே செக்கை கொண்டு தயாரித்து எம்மால் முடிந்த அளவு தூரத்திற்கு வினியோகிக்கின்றோம். இதே செக்கு முறையையும் தூய்மையையும் நேர்மையான எண்ணெய் உற்பத்தியையும் பரம்பரை பரம்பரையாக செய்து வரும் நாங்கள் இனியும் தொடர்ந்து செய்வோம். இது எங்கள் பரம்பரை தொழில் இதில் அனுபவம் என்று சொன்னால். சுய தொழில் என்றும் வறுமையில் இருந்து எம்மை காப்பாற்றும். அத்தோடு இந்த தொழில் மூலம் எமது பாரம்பரியத்தை கட்டி காக்க முடிகிறது. என்றார் தம்பிப்பிள்ளை கணேசலிங்கம்.


இப்படியாக கதிரேசுவினால் 19ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட இவர்களுடைய இந்த தொழில் அவரு டைய பிள்ளைகள் தில்லையம்பலம், கந்தையா என்பவர்களால் தொடரப் பட்டு அவர்களுடைய ஆண் பிள்ளைகள் சந்ததி இன்றும் சுத்த மான நல்லெண்ணெய் உற்பத்திப் பரம்பரை என்ற பெயரையும் புகழையும் காப்பாற்றி வருகின்றனர்.

தம்பிப்பிள்ளை என்பவர் ஓய்வு பெற்ற ஆசிரியராக இருந்த போதிலும் பரம்பரை தொழிலை கைவிடாமல் செய்து வருகின்றார். இவரின் மகன் ஒரு பொறியியலாலர் என்றாலும் இந்த பரம்பரை தொழிலை தந்தையை தொடர்ந்து தான் கவனிப்பதற்காக இப்பவே இந்த தொழிலையும் கவனித்து வருகின்றாராம். இப்படியாக பரம்பரை பாரம்பரியத்தின் ஊடாக எமது பண்பாடு வாழ்ந்து வருகின்றது. நல்லெண்ணெய் உற்பத்தி நலிவடைந்தாலும் நிலைத்திருக் கின்றது என்னும் பொழுது மனம் குளிரவே செய்கின்றது.



வைத்தியர் கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com

# எனக்கே நான் பாரமா?



**உடற்பருமனிற்கு சித்தமருத்துவம் என்ன சொல்கிறது**

ஒருவரது உடல் நிறையானது அவரது உயரத்திற்கு ஏற்ப அமையாது அதிகரிப்பதே உடற்பருமன் obesits எனப்பபடுகிறது.

அதாவது உடலில்அதிகமாக கொழுப்புச் சேர்வதைக் குறிக்கும். மேற்கு நாடுகளில் உடற்பருமன் ஓர் பாரிய சுகாதாரப் பிரச்சனயைாக உள்ளது. இன்று ஆசியாவிலும் குறிப்பாக இலங்கையிலும் உடற்பருமனால் பாதிக்கப்படுவோர் தொகை அதிகரித்து வருகிறது.

**உடற்பருமனுக்கான காரணங்கள்**

இன்றைய வாழ்க்கைச் சூழலில் எமது உணவு

முறைகளும் வாழவியல் நடைமுறைகளும் மாற்றமடைந்திருப்பதே உடற்பருமனுக்கு முக்கிய காரணமாகிறது. இவைதவிர

1. அதிகளவு உண்ணுதல்
2. போதிய உடற்பயிற்சியின்மை
3. அதிக நேரம் ஓரே இடத்தில் இருந்து வேலைசெய்தல் (தொலைக்காட்சிபார்த்தல், அலுவலகப்பணிகள்)
4. சில வகை ஓமொன்கள் அதிகரிப்பதவும் குறைவடைவதும்
5. மரபணு மாற்றங்களால் எற்படும் பரம்பரை உடற்பருமன்.

என்பனவும் உடற்பருமனுக்கான காரணங்களாக சொல்லப்படுகிறது.

**உடற்பருனை அளவிடுவது எப்படி**

உடற்பருமைனை அளவிட உடல் எடை குறியீட்டு எண் body mas பயன்படுத்தபடுகிறது.

இது ஒருவரது உயரம், நிறை என்பவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கபடுகிறது. இந்த சுட்டி ஒருவரைச் சராசரி எடையுள்ளவர், குறைந்த எடையுள்ளவர் என பாகுபடுத்துவதன் முலம் உடல் எடை குறித்த விழிப்புணர்வை அளிக்கிறது.

இக்குறியீட்டு எண்ணின் படி குறைந்த எடையுள்ளவர்கள் 18.5ற்கு கீழ் உள்ளவர்கள், சராசரி எடையுள்ளவர்கள் 18.5 - 24.9, அதிக எடையுள்ளவர்கள் 25-29.9, உடற்பருமன் உள்ளவர்கள் 30 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் என வகைப்படுத்த படுகிறது

| BMI Classifications | |
|---|---|
| Underweight | <18.5 |
| Normal Weight | 18.5-24.99 |
| Overweight | 25-29.99 |
| Obesity | >30 |

அதிகரிக்கும் உடல் எடை மற்றும் கொழுப்பு என்பவற்றால் உயர் இரத்த அழுத்தம், மூட்டு வியாதிகள், நீரிழிவு போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

இன்றுஅனேகமாக நடுவயதில் உள்ளோர் இந்த பிரச்சனையை எதிர் கொள்கின்றனர்.

**உடற்பருமன் தீர்வுகள்**

உடற்பருமன் ஏற்படாமல் இயல்பாக உடலை பேணுவதற்கு பாரம்பரியதமிழ்மருத்துவமுறையில் பல தீர்வுகள் சொல்லப்படுகின்றன.

இதில் குறிப்பாக சொல்ல வேண்டியது தமிழரது பாரம்பரிய உணவுமுறைகள்.

தற்போது அதிகம் பயன்படத்தபடும் சொக்லேற் பிஸ்கட், கோலா பானங்கள், உருளைக்கிழங்கு சிப்ஸ் , உடலின் கொழுப்பை அதிகரிக்கச் செய்து, உடற்பருமனுக்கு காரணமாகிறது.

இவை போன்ற உணவுகள் தமிழரது பாரம்பரிய உணவில் இடம்பெறவில்லை. நார்ச்சத்து அதிகம் உள்ள உணவுகளை உட்கொண்டார்கள். இறைச்சி போன்ற உணவுகளை எடுக்கிற போது ரசம் சேர்த்துக்கொண்டார்கள்.

இதில் சேர்கின்ற உள்ளி, மிளகு என்பன கொலஸ்ரோலை குறைப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

மேலும் ஒரே இடத்தில் அமர்ந்து வேலைசெய்தல், அதிகநேரம் ரிவி பார்தல் என்பனவும் நிறை அதிகரிப்பிற்கு காரணமாகிறது.

இதை தடுக்க யோகாசன முறைகளை சித்தமருத்துவம் சிபார்சு செய்கிறது. சர்வாங்காசனம், மயூராசனம், சிரசாசனம் போன்ற ஆசனங்களும் சூரிய நமஸ்காரமும் உடற்பருமனை குறைக்க உதவுகின்றன.

**மருந்துகள்**

சித்தாயுர்வேதத்தில் பல மருந்துகள் உடற்பருமனுக்ககாக சிபார்சு செய்யபடுகின்றன.

நிலபாவல் சூரணம், திரிபலாதி சசூரணம் மற்றும் இஞ்சி, கடுக்காய், உள்ளி சேர்ந்த மருந்துகள் பரிந்துரைக்கபடுகின்றன.

இவை முறையான மருத்துவரின் மேற்பார்வையின் கீழ் எடுக்கபட வேண்டும்

எனவே பாரம்பரிய உணவு முறைகளை கடைப்பிடிப்பதன் மூலமும், தினசரி யோகாசன பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமும் எமதுடல் எமக்கே பாரமாவதை தடுப்போம்.



மட்டக்களப்பு வந்தாறுமூலை நீர்முகப்பிள்ளையார் ஆலயத்தில் கி.மு 2ம் நூற்றாண்டிற்கு முற்பட்ட நாக அரசர்களின் கட்டுமானத்தில் உருவான கிணறு மற்றும் நாகக்கல் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இங்கு கண்டுபிடிக்கபட்ட சான்றுகள் கி.மு 2ம் நூற்றாண்டிற்கு முற்பட்ட நாகரசர்களின் கட்டுமானத்தில் உருவானவை எனவும் நாகரின் குறுநில அரசுப் பிராந்தியமாகவும் காணப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது.

## கணவனை இடுப்பில் சுமக்கும் மனைவி!

இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தைச் சேர்ந்த ஜெகன்நாத் (வயது56) பிறவியிலேயே கை, கால்கள் வளர்ச்சியற்றவர். உடல் ஊனமான இவர் மீது இரக்கம் கொண்ட சங்கரம்மா என்பவர் இவரை திருமணம் செய்து, 3 பிள்ளைகளையும் பெற்றெடுத்தார். பிள்ளைகள் வளர்ந்து ஆளானதும் இவர்களை தனியே விட்டுச்சென்றுவிட்டனர். தற்போது, தனது ஊனமுற்ற கணவனை ஒரு குழந்தையை போல் இடுப்பில் தூக்கி வைத்து கொண்டு ஊராக சென்று பிச்சை எடுத்து வாழ்க்கை நடத்தி வருகிறார் சங்கரம்மா.





சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்ற Child First UK நிதி அனுசரணையுடனான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.



சர்வதேச விசாரணையை கோரி வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் ஏற்பாட்டில் வவுனியா முத்தையா மண்டபத்தில் பெரும் கையெழுத்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகனும் கையெழுத்திட்டார்.

# நேர்முக தேர்வுக்கு செல்ல முன்



உடுவை எஸ் தில்லை நடராசா
முன்னாள் அரசாங்க அதிபர்
(இலங்கை நிர்வாக சேவை தரம்1)
uduvai@gmail.com




புதிய நியமனங்கள் வழங்குவதற்கு முன் தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்காக அல்லது பதவியுயர்வுகள் வழங்கத்தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்காக நேர்முகப்பரீட்சை நடைபெறுவதுண்டு. ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளவாறு அல்லது சேவைப்பிரமாணத்தில் தெரிவிக்கப்பட்டவாறு எழுத்துப்பரீட்சை முடிவடைந்ததும் அல்லது எழுத்துப்பரீட்சை முடிவுகள் வெளியானதும் நேர்முகப்பரீட்சை நடைபெறும். முன்பு நேர்முகப் பரீட்சையில் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் உயர் பதவிகளுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டாலும் அண்மைக்காலமாக சிறிய பதவிகளுக்கான நியமனங்களுக்காகவும்; நேர்முகப்பரீட்சைகள் நடைபெறுகின்றன.

எத்தனை வெற்றிடங்கள் நிரப்பப்படும் என எண்ணிக்கை தீர்மானித்த பின் அது போல மும்மடங்கு எண்ணிக்கையானவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சில நியமனங்களுக்காக அல்லது சில பதவியுயர்வுகளுக்காக நடைபெறும் நேர்முகப்பரீட்சைகளின் போது புள்ளிகள் வழங்கப்படுவதில்லை. பரீட்சார்த்திகளின் வயது, வதிவிடம், கல்வித்தகைமை, இதர தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள் மட்டும் பரிசீலிக்கப்படும். பொதுவாக பதவியை விரும்பும் விண்ணப்பதாரிகளின் உளச்சார்பு அறிவு, ஆற்றல், ஆளுமைவிசேட திறமைகள், அனுபவம், பலம், பலவீனம் ஆகியவற்றை சில நிமிடங்களுக்குள் மதிப்பிடும் நோக்கோடு நேர்முகப்பரீட்சை நடைபெறுகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு பதவிக்கான அடிப்படைத்தகைமைகள் இருந்து விண்ணப்பித்ததும் நேர்முகப்பரீட்சைக்கு வரச்சொல்லி அழைப்புக்கடிதம் வரும் நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நேர்முகப்பரீட்சைக்கான ஆயத்தங்களைச் செய்வது அவசியம். நேர்முகப்பரீட்சைக்கு வரவும் என வரும் கடிதங்களில் சமர்ப்பிக்க வேண்டிய சாதனங்களின் பட்டியல் தரப்படும். எனினும் பின்வருபவற்றை முதலில் தயாராக வைத்திருந்தால் கடைசிநேர நெருக்கடியைத்தவிர்த்துக்கொள்ளலாம்.

- பிறப்புச்சான்றிதழ் உறுதிப்படுத்தப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பு நல்லது.
- தேசிய அடையாள அட்டை பழையதாக இருந்தால் அல்லது சேதமடைந்திருந்தால் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.
- திருமணத்தின் பின் அல்லது பெயர் மாற்றம் செய்திருப்பின் அதற் கான ஆதாரங்கள் சத்தியக்கடதாசி தயாராக வைத்திருத்தல் எல்லா சாதனங்களிலும் பெயரும் பிறந்த திகதியும் ஒரேமாதிரி இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- ஏற்கெனவே வேலை செய்பவர்கள் தொழில்கொள்வோர் வழங்கிய அடையாள அட்டையையும் வைத்திருப்பது பயனுள்ளது.
- க.பொ.த.(சா.த)க.பொ.த.(உ.த) சான்றிதழ் சில பதவிகளுக்கு ஆங்கிலமொழித் தகைமை இச்சான்றிதழ்களிலிருந்து மதிப்பிடப்படும். சகல சான்றிதழ்களின் மூலப்பிரதிகளையும் உறுதிப்படுத்தப் பட்ட போட்டோ பிரதிகளையும் கொண்டு செல்ல வேண்டும். குறிப்பாக சான்றிதழின் முன் பக்கத்தில் பாட எண்ணும் மறுபுறத்தில் பாட விபரமும் இருப்பதால் இரண்டு பக்கங்களையும் போட்டோ பிரதி செய்து உறுதிப்படுத்த வேண்டும்.
- கலைமானி விஞ்ஞானமானி போன்ற முதல் பட்டச்சான்றிதழ் பட்டப்பின் படிப்பு சான்றிதழ் முதுமானி பட்டச்சான்றிதழ் கலாநிதி பட்டச்சான்றிதழ் ஆகியன. ஒவ்வொரு சான்றிதழுக்கும் புள்ளிகள் வழங்கும் நேர்முகப்பரீட்சைகளும் உண்டு. பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படும் சான்றிதழுடன் ஏனைய விபரமடங்கிய கடிதத் தையும் கொண்டு செல்ல வேண்டும்.
- பதவியுயர்வுக்கான நேர்முகப்பரீட்சையானால் முதலாவது நியமனக் கடிதம் நியமனத்தை நிரந்தரமாக உறுதி செய்த கடிதம் தடை தாண்டல் பரீட்சை சித்தியடைந்த கடிதம் அல்லது அப்பரீட்சையிலி ருந்து விலக்களிக்கபட்ட கடிதம்
- வேறு பதவி உயர்வுகளுக்கு ஆதாரமான கடிதங்கள். பயிற்சிகளின் போது பெற்ற சான்றிதழ்கள். கிடைத்த பாராட்டுக்கள் விதந்துரைகள்.
- பத்திரிகை சஞ்சிகைகளுக்கு எழுதிய ஆக்கங்கள் உட்பட வெளியிட்ட நூல்கள். கடந்த கால செயற்பாடுகளை நிரூபிக்கக்கூடிய செய்திகள் படங்கள்.
- போட்டிகளில் பெற்ற சான்றிதழ் பரிசில்கள் விருதுகள். ஏற்கெனவே பதவி வகிப்பவர்கள் உயர்வுக்கான நேர்முகத் தேர்வுக்குத் தோன்றும் போது சம்பளஏற்றங்கள் யாவற்றையும் பெற்றுக் கொண்டதற்கான கடிதமும் அவருக்கெதிரான ஒழுக்காற்று விசாரணை எதுவும் இல்லை என்ற கடிதமும் அவசியம்.
- C.V . என ஆங்கிலத்தில் சுருக்கமாகச் சொல்லப்படும் சுய விபரத் திரட்டு. (இதை மனப்பாடம் செய்தால் உங்களைப்பற்றிய தகவல்களைத் தடுமாற்றமின்றி சமர்ப்பிக்க முடியும்)

மேலே தரப்பட்டவற்றை விட வேறு சாதனங்கள் விபரங்கள் தேவை என கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் அவற்றையும் தயார் செய்தல் வேண்டும். சான்றிதழ் கடிதம் முதலியவற்றின் மூலப்பிரதிகளை (ORIGINALS) கண்ணாடிக்கடதாசி கொண்ட கோவை யில் ஒழுங்காக வைத்திருந்தால் சேதமடையாமல் அழுக்காகமல் அவற்றைக் காண்பிக்கக் கூடியதாக இருக்கும். நேர்முகப் பரீட்சை நிறைவானதும் மூலப்பிரதிகளைக் கவனமாக திருப்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். உறுதிப்படுத்தப்பட்ட போட்டோ பிரதிகள் நேர்முக பரீட்சைச்சபையால் நியமன அதிகாரிக்கு அனுப்பப்படுவதால் அவை திருப்பப் பெற முடியாது.

ஆரம்பத்திலேயே நல்ல அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு நம்பிக் கையும் பயிற்சியும் திட்டமிடலும் தேவை. பரீட்சை நடைபெறும் இடம் எங்கே உள்ளது? எப்படி செல்ல வேண்டும்? தூரம் முதலியவற்றை முன் கூட்டியே அறிந்து குறிப்பிட்ட நேரத்துக்கு முன் பரீட்சை நடைபெறும் இடத்தில் இருப்பதை நிச்சயித்துக்கொள்ள வேண்டும்.

அழகாகவும் சுத்தமாகவும் ஆடை அணிந்து செல்வதுடன் தலை ஒழுங்காக வாரிவிடப்பட்டிருக்க வேண்டும். மிதமிஞ்சிய ஒப்பனை வாசனைத்திரவியம் ஆகியவற்றை பரீட்சையாளர்கள் விரும்ப மாட்டார்கள். அவர்களை அவமதிப்பது போல படாரென அறையினுள் நுழைவது அவர்களது மேசையில் அனுமதியில்லாமல் கைப்பை பெட்டி போன்றவற்றை வைப்பது கைகளைக் காட்டிக்கதைப்பது அவசியமற்ற அங்க அசைவுகள் போகச் சொல்லிய பின்னும் தாமதிப்பது ஆகிய நடவடிக்கைகள் நல்லபிப்பிராயத்தை உருவாக்காது.

இப்போது அநேகமானவர்கள் கைத்தொலைபேசி வைத்திருப்பதால் பரீட்சைக்கு செல்ல முன் அதன் இயக்கத்தை நிறுத்துவதன் மூலம் அசௌ கரியங்களை தவிர்த்துக்கொள்ளலாம். அழைக்கப்பட்ட பின் அறையினுள் செல்லும் போது நீங்களே சொல்லிநல்லசூழலை உருவாக்கி இருக்கையில் அனுமதியுடன் அமர்ந்து சந்தர்ப்பத்திற்கேற்ப சொல்வதுடன் பணிவாகவும் மரியாதையாகவும் தகவல்களைத் தெரிவிப்பது சிறந்தது.


நேர்முக பரீட்சைச்சபையில் மூன்று பேர் அல்லது ஐந்து பேர் இருப்பார்கள். மெல்லிய சிரிப்புடன் அவர்கள் முகம் பார்த்து அளவான தொனியில் தெளிவாக பதிலளிப்பது சிறந்தது. முகத்தை விகாரமாக வைத்துக்கொண்டோ அல்லது அசட்டுத்தனமாக சிரித்துக்கொண்டு குனிந்தவண்ணம் குரலைத் தாழ்த்தியோ உயர்த்தியோ கதைப்பதால் எதையும் சாதித்து விட முடியாது. கவனமாக காது கொடுத்து வினாக்களை விளங்கி திறமைகளை யும் அனுபவத்தையும் வெளிக்காட்டத்தக்க வகையில் விடையளிக்க வேண்டும். கண்ணடிப்பது கையைப்பிசைவது தலையைச் சொறிவது ஆகியவற்றைத் தவிர்த்துக் கொள்ளளல் நல்லது.

தவறான பதில் ஊகிக்கிறன் பிழையில்லை சரியில்லை என பட்டும் படாமலும் சொல்வதன் மூலமோ மற்றவர்களைக்குறை கூறுவதன் மூலமோ புள்ளிகள் பெற்று விட முடியாது.

'நேற்று தான் நேர்முகப்பரீட்சைக்கான கடிதம் கிடைத்ததால் சாதனங்கள் கொண்டு வரவில்லை வரும் வழியில் பஸ் விபத்து நெருங்கிய உறவினர் காலமாகி விட்டார் முன்பும் பல தடவை வந்தனான்' என எடுத்துரைத்து அதிக புள்ளி பெற முடியாது. கேள்விகளுக்குப் பதிலளிக்கலாமே தவிர நீங்கள் பரீட்சை தொடர்பாகவோ வேறு விடயங்கள் தொடர்பாகவோ பரீட்சைச்சபையினரிடம் கேள்வி கேட்டு இக்கட்டான நிலைக்கு ஆளாகக்கூடாது.

பதவியை எதிர்பார்க்கும் நிறுவன ஒழுங்கமைப்பு அட்டவணை நிறுவனம் தொடர்பான விபரங்கள் பதவிக்கான பொறுப்புகள் கடமைகள் அவை தொடர்பாக உங்கள் அறிவு அனுபவம் தொலைநோக்கு மொழியாற்றல் கணனி அறிவு ஆகியன தொடர்பாக கேள்விகள் எழும் என்ற எண்ணத்துடன் பதிலளிக்க தயாராகச் செல்வது விரும்பத்தக்கது. சபையிலுள்ளோர் உங்களுக்குத் தெரிந்தவராக இருந்தாலும் கேட்கும் போது உங்கள் பெயர் விபரங்களை கூற வேண்டும். அதாவது அவர்களுக்கும் உங்களுக்கும் முன்னர் அறிமுகம் இல்லாதது போல நேர்முகப்பரீட்சை யில் நடந்து கொள்வது நல்லது. எழுதவேண்டிய தேவையும் எழலாம் என்ற எண்ணத்துடன்

**தவறான பதில் ஊகிக்கிறன் பிழையில்லை சரியில்லை என பட்டும் படாமலும் சொல்வதன் மூலமோ மற்றவர்களைக்குறை கூறுவதன் மூலமோ புள்ளிகள் பெற்று விட முடியாது.**



பேனாவையும் கொண்டு செல்வது நல்லது.

நேர்முகப்பரீட்சைக்கு செல்ல முன் தெரிந்த சிரேஷ்ட உத்தியோகத்தர் களைச் சந்தித்து ஒரு ஒத்திகை போல உங்களை கேள்விகள் கேட்கச் சொல்லி தயாராகினால் அச்சமும் கூச்சமும் அகன்று நிதானமாக பதிலளிக்கும் அனுபவம் பெறலாம்.

ஒரு தடவை பரீட்சைக்கு சென்றவரிடம் வாசிக்கச்சொல்லி ஒரு கடிதத்தைக் கொடுத்த போது அவர் கண்ணாடி கொண்டு வரவில்லை என்றதும் சபையினர் 'அடுத்த தடவை கண்ணாடியையும் கொண்டு வாருங்கள்' என்று அனுப்பி வைத்தனர்.

ஆங்கில ஆசிரியர் தேர்வுக்கான நேர்முகத்தில் சபையினர் சொல்லும் ஆங்கிலச் சொற்களுக்கு ஒவ்வொரு ஆங்கில எழுத்தையும் சொல்லி உச்சரிக்க வேண்டும். பரீட்சையாளர் 'லவ்' என்றதும் ஒருவர் சிரித்தார். மற்றவர் ஒவ்வொரு எழுத்தாக சொன்னதும் பரீட்சித்தவர் 'றோங்' என்றார். பரீட்சைக்குச் சென்றவர் ஏன் என்று வாதிட்டார். மூன்றாவது பரீட்சார்த்தி என முதல் சொல்லுக்கு எழுத்து கூட்டியதுடன் இரண்டாம் சொல்லாகிய 'றோங்' எனபதற்கு ஆங்கிலத்தில் என ஒவ்வொரு எழுத்தையும் உச்சரித்தார். நேர்முகபரீட்சை சபை யாரைத் தெரிவு செய்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.



சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392



# சனீஸ்வர பகவான் சோதிடத்தில் காட்டும்

## சாதக பாதக நிலைகள்

ஒவ்வொருவருடைய மனித வாழ்க்கையும் அவரவர்கள் பிறப்பு நிலையில் அமைந்த கிரக நிலைகளைக் கொண்டு அமைகிறது. பன்னிரண்டு ராசிகளில் ஒன்பது கிரகங்கள் அமைந்து, இன்னது நடைபெறும் எம் வாழ்வில் என்பதைக் காட்டி நிற்கின்றன. விஞ்ஞானத்தை நம்பும் நாம் சோதிடத்தை நம்பியேயாக வேண்டும். காரணம் சோதிடமும் விஞ்ஞானமே ஆகும்.

வாழ்வில் துணிச்சலைத் தருவதில் சனி முன்னிலை பெறுகிறார். நவக்கிரக வழிபாடு எம்மை இறைவனிடம் அழைத்துச் செல்லும். உழைப்பால் மகிழ்ச்சியையும் செல்வாக்கையும் சிறப்பையும் சனீஸ்வரர் எமக்குத் தருவார். எனவே கிரகங்களை அவற்றிற்குரிய முறைப்படி நாம் வணங்கி வர வேண்டும். நவக்கிரங்களில் அதிக பலத்தை சனிக்கிரகம் பெற்றுள்ளதால் சனீஸ்வரர் என சோதிடத்தில் அழைக்கப்படுகிறார். ஒவ்வொரு கிரகமும் தான் நின்ற இடத்திலிருந்து அடுத்த இடத்திற்கு அதாவது அடுத்த ராசிக்கு செல்லும் காலம் வேறுபடுகின்றது. சனிபகவான் மற்றொரு ராசிக்குச் செல்ல 2 ஆண்டுகள் செல்லும்.

கிரகங்கள் ஒவ்வொன்றும் எம்மைப் பற்றிப் பிடிப்பதால் பலன்களைத் தருவதற்கு விளைகின்றன என்பது அர்த்தமாகும். சுப ஸ்தானத்தில் நிற்கும் பொழுது நற்பலன்களையும், அசுப ஸ்தானத்தில் இருந்தால் தீய பலன்களையும் கொடுக்கின்றன. மக்களுக்கு சிரமங்கள் கஷ்டங்கள் துன்பம் துயரங்களைக் கொடுப்பதில் சனிக்கிரகம் தீவிரமானது, கொடூரமானது. இவர் 2 ஆண்டுகள் ஒரு ராசியிலிருந்து மற்றைய ராசிக்கு செல்ல உள்ளதால் மந்த நிலை "மந்தன்" எனவும் அழைக்கப்படுகிறார். யாருக்கும் தாட்சண்யம் பாராமல் கடமையை தவறாது செய்பவர் சனிபகவான். சிவபெருமான், இந்திரன், இராவணன், நளன் என யாரையுமே விடவில்லை என சோதிட ஆன்மீக நுலீல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இராசிச் சக்கரத்தில் சனியின் நிலைகள்:

மகரராசி, கும்பராசி ஆகிய இரண்டையும் தனது ஆதிக்கமாகக் கொண்டு ஆட்சி நிலையில் உள்ளவர். துலாம் ராசியில் உச்ச நிலை கொண்டுள்ளவர். மேடம் ராசியில் நீசம் நிலை பெறுபவர். செவ்வாய், சந்திரன், சூரியன் கிரகங்களை பகையாளியாகவும், சுக்கிரன், புதன் கிரகங்களை நண்பர்களாகவும் கொண்டுள்ளவர். ஒரு சாதகரின் ஆயுள் நிலையை தீர்மானிப்பதில் இவரே காரணகர்த்தா ஆவார். வாழ்வின் ஏற்றம் இறக்கம் இவரால் தீர்மானிக்கப்படும். நரம்பு, குடல், மர்ம உறுப்புகள் சம்பந்தப்படும் நோய்களுக்கு காரணமாய் அமைவார்.

3 6 11ம் ஸ்தானங்களில் சனி நின்றால் நன்மையான பலன்கள் அதிகமாய் இடம்பெறும். தீமைகள் மிகக் குறைவாயும் அமையும்.

- இராசிச்சக்கரத்தில் முதலாமிடத்தில் சனி: எடுத்த காரியம் யாவும் படிப்படியாய் வெற்றியாய் முடியும். வாழ்வு சீவனோபாயம் நல்லபடியாக நடந்தேறும்.
- இரண்டாம் இடத்தில் சனி: இளம் வயதில் திருமண பாக்கியம் கிடைக்கும். எதையும் வாதிட்டு வெற்றி காண்பார். பழக்கவழக்கங்களில் கெட்ட பெயர் கேட்க வைக்கும். சில சந்தர்ப்பங்களில் இரண்டாம் தாரம் வாழ்வும் அமையலாம்.
- மூன்றாம் இடத்தில் சனி: தெய்வ நம்பிக்கை, எல்லோருடனும் பழகும் சுபாவமும் கொண்டிருத்தல், ஆடம்பரவ வாழ்வை விரும்புதல், இனசன சுற்றத்தாரை மதித்து நடக்காதிருத்தல் என்பன அமையும்.
- நான்காம் இடத்தில் சனி: மனச்சஞ்சலம் பெறுவார். ஊடகம் சம்பந்தப்படும் தொழில் விருப்பம் பெறுவார். குடல் வியாதிகளால் அவஸ்தைப்படுவார். தாயாரை வெறுக்கும் நிலை தரும்.
- ஐந்தாம் இடத்தில் சனி: தெளிவற்ற மனநிலை, தந்தையை வெறுக்கும் நிலை, தொழில் நிலையில் பகை நிலை, பிள்ளைகளுக்கும் பாதிப்பு நிலை காட்டும்.
- ஆறாம் இடத்தில் சனி: சமூகத்தில் புகழ் பெறுவார், கடன்பிணி இடையிடையே காட்டும், நோய்பிணி துயரமும் உண்டு.
- ஏழாம் இடத்தில் சனி: மனைவியால் தொல்லைகள் அனுபவித்தல், பிரயாணம் செய்வதில் ஆர்வம் கூடுதலாய் இருத்தல், பிற பெண்கள் சிநேகிதம் கிடைத்தல் என்பன அமையும்.
- எட்டாம் இடத்தில் சனி: பலமாக இருப்பின் நீண்ட ஆயுள், வாழ்வில் மிகுந்த துன்பம் துயரம், கருமங்களில் தோல்விகள், மற்றும் நோய் பிணி துயரமும் காட்டும்.
- ஒன்பதாம் இடத்தில் சனி: தாய்க்கு தோஷம் காட்டும், பிரயாணங்களில் விபத்து நிகழலாம், விவாகத்திற்கு சற்று முன் பின்னாக வறுமை நிலையை அனுபவித்தல் தரும்.
- பத்தாம் இடத்தில் சனி: நல்ல ஆசாரப்பழக்கவழக்கங்களில் ஆர்வம், இரும்பு எரிபொருள் வாகனம் சம்பந்தப்படும் தொழிலில் முன்னேற்றம், பிரயாணங்கள் கூடுதலாய் இருக்கவும் செய்யும்.
- பதினோராம் இடத்தில் சனி: உயர்ந்த அறிவு ஆற்றல், நீடித்த ஆயுள், வாகனம் சம்பந்தப்பட்டால் முன்னேற்றம், செல்வம் சேமிப்பு நிலைகளும் காட்டும்.
- பன்னிரண்டாம் இடத்தில் சனி: அடக்கம் அமைதி சகிப்பு என்பன அமையப்பெறும், உடல் ஆரோக்கியம் குறைதல், வறுமை பொருள்விரயம் என்பவையும் தரும்.

இவையெல்லாம் பொதுவாக நடைபெறகூடியவை. **ஆயினும் சனித்திசையிலோ அல்லது ஏனைய** திசைகளின் **சனிப்புத்தியிலோ** இவ்வாறான பலன்களையும் அனுபவிக்க • நேரிடும் என்பது சோதிட விதி என்க.

மேலும் வாசகர்கள் விரும்பி அறிய ஆவல் கொள்ளும் கோசர ரீதியான சனி மாற்றப் பலாபலன்களையும் தெரிந்து கொள்வது நல்லதாகும்.

சனிமாற்றம் 2014 டிசம்பர் 15ம் நாள் வாக்கியப் பஞ்சாங்கப் பிரகாரம் துலாம் இராசியிலிருந்து விருச்சிக இராசிக்கு மாற்றம் பெற்றுள்ளது.

எனவே கோசரநிலை சனிமாற்றப் பலாபலன்கள் பின்வருமாறு அமையப்பெறும்.

**மேடம் இராசிக்கு 8ம் நிலை:**


இனசனபந்துக்களுக்கு மாரகம், தேகசுகம் பாதிக்கப்படுதல், அடிக்கடி வதிவிடம் மாறுதல், குடும்பப்பகை என்பவை நிகழும்.

**இடபம் இராசிக்கு 7ம் நிலை:**

அலைச்சல்கள், தெய்வக்குறை பாடு, நோய் பிணி துயரம், கணவன் மனைவிக்கு துயரமிருத்தல், மற்றும் கண்டங்களையும் சந்திக்க நேரிடும்.

**மிதுனம் இராசிக்கு 6ம் நிலை:**

பகைகளை வெல்லுதல், நோய் பிணி அகலுதல், பொன் பொருள் சேர்தல், தொழில் இலாபம் வியாபார இலாபம் என்பவையும் தரும்.



**மேடம், இடபம், கடகம், சிங்கம், துலாம், விருச்சிகம், தனு இராசிகாரர்கள் 2 3 மாதங்களுக்கு ஒரு சனிக்கிழமை விரதம் இருந்து, எள்எண்ணெய் எரித்து, காகத்திற்கு எள்ளுச்சாதம் வைத்துச் சாப்பிடுவது சிறந்த பரிகாரமாய் அமையும்.**

**கடக இராசிக்கு 5ம் நிலை:**

பிள்ளைகளுக்கு நோய்பிணி காட்டுதல், மனக்குழப்பம் இருத்தல், கருமங்களில் தடை தாமதம் தருதல், சண்டை சச்சரவுகள் தரும்.

**சிங்கம் இராசிக்கு 4ம் நிலை:**

உறவினர் பகை கெடுதிகள் காணப்படுதல், அவமானங்கள் வருதல், அலைச்சல்க்ள், தேகசுகப்பாதிப்பு தாயாருக்கும் சாதகருக்கும் தரும்.

**கன்னி இராசிக்கு 3ம் நிலை:**

பகைவரை வெற்றி கொள்ளல் கருமங்களில் சாதனை படைத்தல், நோய் பிணி தீர்ந்துபோதல், பணவருவாய் பொருள்வருவாய் என்பனவும் தரும்.

**துலாம் இராசிக்கு 2ம் நிலை:**

பொருட்சேதம், பொருள்விரயம், பலவித சங்கடமான நிலைமை குடும்பத்தில் குழப்ப நிலை என்பவை காட்டும்.

**விருச்சிக இராசிக்கு 1ம் நிலை:**

இடமாற்றம், வதிவிடங்கள் மாறிக்கொள்ளுதல், விஷம் சார்ந்தவற்றால் துன்பம், நெருப்பு, மழை, காற்று, வெப்பம் இவற்றால் சேதம் என்பவை காட்டும்.

**தனு இராசிக்கு 12ம் நிலை:**

வீண்விரயம், அகால உறக்கம், எதிலும் தாமதம், பணபலம் குறைவு, கௌரவம் புகழ் பாதிக்கப்படுதல் தரும்.

**மகரம் இராசிக்கு 11ம் நிலை:**

பதவி உயர்வு, வியாபாரவிருத்தி, இடமாற்றம், தனலாபம், காரியசாதனை பகை வெல்லுதல் என்பன உண்டாகும்.

**கும்பம் இராசிக்கு 10ம் நிலை:**


அதிகமாய் உழகை;க நேரிடுதல், போதிய வருவாய் கிடைக்காமை, உடல் மெலிவு, மற்றும் கௌரவ குறைவும் காட்டும்.

**மீனம் இராசிக்கு 9ம் நிலை:**

பொருள் நஷ்டம், பலரையும் பகைக்கும் நிலை, பலமுயற்சிகள் பலகஷ்டங்கள் மற்றும் தகப்பனார் வழி துயரமும் தரும்.

மேடம், இடபம், கடகம், சிங்கம், துலாம், விருச்சிகம், தனு இராசிகாரர்கள் 2 3 மாதங்களுக்கு ஒரு சனிக்கிழமை விரதம் இருந்து, எள்எண்ணெய் எரித்து, காகத்திற்கு எள்ளுச்சாதம் வைத்துச் சாப்பிடுவது சிறந்த பரிகாரமாய் அமையும். வாழ்வில் மிகமிக கஷ்டம் துன்பம் துயரம் தொல்லைகள் அனுபவிப்பவர்கள் முன்சொன்ன பரிகார வழிபாட்டு முறையினை ஒன்பது தொடர் சனிக்கிழமைகளில் நிறைவாக்குவது நன்மை தரும்.







# வியக்க வைக்கும் பெரியதம்பிரான்

செ.கார்த்திகா
sukuna.k@gmail.com

**"திருக்கோயில் இல்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக் கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பல தளிகளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே"**

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றார் செந்தமிழ் முதுபெரும் மூதாட்டி ஔவையார். சுற்றி எங்கு பார்த்தாலும் வயல் நிலங்களும் அவற்றுக்கிடையில் கோயில்களும் என தென்மராட்சி பிரதேசத்தின் மறவன்புலோ கிராமத்தின் அழ்கே தனிதான். இயற்கை எழில் நிறைந்த இந்தக் கிராமத்தில் உள்ள ஆலயங்களில் ஒன்றுதான் நித்தர்புலம் (நீலசோதி) பெரிய தம்பிரான் ஆலயம். இவ்வாலயத்தின் வரலாறும், வழிபாட்டு முறைகளும் ஏனைய ஆலயங்களுடன் ஒப்பிடுகையில் முற்றிலும் மாறுபட்டதும், ஆச்சரியப்படக்கூடியதுமாகும்.



**குளக்கரையில் ஆலயம் அமைக்கப்பட்ட காரணம்**

பெரும்பாலும் ஆலயங்களிற்கு என கர்ண பரம்பரைக் கதைகள் உள்ளன. இந்த ஆலயமும் அவ்வாறானதொரு கதையுடன் தொடர்புபட்டதுதான்.

"சிவபெருமானின் தீவிர பக்தனான பசுமாசுரன் தன் கடும் தவத்தின் பயனாக, தன் ஆள்காட்டி விரலால் யாருடைய தலையை அவன் தொடுகிறானோ, அவர் எரிந்து சாம்பலாகிவிடும் வரத்தைப் பெற்றான். தனக்கு வரம் கிடைத்த மகிழ்ச்சியில் வரம்கொடுத்த சிவனின் தலையிலேயே கைவைத்து சோதித்துப்பார்க்க முற்பட்டபோது, பசுமாசுரனிடம் இருந்து சிவபெருமான் தப்பித்து ஓடினார். சலவைத் தொழிலை தமது குலத்தொழிலாகச் செய்து வரும் சலவைத் தொழிலாளி ஒருவன் குளக்கரையில் ஆடைகளை சலவை செய்துகொண்டிருந்தாகவும், அப்பொழுது "என்னைக் காப்பாற்றுங்கள, காப்பாற்றுங்கள்" என கூக்குரலிட்டவாறு சிவபெருமான் முதியவர் வேடத்தில் குளக்கரைநோக்கி ஓடி வந்ததை அவதானித்த சலவைத்தொழிலாளி ஆடை நனைப்பதற்குப் பயன்படும் ஒரு வாயகன்ற பாத்திரத்தால் சிவனை மூடி மறைத்தார். அங்கு வந்த பசுமாசுரன் சிவனைக் காணவில்லை என்றதும் அவ்விடத்தை விட்டு அகன்றார். சிறிது நேரத்தின் பின்னர் சாடியைத் திறந்து பார்த்த சலவைத் தொழிலாளி மூடப்பட்ட முதியவர் கல்லாக மாறி இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்ததுடன், தனது உறவினர்களுக்கும் இதனை தெளிவுபடுத்தினார். அன்றிரவே சிவபெருமான் சலவைத் தொழிலளியின் கனவில் தோன்றி குளக்கரையின் அருகிலேயே தனக்கு ஆலயம் அமைத்து வழிபடுமாறு கூறி மறைந்ததாகவும்" வரலாறு உண்டு.

இதனாலேயே சலவைத் தொழில் செய்பவர்கள் தமது குல தெய்வமாக சிவனையே வழிபட்டு வருவதாகவும், அதன்படி மறவன்புலோ கிராமத்தில் வசிக்கும் சலவைத் தொழில் செய்யும் மக்களும் "துறை" எனக் குறிப்பிடப்படும் குளக்கரைக்குப் அருகில் பெரியதம்பிரானுக்குக் ஆலயம் அமைத்து மூலஸ்தானத்தில் சிவனின் உருவத்திற்குப் பதிலாக கல்லை வைத்து வழிபட்டு வருவதாக ஆலய பரியாலன சபையைச் சேர்தவர்கள் கூறுகின்றனர்.

அக்கால வழக்கத்தின் படி சுண்ணாம்புக் கற்களால் நிர்மாணிக்கப்பட்டு 1948ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்ட இந்த ஆலயத்தின் நிர்வாகம் "திரவியம்" என அழைக்கப்படும் சிதம்பரப்பிள்ளையிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், பூசகராகவும் அவரே நியமிக்கப்பட்டார். யுத்த சூழ்நிலை காரணமாக 1999ஆம் ஆண்டு மார்கழி மாதம் இக்கிராம மக்கள் அனைவருமே புலம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களுக்குச் சென்றனர். 2009ஆம் ஆண்டு ஏற்பட்ட சமாதானத்தின் பின்னர், மீண்டும் தமது சொந்த ஊருக்குத் மீள்குடியேறிய இவர்கள், புதிதாக ஆலயம் அமைத்து 2012ஆம் ஆண்டு வைகாசி மாதம் மீண்டும் கும்பாபிஷேகம் செய்தனர். ஆரம்பகால பூசகரான சிதம்பரப்பிள்ளை இறந்ததை அடுத்து தற்போது அவரின் இளைய மகனே பூசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

**பூசை முறை**

ஏனைய ஆலயங்களைவிட சற்று மாறுபட்ட முறையிலேயே இந்த பெரிய தம்பிரான் ஆலயத்தின் பூஜை வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. வாரத்தில் இரண்டு நாட்கள்(புதன், சனி) மட்டுமே மாலை வேளையில் மந்திரங்கள் எதுவுமின்றி மௌனமான முறையில் பூஜைகள் நடைபெறுகின்றன.

தைப்பொங்கல், தைப்பூசம்(புதிர்ப் பொங்கல்) பங்குனி உத்தரம், சித்திரை வருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு, ஐப்பசிப்பரணி, நவாத்திரி, சிவராத்திரி, திருவெம்பாவை என்பனவும் இங்குசிறப்பாக நடைபெற்றாலும், வருடத்தில் இருமுறை நடைபெறும் பெரும்பொங்கல்தான் வெகுசிறப்பானதாகும்.

**பெரும் பொங்கல்!**

ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மற்றும் வைகாசி மாதங்களில் பெரும் பொங்கல் நடைபெறுகின்றது. ஆரம்ப காலங்களில்; பல்லியிடம் கட்டளை கேட்டே இந்தப் பொங்கல் நடைபெற்று வந்தது. குறித்த மாதங்களின் தொடக்கத்தில் ஒரு புதன் கிழமை சிறப்பு பூசை செய்து, தெய்வமாடி பல்லியிடம் கட்டளை கேட்பார்கள், ஆலயத்தின் தெற்குப் பக்கமாக பல்லி சொன்னால் மட்டுமே அந்த மாதங்களில் பொங்கல் நடைபெறும். காலப்போக்கில் பல்லியிடம் கட்டளை கேட்கும் முறை அற்றுவிட்டதாகவும், ஐப்பசி மாதத்தில் வரும் றோகிணி நட்சத்திரத்திலும், வைகாசி மாதத்தில் ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்ற தினத்திலும் இந்தப் பெரும்பொங்கல் நடைபெறுவதாக இவ்வாலயத்தினை நிர்வகித்துவரும் பரம்பரையைச் சேர்ந்த ஜெயந்தி குறிப்பிட்டார்.

**பண்டம் எடுத்தல்!**

பொங்கல் நடைபெறும் நாளன்று மாலைவேளையில் ஆலயத்தைச் சேர்ந்த 5அல்லது 7 பேர் யாருக்கும் தெரியாமல் பெரிய வீட்டிலிருந்து (ஆலய நிர்வாகப் பரம்பரையைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் ஆலய அமைப்பில் சிறிய அறை ஒன்று அமைக்கப்பட்டிருக்கும் இதனையே பெரியவீடு என அழைக்கின்றனர்) வளந்துப் பானை, பூசைப்பெட்டி, பழவகைகள் என மடைக்கு தேவையான பண்டத்தை எடுத்து வருவார்கள். பின்னர். இரவு 7 மணிக்கு முழுமுதற் கடவுளான பிள்ளையாருக்கு பூஜை நடைபெற்று, நள்ளிரவு 12 மணிக்கு சாமப்பூசை நடைபெறும். 12 மணிக்கிடையில் ஒரு புறம் மடைக்கான நைவேத்தியங்கள்(பலகாரங்கள்)

**பொங்கலுக்கு பசுவின் சாணகத்தால் மெழுகிய மண் அடுப்பு, மண் பானை, எரிப்பதற்கு தென்னம்பாளை என்பன பயன்படுத்தப்படும். அதேவேளை, ஆண்களால் மட்டுமே பொங்கல் பொங்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.**




தயாரிக்கப்பட மறுபுறம் அம்மன் வசந்தம், பெரியதம்பிரான் மகிமை, காத்தவராயன் சிந்து நடைக்கூத்து என்ன பக்தர்களால் படிக்கப்படும்.

சாமப் பூஜையினை தொடர்ந்து அதிகாலை 1மணிக்கு பறைமேளம் கொட்ட தெய்வம் ஆடி வளந்துப்பானை அடுப்பில் வைக்கப்படும். ஆலயத்தின் முன் முற்றம் தெரியாதளவிற்கு ஏராளமான பொங்கல் பானைகள் நிறைந்திருக்கும்.

பொங்கலுக்கு பசுவின் சாணகத்தால் மெழுகிய மண் அடுப்பு, மண் பானை, எரிப்பதற்கு தென்னம்பாளை என்பன பயன்படுத்தப்படும். அதேவேளை, ஆண்களால் மட்டுமே பொங்கல் பொங்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.





### கண்ணீறு தெளித்தல்

பொங்கல் பானையில் இடப்பட்ட அரிசி அவிந்ததன் பின்னர், சாதத்தின் மேல் உள்ள நீரை வடித்தெடுத்து, அந்த நீரை ஆலயத்தின் உட்புறமும் வெளிப்புறமும் பூசகரால் தெளிக்கப்படும். இவ்வாறு தெளிப்பதன் ஊடாக கிராமத்திலுள்ள மக்களின் துன்பங்கள் யாவும் தீரும் என்பது இந்த மக்களின் நம்பிக்கை. இதனையே கண்ணீறு தெளித்தல் என்கின்றனர்.

**உரல், உலக்கை என்பன ஆலயத்திற்குக் கொண்டு வரப்பட்டு, ஆலயத்தில் வைத்தே நீரில் ஊறவைத்த அரிசியை இடித்து அரிசி மாவிலேயே மோதகம், களி, பிட்டு, முறுக்கு, பால் உரட்டி போன்ற பிரசாதங்கள் தயாரிப்படுகின்றது. மாவினை ஆண்களே உரலில் இடிப்பார்கள்.**



### இன்றும் கடைப்பிடிக்கப்படும் பண்டைய முறைகள்

உரல், உலக்கை என்பன ஆலயத்திற்குக் கொண்டு வரப்பட்டு, ஆலயத்தில் வைத்தே நீரில் ஊறவைத்த அரிசியை இடித்து அரிசி மாவிலேயே மோதகம், களி, பிட்டு, முறுக்கு, பால் உரட்டி போன்ற பிரசாதங்கள் தயாரிப்படுகின்றது. மாவினை ஆண்களே உரலில் இடிப்பார்கள்.

மோதகம் தயாரிக்கும் முறையும் இங்கு முற்றிலும் வித்தியாசமானதுதான். மோதகத்திற்குத் தேவையான மாவை சிறு சிறு உருண்டைகளாக திரட்டி, கொதி நீரில் அவித்த பின்னரே மோதகத்திற்கான வெளிக்கிண்ணம் பிடிக்கப்பட்டு அதனுள், பயறு, தேங்காயப் பூ, சர்க்கரை சேர்ந்த கலவையை உள்ளீடாகச் சேர்த்துப் பிடித்து மீண்டும் நீராவியில் அவிக்கப்படுகின்றது.

### மடை போடுதல்

மடைப்பண்டம் எடுத்தல் போலவே மடை பரவும் முறையும் இன்று வரை இங்கு காணப்படுகின்றது. மூலஸ்தானத்தில் பெரியதம்பிரானும், பக்கங்களில் பிள்ளையார், முருகன் காளி, வைரவர், நாகதம்பிரான், ஆஞ்சநேயர் போன்ற பரிவார மூர்த்திகளும் இவ்லாயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

அதிகாலை 3 மணியளவில் வளந்துப் பானை அடுப்பைவிட்டு இறக்கப்பட்டு. பொங்கல், பலகாரம். பழங்கள் என ஏராளமான நைவேத்தியங்கள் 20 வாழை இலைகளுக்குமேல் இத்தெய்வங்களுக்கு படைக்கப்படும். இது மடை போடுதல் எனக் கூறப்படுகின்றது.

### வழி வெட்டுதல்

மடை போட்டு பூஜைகள் யாவும் நிறைவடைந்ததும், காலை 5 மணிக்கு பரயலங்களுக்கு (பேய், பிசாசுகள்) பலி கொடுப்பதற்காக குங்குமம் கலந்த பச்சை அரிசி மற்றும் தேசிக்காய் என்பன ஆலயத்தின் நான்கு திசைகள் நோக்கியும் எறியப்படும். (தெய்வமாடும் பக்தர் ஒருவரே இதனைச் செய்வார்). பின் ஆலய வாசலில் இருந்து 100 கிலோ மீற்றர் வரையான தூரத்திற்கு ஆலய வீதியினூடாக (வழி) இளநீர்களை வெட்டிச் செல்வதுடன், இறுதியாக நீற்றுப் பூசணிக்காயை இரண்டாக வாளால் வெட்டி குங்குமம் பூசி விடப்படும். வழி வெட்டும் நிகழ்வுடன் ஆலயத்தின் பெரும் பொங்கல் திருவிழா நிறைவு பெறும்.

### கட்டுச் சொல்லுதல்

இந்த ஆலயத்தில் பெரும் பொங்கலை விட புதன் மற்றும் சனிக் கிழமைகளில் மட்டுமே இரவில் வழமையான பூஜைகள் நடைபெறும் இவ்வாலயத்தில், ஒவ்வொரு மாதத்தின் கடைசிப் (தமிழ் திகதிக்கு) புதன்கிழமை இரவு தெய்வமாடி கட்டுச் சொல்லப்படுகின்றது. ஆலயத்தின் பரிபாலனசபையைச் சேர்ந்தவர்களும் பெரியதம்பிரானுடைய தீவிர பக்தர்களுமான சிலருக்கு மட்டுமே கட்டுச் சொல்வதற்கான அருள் கிடைக்கின்றது.

உடுக்கையின் ஒலிக்க வீரபத்திரர், வைரவர், ஆஞ்சனேயர், காளி, மாரியம்மன் ஆகிய தெய்வங்கள் இவர்களுக்குள் இறங்கியதும் அவர்கள் தெய்வசக்தியால் கட்டுச்சொல்கின்றனர். இந்தக் கிராமத்தில் வசிப்பவர்கள் மட்டுமன்றி வெவ்வேறு இடங்களில் இருந்தும் ஏராளமானோர். கட்டுக் கேட்க வருகின்றனர் என ஆலயத்தின் அருகில் வசிக்கும் முதியவர் ஒருவர் கூறினார். பெரியதம்பிரான் சக்திவாய்ந்த தெய்வம் எனவும், கட்டுச் சொல்வதில் தமக்கு அதிக நம்பிக்கை உள்ளதாகவும் அங்கு வரும் பக்தர்கள் கூறுகின்றனர்.

### தலை வலியைப் போக்கும் சூரிய மூர்த்தி

ஆலயத்தின் முன்பக்கம் சூரியனுக்கு ஒரு சிறிய ஆலயம் உள்ளது. எனினும், இங்கு சூரிய னைக் குறிக்கும் சிலைகள் எதுவும் அற்ற நிலையில், வெறும் சூலங்களே காணப்படு கின்றன. தீராத தலைவலியால் அவதிப்பட பவர்கள் தேங்காய் ஒன்றை எடுத்து தமது தலையை மூன்று முறை சுற்றி வீட்டின் சுவாமி அறையில் வைக்கவேண்டும். பின்னர் ஒரு ஞாயிற்றுக்கிழமை இவ்வாலயத்திற்கு அந்த தேங்காயை கொண்டுவந்து சூரியன் உதிக்கும் வேளை சூரியனை மனதார வணங்கி தேங்காயை உடைத்தால் தலைவலி நீங்குமாம்.

### வெளளை நாவலும், வெளளை நாகமும்

இந்த நீலசோதி பெரியதம்பிரான் ஆலயத்தில் சுமார் 200 ஆண்டுகள் பழைமை வாய்ந்த நாவல் மரம் இன்னமும் பல கிளைகளுடன காய்த்துக் குலுங்குகிறது. பழத்தின் காய் பச்சை நிறமாகவும், பழம் வெள;ளை நிறமாகவும் காட்சியளிக்கும்.

நாவல்மரத்தின் கீழ்ப் பகுதியில் காணப்படும் மரப்பொந்துக்குள் வெள;ளை நிற நாகம் ஒன்று பல வருடங்களாக வாழ்ந்து வருவதாகவும், யாரும் இந்த பாம்மை எளிதில் பார்த்துவிட முடியாதெனவும் மறவன்புலோ கிராம மக்கள் கூறுகின்றனர்.





## தமிழர் தெருத் திருவிழா!

கனடா ரொறன்ரோவில் முதன் முறையாக மிகப் பிரமாண்டமாக “தமிழர் தெரு திருவிழா” நடைபெற்றுள்ளது. ஓகஸ்ட் 29 மற்றும் 31ஆம் திகதிகளில் நடைபெற்ற இத்தெருத் திருவிழாவில் தமிழ் கலை, கலாச்சார வரலாற்று விழுமியங்களை பறைசாற்றும் நடன நிகழ்ச்சிகள் மற்றும் ரொறன்ரோவின் முன்னணி இசைக்குழுக்களது இன்னிசை விருந்துகள் என பல்வேறுபட்ட நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்த திருவிழாவில் முக்கிய அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு கண்டுகளித்தனர்.







# மாணவர்களிடம் உயர்கல்வி பற்றிய அறிவு வளர்ந்துள்ளதா?



S.முகுந்தன்
சிரேஸ்ட வணிகக்கல்வி ஆசிரியர்,
வணிக அபிவிருத்தி ஆலோசகர்.
smugunthan@gmail.com

கல்வியின் சிறப்பைக்கூற ஓர் அதிகாரத்தையே வைத்தர் ஆதி விஞ்ஞானி, தெய்வப்புலவர் திருவள்ளுவர். கல்வியின் மாண்பை உலகப்பேராசான்களும் உயர் இலக்கியங்களும் உணர்த்தியிருக்கின்ற நீண்ட நெடிய வரலாற்றுப் புலத்தில் கல்வியின் தன்மையும், கற்பிக்கும் முறைகளும் கற்றோர்களின் எண்ணிக்கையும் மாறிக்கொண்டே வந்திருக்கின்றன.

காலம் தோறும் கல்வி பற்றிய மக்களின் தேவையும் முக்கியத்து வமும் பல்வேறு பரிணாமங்களில் வடிவெடுத்திருக்கின்றன. ஊயர் கல்வியைப் பொறுத்த வரையில் மாணவராகிய நீங்கள் அறிய வேண்டிய, தெரிய வேண்டிய, புரிய வேண்டிய பல்வேறு தகவல்களையும் இக்கட்டுரையின் மூலம் நாம் வடிக்கிறோம்.

உயர்கல்வியில் என்னென்ன பிரிவுகள் உள்ளன? எந்தப்பிரிவினை எடுத்துப் படித்தால் என்ன செய்யலாம்? எந்தப் பிரிவிற்குள் காலடி எடுத்து வைத்தால் எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்ளலாம்? என்ற அறிவினைப் பெற்ற பின்னரே உயர்கல்வியைத் தேர்ந்தெடுப்பது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகிவிட்டது. இன்றைய காலகட்டத்தில் எமது பிள்ளைகள் படித்த படிப்பிற்கு தொடர்பில்லாத துறைகளில் வேலை செய்கிறார்கள். இந்த நிலைமை பரவியும் வருகிறது. இதன் மூலம் எமது பிள்ளைகள் பல ஆண்டுகளை தமது உயர்கல்விக்கு வீணாக்குவதுடன் பெருந்தொகையான பணத்தையும் செலவு செய்து அது பயனற்றுப் போவதால் பல குடும்பங்கள் மனமுடைந்து வேதனைப்படுவதை எம் கண்முன்னே நாம் காண்கின்றோம்.

எமது மக்கள் தமது பிள்ளைகளின் உயர்கல்வி தொடர்பில் விரைந்தும் துணிந்தும் முடிவெடுக்காது தமது காலத்தை வீண்விரயம் செய்வது துரதிஸ்டவசமானதென்றே கூற வேண்டும். உயர்கல்வி தொடர்பில் எம்மக்களிடம் உள்ள மாயை மறைய வேண்டும். இது இன்றைய அவசியமும் அவசரமுங்கூட பொறியியல் படித்தால் பொருளாதாரம் மேம்படும் எனவும் மருத்துவம் படித்தால் மகத்துவம் என்று எமது மாணவர்கள் நினைப்பதில் தப்பேதும் இல்லை என்பதில் இரு வேறு கருத்துக்கு இடமில்லாவிட்டாலும் இன்றைய அவசர உலகத்தில் உடனடியாக வேலை தேடித்தரக்கூடிய கற்கைகள் தொடர்பிலும் முக்கியத்துவம் கொடுக்கும் காலம் வந்துவிட்டது.

இன்று உலகம் முழுவதும் பெருகிவரும் சனத்தொகையின் வளர்சிக்கேற்ப அவர்களின் அடிப்படைத் தேவைகளையும் அத்தியாவசிய தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுப்பதற்கு பொறியியலாளர்களினதும் மருத்துவர்களினதும் தேவையும் அதற்கு சமாந்தரமாகவே அதிகரித்துக் கொண்டு வருகிறது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமே இல்லை. என்னும் இத்துறைகளை தேர்ந்தெடுக்கும் போது க.பொ.த உயர்தரத்தில் பெற்ற பெறுபேறுகள் மட்டுமல்லாமல் அவற்றின் மீது விருப்பம் இருந்தால் மட்டுமே இவ்வகைக் கற்கைகளை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும். எனினும் கல்வி உலகில் நிகழ்ந்த சில வரவேற்கத்தக்க மாற்றங்களையும் நாம் மறுப்பதற்கில்லை. இதனாலேயே சரியான கல்வியினை தேர்ந்தெடுத்து அதற்குப் பொருத்தமான வேலைவாய்ப்புக்களைத் தேடும் எண்ணம் சமீப காலமாக இளம் சமுதாயத்தினரிடையே ஏற்றம் காணத்தொடங்கியுள்ளது.


சந்தைப்பொருளாதாரம் நடைமுறைக்கு வந்துவிட்ட இன்றைய சூழலில் உள்நாட்டுப் பல்கலைக் கழங்களும், வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்களும் ஏகப்பட்ட கற்கை நெறிகளை உயர்கல்விக்காக வழங்குகின்றன. உதாரணமாக இலங்கையிலுள்ள 14 வரையான தேசிய பல்கலைக்கழகங்களும் வளாகங்களும் 90 வரையான பட்டப் படிப்பு கற்கை நெறிகளை நாடளாவிய ரீதியில் வழங்குகின்றன. இவை கட்டணமின்றி இலவசக்கல்வியின் கீழ் கல்வி ஊக்கத்தொகையுடன் வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) வருடாவருடம் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இது ஒரு ஆரோக்கியமான நிலையாகும். இதனைத்தவிர தொலைநிலைக்கல்வியின் மூலமும் (Online Education) இவை பட்டப் படிப்பினையும் வழங்குகின்றன. இதனை வீட்டில் இருந்தவாறோ அல்லது வேலை ஒன்றில் ஈடுபட்டுக் கொண்டோ கற்கமுடியும். இந்த வாய்ப்புக்களையும் எமது மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கல்வி வணிகமயமாகிப் போய்க் கிடக்கும் இன்றைய காலகட்டத்தில் அந்த வணிகவாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்வதற்கு புற்றீசல்கள் போல பல கல்வி நிறுவனங்கள் போல வருகின்றன. அவற்றில் சில வந்த வேகத்திலேயே காணாமல் போய்விட்டன. இன்னும் சில காற்று வாங்கும் கல்வி நிறுவனங்களாகவும் காணப்படுகின்றன. இதில் மாணவர்கள் என்னமோ நுகர்வோராகவும் (Consumer) கல்வி என்னமோ உற்பத்திப்பொருளாகவும் (Product) ஆகிவிட்டது. கல்வி என்பது ஒரு தானம். அது வியாபாரப் பொருள் அல்ல. சமீப காலமாக அது வியாபாரமாகிவிட்டது. பணக்கார நாடுகளைப் போலல்லாது எமது நாடு நடுத்தரவர்க்க மக்களை அதிகளவில் கொண்ட நாடு ஆகும். 30 ஆண்டுகளுக்குமுன்னர் கல்வி ஒரு சுமையாக இருந்ததில்லை. ஆனால் இன்று Nesary படிக்கும் போதே கல்வி என்பது பெற்றோர்களுக்கு நிதிச்சுமையாகியிருப்பதற்கு என்ன காரணம்? கல்வியைச் சந்தையாக்கி மாணவனைக் கந்தையாக்கும் நிலை மாற்றப்படல் வேண்டும். சுகமான கல்வியை சுமையாக்காது சுவையாக்குவது கல்வியாளர்களின் தலையாய கடமையாகும். இவற்றையெல்லாம் உடைத்தெறிவதற்கு மாணவர்கள் பாடசாலையில் கலவி கற்றுக் கொண்டிருக்கும் சம காலத்திலேயே உயர்கல்வியின் இன்றியமையாத் தன்மையை விளக்குவதற்கு அறிவரங்கங்கள், பயிற்சிப்பட்டறைகள், தன்னம்பிக்கை தன்முனைப்புப் பயிற்சிப் பட்டறைகள், துறைசார் வழிகாட்டல் கருத்தரங்குகள், கல்வி விழிப்புணர்ச்சி நிகழ்வுகள் என்பன துறைசார் நிபுணர்களைக் கொண்டு ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். இதன் மூலம் உயர் கல்வி தொடர்பில் மக்கள் பின்பற்றும் நவீன காலத்திற்கு பொருத்தமில்லாத நம்பிக்கை பிம்பங்கள் மாற வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் மூன்றாம் நிலைக்கல்வியில் (Tertiary Education) முதல்தரக்கல்விகள் எவையென்பதை பெற்றோர்கள், ஆசிரியர்கள், சான்றோர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், கல்வியாளர்கள் அவற்றின் சிறப்புக்களையும் முக்கியத்துவத்தினையும் எமது இளைய தலைமுறைக்கு எடுத்துக்கூற வேண்டும். “சுற்றிலும் பார்க்குமிடமெல்லாம் தண்ணீர் ஆனால் குடிக்க ஒரு துளிகூட இல்லை” என்று நடுக்கடலில் இருந்தபடி பாடினார் ஒரு ஆங்கில கவிஞன். அதேபோல் உயர்கல்வி தொழிற்கல்வி என்றெல்லாம் எங்கும் கல்வி நிறுவனங்கள் நிறைந்து வழிகின்றன. இவற்றில் என்ன படிக்கலாம்? எங்கு படிக்கலாம்? என்ற தேடலோ அல்லது அவை தொடர்பான அறிவோ இல்லாமல் எமது பிள்ளைகள் இருக்கிறார்கள் எனும் போது வருத்தம் மேலிடுகிறது.

நல்ல உயர்கல்விக்கு உத்தரவாதம் நல்ல கல்வி நிறுவனங்களும் தகைமையும் ஆற்றலுமுடைய விரிவுரையாளர்களும் மட்டுமே! எனவே உயர்கல்வியின் மூலம் வளமான எதிர்காலத்திற்கு நம்பிக்கையான முதலீடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

இருபத்தோராம் நுர்ற்றாண்டில் இளைஞர் உடனடியாக வேலை தேடித்தரும் கல்வியே நாடிச்செல்கின்றனர். இந்தப் பாதை விலகலை நாம் விமர்சனம் செய்வதும் சரியல்ல. மாறாக அவர்கள் விரும்பும் வேலைக்கான பாடத்திட்டங்களை உருவாக்கி அதில் அவர்களைத் தகைமைமையுடையவர்களாக்குவது கல்வி நிறுவனங்களின் தலையாய கடமையாகும். ஊதாரணமாக இலங்கையைப் பொறுத்த வரையில் அதிக வருமானத்தை எதிர்பார்க்கும் துறையாக சுற்றுலாத்



**காலணித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னர் தன்னுடைய பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நிலை நிறுத்திக் கொள்வதற்கு சிங்கப்பூர் சுற்றுலாத்துறையே பயன்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.**



**ஹாட்டல் துறையினையும் பயன்படுத்தி இன்றைய இளைஞர்கள் தம்மை வளப்படுத்திக் கொள்ளமுடியும். அதேவேளை அழகுக்கலையில் தகமை பெறுவதன் மூலம் கனடா போன்ற நாடுகளில் நிரந்தர குடியுரிமை அந்தஸ்தினையும் பெற்றுக்கொள்ளலாம்.**



துறை காணப்படுகிறது. இந்தத்துறை அபரிமிதமாக வளர்ந்தும் வருகிறது. எனவே சுற்றுலாத் துறை, விருந்தோம்பல் முகாமைத் துவம் (Hotel Management), அழகுக்கலைக்கற்கைகள் என்பன காணப்டுகின்றன. இவற்றில் டிப்ளோமாபடிப்பினையும், பட்டப் படிப்புகளையும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மேற்கொள்ள முடியும். எனவே பெருகிவரும் ஹோட்டல் துறையினையும் பயன் படுத்தி இன்றைய இளைஞர்கள் தம்மை வளப்படுத்திக் கொள்ள முடியும். அதேவேளை அழகுக் கலையில் தகமை பெறுவதன் மூலம் கனடா போன்ற நாடுகளில் நிரந்தர குடியுரிமை அந்தஸ்தினையும் (PR) பெற்றுக் கொள்ளலாம்.

காலணித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்ட பின்னர் தன்னுடைய பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நிலை நிறுத்திக் கொள்வதற்கு சிங்கப்பூர் சுற்றுலாத்துறையே பயன்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

வடபகுதியைச் சேர்ந்த எமது பிள்ளைகளைப் பொறுத்தவரையில் அகில இலங்கை ரீதியாக க.பொ.த உயர்தரப்பரீட்சைகளில் முதலாமிடம், இரண்டாமிடம், மூன்றாமிடங்களைப் பெற்றுக் கொள்வது இரட்டைப் பெருமைக் குரிய விடயம்தான் என்றாலும் அவர்கள் அறிவுச்செறிவின் முழுமையான பலாபலன்களையும் பெற்றாக வேண்டும். பரீட்சைகளில் சிறப்புப் பெறுபேறுகளையும் முன்னணி இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு சிறப்புக் கௌரவம் வழங்கும் அதேவேளை சிறந்த பெறுபேறுகளை பெறத்தவறிய மாணவர்களை அன்பால் அரவணைத்து அவர்களுக்குப் பொருத்தமான அடுத்த கட்ட உயர்கல்வியை தெரிவு செய்ய கல்வி சமுதாயம் முன்வரவேண்டும். சில பரீட்சை முடிவுகள் சொல்லாமல் சொல்லும் சில தகவல்கள் மிகவும் கவலைக்கு இடமளிப்பவை. சிலமாணவர்கள் தமது பொன்னான காலத்தையும், நேரத்தையும், பணத்தையும் வீணடித்துத் தடு மாறுகிறார்கள், தடம்மாறுகிறார்கள்.

எனவே காலமாற்றங்களையும் அதனடிப்படையில் உருவாகும் மனித தேவைகளையும் கருத்தில் கொண்டுபுதிய கற்கைநெறிகளையும் அதற்கான பாடத்திட்டங்களையும் உருவாக்கி மாணவர்களின் கற்கும், நினைவாற்றல், செயல்திறன்களையும் ஊக்குவிக்கும் கல்விமுறையினூடாக உலக ஊழியச்சந்தைக்கு பொருத்தமானவர்களாக அவர்களை தயார்படுத்துதல் கல்வியியலாளர்களின் கடமையாகும். இவற்றை நாம் மேற்கொள்வோமானால் இலங்கை ஆசிய கல்வி வானிலே ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக ஒளிர முடியும்.

**மாணவனே!**
**சிறகிருந்தால் போதும் சிறியதுதான் வானம்!**
**வா! வானத்தை வசமாக்குவோம்.**



இரத்தினசபாபதி உதயசங்கர்



# ஜனரஞ்சக நடிகன் சிவாஜி ராஜதுரை

வடமராட்சியின் நாடக பாரம்பரியம் குறிப்பிடத்தக்கதாகும். இந்த வகையில் அப்பிரதேசமானது பல்வேறுபட்ட நாடக நடிகர்களை கடந்த காலங்களில் உருவாக்கியுள்ளது. இந்த நடிகர்களை நாம் வகைப்படுத்தும் போது புராதன நாடக நடிகர்கள், இசை நாடக நடிகர்கள், நாட்டுக் கூத்து நடிகர்கள், நாட்டிய நாடக நடிகர்கள், வரலாற்று நாடக நடிகர்கள், சமூக நாடக நடிகர்கள் என்ற வகைக்குள் இவர்களை உள்ளடக்கலாம்.

இவ்வாறான எல்லாத்துறை நடிகர்களும் தங்கள் முறைசார்ந்த அல்லது தொழில்சார்ந்த நடிப்பாற்றல்களால் மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைந்திருந்தார்கள். மேற்போக்கு நடிகர்கள் அனைவரையும் formaldramaticion அல்லது professionaldramatic என்ற இரண்டு வரையறைக்குள் சுருக்கமாக உள்ளடக்கி விட முடியும் .

இந்தவகையில் புகழ் பெற்ற இசை நாடக நடிகர்களாக கரவெட்டி எம்.பி.அண்னாசாமி, பொலிகையூர் அந்திராசி பாலசிங்கம், அல்வாய் சோதிடர் திரு. தம்பிஜயா, கரவெட்டி நற்குணம், பேராசான் கலாமணி போன்ற பலரை குறிப்பிடலாம்.

நாட்டுக்கூத்து நடிகர்களான அல்வாய் விவேகானந்தன், சத்திய கீர்த்தி, அனந்தராஜ், சிவபாதம், கிளி போன்ற இன்னும் பலரை நாங்கள் அடையாளப்படுத்த முடியும்.

நாட்டிய நாடக நடிகர்களில் சில பெண் நடிகர்கள் புகழ்பெற்று விளங்கியிருந்தார்கள். இவ்வாறே வரலாற்று நாடக நடிகர்களாகவும் புராண நாடக நடிகர்களாகவும் பல நடிகர்கள் புகழ்பெற்று விளங்கியிருந்தார்கள்.

சமூக நாடக நடிகர்களுள் எனது வயதுக்கும் நினைவுக்கும் எட்டிய வரை புகழ்பெற்று விளங்கியவர்கள் புத்தூர் யோகராசா, தேவரையாளி வசந்ததேவன், வதிரி லோகனேசன், நகைசுவை நடிகர் மா.சின்னராசா போன்றவர்களை குறிப்பிடலாம்.

மேற்குறித்த எந்த வகைக் குள்ளும் உள்ளடங்காமல் சினிமா றோல் மொடல்களை பின்பற்றி சமூகநாடகங்களில்நடித்தசிலநடிகர்களும் இருந்தார்கள். இவர்களை முறை சாரா நடிகர்கள் என்ற வகைக்குள் உள்ளடக்கமுடியும். அந்தவகையான நடிகர்களுள் முதன்மை பெற்று திகழ்ந்த ஒரு நடிகரே அபிநயசக்கரவர்த்தி ராஜபாட் சிவாஜி ராஜதுரை என்ற ஒப்பற்ற நடிகராவார்.

ஆனால் நான் மேற்கூறிய முன்னையவகை நடிகர்களுக்கு சமூகத்தவர் மத்தியில் கிடைத்த அங்கிகாராம் ராஜதுரை போன்ற நடிகர்களுக்கு கிடைக்கவில்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும். இதற்கு பல்வேறு காரணங்கள் இருக்க முடியும். ஒன்று மரபு சார்ந்த நடிகர்களே உண்மையான நடிகர்கள் என்ற சமூகத்தின் மாயக் கண்ணோட்டம். மற்றையது சினிமா நடிகர்களை கொச்சைத்தனமாக பார்க்கும் கண்ணோட்டம். இவ்வாறு பலகாரணங்களை குறிப்பிடலாம். இவ்வாறான பல காரணங்களால் உண்மையான சினிமா நடிகர்களுக்கு இருந்த மதிப்பும் புகழும் சமூக அங்கீகாராமும் அவர்களை றோல் மொடலாக பின்பற்றி நடிக்கும் உள்ளூர் நடிகர்களுக்கு இல்லாமல் போய் விட்டது. இத்தடைகள் யாவற்றைம் உடைத்தெறிந்து தனக்கேயுரிய ஒரு நடிப்புப்பாணியை ஏற்படுத்தி நடிப்புலகில் புகழ்பெற்றவர்தான் அன்பர் அமரர் சிவாஜி இராஜதுரை அவர்கள். எது எப்பிடியிருந்தாலும் யார் என்ன சொன்னாலும் சிவாஜியின் நடிப்பை அச்சொட்டாக பின்பற்றி புகழின் உச்சிக்குச் சென்றவர் ராஜதுரை. இதை எவரும் மறுக்க முடியாது.

அமரர் அன்பர் ராஜதுரை அவர்களின் நடிப்பை நான் சிறுவயது முதலே பார்த்து இரசித்திருக்கிறேன். ஒருமுறை வதிரி பிள்ளையார் ஆலய முன்றலில் சாம்ராட் அசோகன் பாத்திரத்தில் அவர் உணர்ச்சி பூர்வமாக கம்ப்பிரக் குரலில் பேசி ந்டித்துக்கொண்டிருக்கும் போது நான் பக்கத்தில் இருந்தஎனது அம்மாவிடம் "அம்மா இந்த அங்கிள் மாதிரி தானே சிவாஜியும் படத்தில நடிக்கிறவர்" என்று கேட்டேன். சிவாஜி என்ற சொல்லைக்கூட சரியாக உச்சரிக்க முடியாத வயது அப்போது எனக்கு. உடனே சினம் அடைந்த எனது தாயார் " டேய் குட்டி பிசாசே வாயை மூடட சிவஜி இந்த அங்கிள் மாதிரி நடிக்கிறதில்லையடா.. இந்த அங்கிள் தான் சிவாஜி மாதிரி நடிக்குறார். வாயை மூடிக்கொண்டிருந்து பாரடா" என்று என்னை அதட்டினார்.

இதில் இருந்து ரோல் மொடல்களை பின் பற்றி நடிக்கும் நடிகர்களுக்கு எப்படியான சமூக அங்கீகாரம் இருந்தது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். மேடையில் மட்டும் அல்ல தனது அன்றாட வாழ்வியல் நடையுடை பாவனைகளிலும் அமரர் சிவாஜியின் ஆளுமையையே வெளிப்படுத்திக்கொண்டிருந்தார். அமரர் பின்பற்றிய சிவஜிசம் என்ற நடிப்பியல் கோட்பாடே எனக்கு அவர் மீது ஒரு தனி மதிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தியது.

அனார்கலி திரைப்படத்தில் கல்லறைக்காட்சியில் மன்னன் சலீம் முழங்கித்தள்ளும் உருக்கமாண வசனங்களை அப்படியே சிவாஜியின் குரலில் அரை மணித்தியாளங்களுக்கு மூச்சு விடாமல் முழங்கித்தள்ளி விடுவார் அன்னார். என் மாசற்ற சோதிமலரே, மங்காத ஒளி விளக்கே என்று வசனங்கள் உணர்வு பூர்வமாக வெளிப்படும்.

இவ்வாறு அன்பர் அவர்கள் சிவஜியை பின்பற்றி நடித்த பல நாடகங்களை நான் பார்த்து இருக்கின்றேன். அவற்றுள் சோக்கிரட்டிசின் சாம்ராட் அசோகன் கம்லட் ஒதல்லோ. இதுபோல இன்னும் பல நாடகங்கள் உள்ளடங்கும். இவை தவிர நூற்றுக்கும் மேற்பட்ட மேடைகளில் தனி நடிப்பாற்றலை வெளிப்படுத்தி இரசிகர்களின் பாராட்டையும் பெற்றுள்ளார். கூடுதலாக மேடைகளில் ஆரம்பத்தில் தோன்றும் போது பின் புறமாக திரும்பியே நிற்பார். இதனால் சிலர் "பார்வையாளர்களிற்கு முதுகைக்காட்டிக் கொண்டு நிற்கும் இவரும் ஒரு நடிகனா" என்று நையான்டி செய்வர்கள். ஆனால் அப்பிடியே சிவாஜி பானியில் ஒற்றைக்காலில் முன்புறமாககைகளை விரித்து திருப்பி கம்பீரமான வசனம் ஒன்றை பேசி நடித்து இரசிகர்களை அசத்தி விடுவார்.

இது மட்டும் அல்ல. சிவாஜி நடித்த எத்தனையோ சினிமா பாடல்களுக்கான அபிநயங்களை அப்பிடியே அச்சொட்டாக நடித்து அசத்தி விடுவார். இவற்றுள் "பூ மாலையில் ஒரு மல்லிகை, அழகுத்தெய்வம் மெல்லமெல்ல, ஓ வெண்ணிலா, முல்லைமலர் மேலே மொய்க்கும் வண்டு போலே, யாரடி நீ மோகினி போன்ற பாடல்களுக்கு " அவர் அபிநயம் செய்து அசத்திய அந்த நாள் காட்சிகள் இன்றும் எனது நெஞ்ச திரையில் நிழல் ஆடுகின்றது.

1977ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் பிரச்சாரங்கள் வடக்கு கிழக்கில் தீவிரமாக நடை பெற்ற வேளையில் "அயீமா" என்றோரு புரட்சி நாடகம் வதிரியூர் இளைஞர்களாள் தயாரிக்கப்பட்டு குடாநாடு பூராகவும் மேடைய் யேற்றப்பட்டுக் கொண்டிருந்தது. இதேகாலப்பகுதியில் அளவெட்டி இளைஞர்களின் "வட்க்கும் தெற்கும்" என்ற நாடகமும் திரு .எம்.பெருமாளின் எதிரும் புதிரும் போன்ற நாடகங்கள் வடக்கு கிழக்கில் கொடிகட்டி பறந்துகொண்டிருந்தன. இம்மூன்று நாடகங்களுக்கும் இடையில் பலத்த போட்டி நிலவிக்கொண்டிருந்தது.

அமரர் அவர்கள் தனது தொழில் நிமித்தம் கூடுதலான காலங்களை தென்னிலங்கையிலேயே கழித்தார். இதனால் சிங்கள பேச்சுப் புலமையும் இவரிடமிருந்தது. பண்டித சிங்களம் முதல் பாமரசிங்களம் வரை அறுத்துறுத்து பேசி சிங்கள மக்கள் மத்தியிலும் செல்வாக்கை பெற்றார்.

எனவே ரோல்மொடல்களை பின்பற்றி நடிக்கும் நடிகர்களை நாம் சாதாரணமாக எடை போட்டு விட முடியாது. கம்பனான கம்பனே ரோல்மொடல்களை பின்பற்றித் தான் தமிழ் இலக்கியத்தில் நீங்காத இடத்தை பெற்றுள்ளார்.

இவ்வாறான ஓர் ஒப்பற்ற கலைஞன் சில வருடங்களுக்கு முன்பாக எம்மவர்களின் ஆயுதத்துக்கே இரையாகி உயிர்நீர்த்தமை தமிழன்னையின் இதயத்தில் விழுந்த பலமான அடியாகும்.

சிவாஜி இராஜதுரை அவர்கள் எம்மைவிட்டு பிரிந்து பல ஆண்டுகளானாலும் அன்பர் பின்பற்றிய சிவாயிசம் என்ற நடிப்பியற் கோட்பாடு எம் இதயங்களில் நீங்காது இருக்கும்.



# இணையத்தில் தற்கொலைக்கு வழி கண்டுபிடித்த யுவதி

இந்தியாவின் பெங்களூரை சேர்ந்த பஷன் டிசைனரான இஷா கன்டா (26) என்ற இளம் பெண்ணின் தற்கொலை ஊடகங்களில் முக்கிய இடத்தை பிடித்திருக்கிறது. அனைவரும் வாழ்வதற்கு வழிவகைகளை தேடிக் கொண்டிருந்த, இந்தப்பெண் தற்கொலை செய்வதெப்படி என இணையங்களில் தேடிப்படித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். தற்கொலை செய்வதற்கு 48 மணி நேரங்களுக்கு முன்பிருந்தே, இஷா எப்படி சிறப்பான வகையில் தற்கொலை செய்துகொள்வது என்பதை அறிய கூகுளில் தேடி பல்வேறு வெப்சைட்டுகளை படித்துள்ளார். ஒன்றல்ல, இரண்டல்ல மொத்தம் 89 வெப்சைட்டுகளை பார்த்துள்ளாராம்.. பெங்களூரில் உயர்ந்த கட்டிடம் எங்குள்ளதென்றெல்லாம் தேடி, கடைசியில் 13 மாடி கட்டிடொன்றிலிருந்து குதித்து தற்கொலை செய்துள்ளார். தற்கொலைக்கான சரியான காரணம் இன்னும் வெளியாகவில்லை. கிடைத்த தகவலின்படி, அவரது தற்போதைய நண்பரை கைவிட்டு, வேறு ஒருவரிற்கு திருமணம் செய்து வைக்க பெற்றோர் முயன்றனர் என தெரிகிறது.



# ருவாண்டாவில் கொடுமை

கிழக்கு ஆப்பிரிக்க நாடான ருவாண்டாவில் உள்ளது கிடாராமா சிறை. அந்த சிறையில் அதிகபட்சம் 600 கைதிகளை மட்டுமே அடைக்க முடியும். அப்படி இருக்கையில் அந்த சிறையில் 6 முதல் 7 ஆயிரம் பேர் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே கூட்ட நெரிசலாக உள்ள சிறையில் கைதிகளுக்கு போதிய வசதி இல்லை. இந்நிலையில் கைதிகளுக்கு இடையே அடிக்கடி சண்டை ஏற்படுகிறது. அப்படி சண்டை ஏற்படும்போது கைதிகள் ஒருவரையொருவர் தாக்கி சக கைதியை கொலை செய்துவிடுகிறார்கள். இறந்த கைதியின் மாமிசத்தை சாப்பிட்டு பிற கைதிகள் உயிர் வாழும் அவலம் ஏற்பட்டுள்ளது. அந்த சிறையில் போதிய வசதி இல்லாததால் தினமும் 7 முதல் 8 கைதிகள் வரை உயிர் இழப்பது தெரிய வந்துள்ளது.



# விவசாயிகளுடன் 'ஹண்டிகிராஸ்' விளையாடிய அதிகாரி

தமிழகத்தின் தர்மபுரி மாவட்டத்தில் நடந்த கொடுமையை பாருங்கள். உள்ளூரில் நடந்த விவசாயிகளுடனான கலந்துரையாடலொன்றில் கலந்து கொண்ட பெண் அதிகாரி தனது கைத்தொலைபேசியின் 'ஹண்டிகிராஸ்' விளையாடியுள்ளார். கூட்டத்தில் விவசாயிகள் உட்கார்ந்திருக்க, கலந்துரையாடலிற்கு வந்து எதிரே உட்கார்ந்திருந்த பெண் அதிகாரி 'ஹண்டிகிராஸ்' விளையாடியதை தொலைக்காட்சியொன்று படம்பிடித்து வெளியிட்டுள்ளது.

# அப்பிளிற்கு எதிர்க்கடை போடும் சியாவுமி!

சியாவுமி நிறுவனம் அடுத்த வருடத்தின் தொடக்கத்தில் தனது புதிய தயாரிப்பாக மடிக்கணினியை (லிணீஜ்□ஷீஜ்) வெளியிடவுள்ளது. தற்போது ஸ்மார்ட்போன் உற்பத்தியில் கொடிகட்டி பறக்க ஆரம்பித்த நிறுவனம், மடிக்கணினி உலகத்திற்குள் புகவுள்ளது அப்பிளை சற்று யோசிக்க வைக்கும். ஸ்மார்ட்போன் உற்பத்தியில் சிறிது காலத்திலேயே சீனா, இந்தியா சந்தைகளில் அப்பிள்,சம்சுங் வகைகளை பின்னுக்குத்தள்ளி முதலிடத்தை சியாவுமி பெற்றுள்ளது. மடிக்கணினி உற்பத்திக்கான ஆரம்ப வேலைகளில் சியாவுமி இறங்கிவிட்டது. சம்சுங் எலக்ரோனிக்ஸ் நிறுவனத்துடன் Memory chips தயாரிப்பு ஒப்பந்தம் செய்துவிட்டது.சியாவுமியின் கணினிகள், அப்பிளின் MacBook Air, லெனோவாவின் ThinkPad கருவிகளிற்கு கடும் போட்டியளிக்கும் விதத்தில் தயாரிக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது. சியாவுமியின் சிறப்பே அனைத்தையும் மலிவு விலையில் கொடுப்பதுதான். அது மடிக்கணினியிலும் தொடர்ந்தால் அப்பளி, லெனோவா போன்ற நிறுவனங்கள் பெரும் சவாலை சந்திக்கும்.







# மலேசியன் ஏர்லைன்ஸ் அவசரம்

நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் இருந்து மலேசிய தலைநகர் கோலாலம்பூர் கிளம்பிய மலேசியன் ஏர்லைன்ஸ் விமானம் எம்.எச்.19ல் உள்ள கழிப்பறைகள் பழுதடைந்ததால் ஆனதால் சென்னை விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. கழிப்பறைகள் சரி செய்யப்பட்ட பிறகு விமானம் சென்னையில் இருந்து கோலாலம்பூருக்கு கிளம்பிச் சென்றது.

# பெரிய "படிப்ஸ்" ஆ இருக்கானே!

அமெரிக்காவில் "எம்மெட்" என்கின்ற இந்த 10 மாதமே ஆன குட்டிப் பையனுக்கு புத்தகத்தைப் படித்து காட்ட ஆரம்பித்து விட்டால் போதும், கீழே வைக்க விட மாட்டேங்கிறான். ஒரு சுவாரசியமான புத்தகத்தை மூடிவைக்கும் தருவாயில் நமக்கு எப்படி கஷ்டமாக இருக்குமோ, அது போலவே எம்மெட்டுக்கும் கதைப் புத்தகம் முடிந்துவிட்டால் உடனே கண்ணீர் வந்துவிடுகிறது. புத்தகத்தை அவனது அம்மாவோ அல்லது அப்பாவோ மூடி விட்டால் உடனே கதறி அழுகிறான்.



# ஆசையை துறக்கும் இலங்கையர்

என்னமோ நடந்து...
நம்மவர்களிற்கு திருமணத்தில் ஆர்வம் குறைந்து விட்டதாம். நாம் சொல்லவில்லை, புள்ளிவிபரங்கள் சொல்கின்றன. சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கை இதை வெளிப்படுத்தியுள்ளது. 2011 இல் 200,314, 2012 இல் 198,710, 2013 180,760, 2014 இல் 175,728 பதிவுத் திருமணங்கள்தான் நடந்திருக்கிறதாம். நம்மாட்களிற்கு என்னாயிற்று?

இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 06.09.2015 அன்று வெளியிடப்பட்டது